Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 18.00
நவ. 17 - 23, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 640

## பிரசார மேடைகளில் வெடிக்காத தேர்தல் குண்டுகள்

## கண்காணிப்பாளர்களை திணறடித்த வன்முறைகள்



ரேணுகா மேனன் அம்மாவாகிறார் !

ஆண்களை வசீகரிக்கும் பெண்களின் வாசனைகள்

## மனக் கவலை மாற்றுவோம்

இவ்வுலக வாழ்விலே நிம்மதியுடன் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் மிகக் குறைவானவர்களே. இவ்வாறு மனிதர்களாகிய நாம் நிம்மதியை இழந்து தவிப்பதற்கு பல காரணங்கள் உண்டு. இவர்கள் தமது கவலையைத் தீர்த்து நிம்மதியைப் பெற பல்வேறு வழிகளை நாடிச் செல்கின்றனர். பலருக்கு வறுமை காரணமான மனக் கவலை. அதனால் அவர்கள் தமக்குச் செல்வம் கிடைத்தால் நிம்மதியாக வாழலாம் என்று கருதி பணத்தைத் தேட முற்படுகிறார்கள். செல்வச் செழிப்புடன் வாழ்பவர்கள் தமது செல்வங்களை எப்படிப் பாதுகாப்பது என்றும், ஏனைய குடும்பச் சச்சரவு, நோய்கள் மூலம் அல்லற்பட்டு தமது நிம்மதியை இழந்து தவிக்கிறார்கள். இன்னும் சிலர் உற்றார், உறவினர்கள் எனக் குடும்ப வாழவில் பாசங்களுக்குக் கட்டுண்டு அதனால் ஏற்படும் சச்சரவுகளால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து விடுபட்டு தனிமையில் வாழ்ந்தால் நிம்மதி கிடைக்கும் என்று கருதுகிறார்கள். ஆனால் தனிமையில் வாழ்பவர்களோ சொந்த பந்தங்களுடன் வாழ்ந்தால் நிம்மதி கிடைக்கும் என்று கருதி உறவுகளைத் தேடிக்கொள்ள முனைகிறார்கள். இன்னும் சிலர் பதவி, புகழ் கிடைத்தால் நிம்மதி கிடைக்கும் என்றும், வேறு சிலர் போதைப் பொருட்கள் மூலம் தமது கவலை தீரும் என்றும் அதை நாடுகிறார்கள்.

இப்படி சுற்றிச் சுற்றி உலக சிற்றின்பங்களிலும் ஆடம்பர வாழ்க்கையிலும் தாம் என்ற ஆணவத்திலும் கட்டுண்டு நரகத்திற்குள்ளேயே சுவர்க்கத்தை தேடிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகையவர்கள் தமக்கு நிகராக ஒப்பிட முடியாத மேலான தலைவனாகக் கருதக்கூடிய இறைவனுடைய திருவடிகளைத் தஞ்சமென நினைத்து வழிபடுவதன் மூலமே தம்முடைய மனக் கவலைகளைப் போக்கி, நிம்மதியைப் பெறலாம். இதைவிட வேறு வழிகளை நாடிச் செல்வது பயனற்ற செயலாகும்.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது."

**- சிவா, வவுனியா.**

# ஆன்மீகம்



## இரட்சிப்பின் நிச்சயம்

இவ்வுலகில் இருக்கையிலேயே நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று நிச்சயமாக எவரும் சொல்லக் கூடுமா? ஆம். இரட்சிப்பு என்பது தெளிவான திட்டவட்டமான ஓர் அனுபவமாகும். அப்போஸ்தலனாகிய பவுல் "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு." (எபே- 2.8) என்கின்றார்.

தேவன் இரட்சிப்பாகிய இந்த ஈவை ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்குக் கொடுத்திருக்கின்றார். கொடுக்கின்றார். இயேசுக் கிறிஸ்து சிலுவையில் நமக்காகச் செய்து முடித்த காரியம், பாவிகளாகிய நமக்கு நித்திய பாதுகாப்பைக் கொடுக்கின்றது.

'நீ எவ்வளவு விசுவாசிக்கின்றாய் என்பதல்ல, நீ யாரை விசுவாசிக்கின்றாய் என்பதுதான் முக்கியம். நீ கண்ட இயேசுக் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வை. உனக்கு இரட்சிப்பின் நிச்சயம் உறுதி.'

**-எஸ்.தேவகுமார், இராகலை.**

## ஒப்பாரிக்கு தண்டனை

ஒப்பாரி வைத்து அழக்கூடியவள் மறுமை நாளில் நாய் ஊளை இடுவது போல் ஊளை இடுவாள். ஒப்பாரி வைத்து அழுகின்ற வழக்கம் காபிர்களின் வழக்கமாகும்.

ஒப்பாரி வைத்து அழுகிறவள், அவள் பக்கம் இருப்பவர், அவள் அழுவதைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள், கேட்டுக் கொண்டிருப்பவர்கள் அனைவருக்கும் இறைவன், அமரர்களின் சாபம் ஏற்படுகிறது.

ஒப்பாரி வைத்து அழுதவள் தான் மரணிப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்னே மன்னிப்புக் கோரவில்லையானால், அது பாவமாகி, அதன் காரணமாக - மன்னிப்பை ஏற்றுக்கொள்ளாத நிலையில் அவள் இறந்துவிடுவாளேயானால், மஹ்ஷர் மைதானத்தில் நெருப்புப் பாவாடை உடுத்தியவளாக மண்ணறையிலிருந்து எழுப்பப்படுவாள்.

-அல்ஹதீஸ்

குறிப்பு :- கண்ணீர் வடிப்பதில் குற்றமில்லை. மார்பில் அடித்துக்கொண்டு கதறி அழுவது பெரும் குற்றமாகும்.

**-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07.**

## கவிதைப் போட்டி இல.637



பரிசுக்குரிய கவிதை

### சிந்தையுண்டோ?

கொளுந்து விட்டெரியும்
தீவிரவாதத்
தீயினால்
நாட்டைக் கொளுத்திக்
குளிர் காயும்
(ஏக) தலைவனுக்கு...
பாலகனின்
பற்றியெரியும்
வயிற்றுப் பசியெங்கே
தெரியப் போகிறது!!!

*-கமால்தீன் அல்.ஆஸாத், ஏறாவூர் - 03.*

### எங்கள் சிறுவர்களும்....

இருண்ட கண்கள்
ஏக்கப் பார்வை
ஒட்டிய வயிறு
உருக்குலைந்த மேனி!
ஏட்டிக்கும் போட்டிக்கும்
எப்போதும் அழைந்தால்
எதியோப்பிய
சிறுவன் மட்டுமல்ல,
எங்கள் சிறுவர்களும்
இப்படி ஆகலாம்!

*-நா.ஜெயபாலன், பிபிலை.*

### காத்திருக்கிறோம்!

விதம் விதமான
விருந்துபசாரங்கள்
செய்கின்றார்கள் அங்கு,
பசியால் உடல் மெலிந்து
வாடிக்கிடக்கின்றோம்
இங்கு.

*-து.விஜயேந்திரன், யாழ்ப்பாணம்.*

### மரபுரிமை

வென்றாலும்
தோற்றாலும்
அவர்களுக்குத்தான்
அட்சயப் பாத்திரம்
நமக்கோ என்றும்
பிட்சகர் பாத்திரந்தான்.

*-அ.சந்தியாகோ, கண்டி.*

### வாழ்க்கை

ஏந்துகின்றான் இவனோ கோப்பை
ஏழைக்கோ அதுவே வாழ்க்கை
கிடைக்குமா இவனுக்குப் பிச்சை
இதனால் கிட்டுமா இவனது இச்சை?

*-எஸ்.பிரதீஷ், கொழும்பு - 13.*

### மண் விழுந்தது!

பொருள் சேர்க்க உன்
தலைவர்
நாட்டு வளங்களை
நாசமாக்கியதால்
உன் சோற்றுக்
கோப்பையிலும்
மண் விழுந்து
போயிற்று.

*-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.*

### அனாதையோ?

உண்டிப் பசிப்
போக்க
ஊணைத் தந்தீர்
ஊட்டி விடும்
உறவுத் தாயை
ஏன்
தர மறுத்தீர்?!!

*-திருமலை நதார், ஜின்னாநகர்.*

### ஏக்கம்....

என்னடா தம்பி!
தலையில் கையுடனும்,
ஏந்திய தட்டுடனும்
ஏன் இந்த ஏக்கம்?
இத்தாக்கத்தின் காரணம்
உன் தந்தையா? - இல்லை
உன் அரசாங்கமே - ஆம்.
ஏந்திய தட்டுடனும்,
என் ஏக்கத்தின் காரணமும்,
அதே அரசாங்கமே!

*-எஸ்.விவியன் றிச்சாட், மன்னார்.*

### ஆதலால், இனி....

உங்களால்
என் கைகளுக்கு
மறுக்கப்பட்டது
உணவுகள் மட்டுமல்ல.
உரிமைகளும் தான்!

*-இரா.தேம்பாமாலா, ஹட்டன்.*

### அரிசியல்!...


தேர்தல் காலத்தே
தேடிவந்து கையேந்தின்
அரசியலாம்....
ஊர்மனை தெருவில்
உணவுக்காய் வேண்டின்
அது அரிசிக்காகவோ!

*-ம.பிறிஸ்கா, மன்னார்.*


### கோலங்கள்

பிறந்ததோ நடுத் தெருவில்
வாழ்வதோ அகதி முகாமில்,
நிரம்புவதோ அரை வயிறும்
கால்
வயிறும்,
யாருக்கு ஓட்டுப் போட்டால்
விடியும் இந்த நிலை?
சிந்திக்கிறானோ இவன்!!!

*-ஆர்.எதிஸ்ரா, வத்தளை.*




## கவிதைப் போட்டி இல.640



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 23.11.2005.

கவிதைப் போட்டி இல.640
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772,
கொழும்பு.

# உங்கள் பக்கம்

## கிண்ணியா அண்ணல் நகர் உப தபாலகத்தின் அவலநிலை

கிண்ணியா பிரதேசத்தில் அமைந்துள்ள ஐந்து உப தபாலகங்களில் அதிக எண்ணிக்கையிலான சனத்தை அதாவது அதிகூடிய குடும்பத்தைக் கொண்டு இயங்கி வரும் ஒரேயொரு தபாலகம் இந்த அண்ணல் நகர் உபதபாலகம் எனலாம். அதாவது சுமார் 12500 குடும்ப அங்கத்தவர்கள் இதனால் பயன்பெறுகின்றார்கள். அப்படிப்பட்ட இந்தத் தபாலகம் கடந்த ஒரு வருட காலமாகச் சிதைவுற்றுக் காணப்படுகிறது. அதாவது இந்தத் தபாலகம் அமைந்துள்ள இடத்தில் ஆரம்பத்தில் ஒரு பாரிய பொதுக் கிணறு கட்டப்பட்டு இருந்தது. அதை உடைத்து விட்டுத்தான் உப தபாலகத்தை அமைத்தார்கள். அதன் விளைவாக தபாலகத்தின் கட்டடத்தினுள் பெரிய பெரிய குழிகள் விழுந்துள்ளன. கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டடத்தின் உள்பகுதி பள்ளமாய் அதாவது படுகுழியாக மாறி இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதனால் அங்கு அரச கடமையில் ஈடுபட்டு இருக்கும் தபாலதிபர் அச்சம் தெரிவித்துள்ளார். இதைப்பற்றி பிரதேச செயலாளர் கவனத்திற்குக் கொண்டுவந்தும் அவர் அதைக் கவனத்தில் கொள்ளாததே கவலைக்குரிய விடயம். இதை அப்படியே விட்டு விட்டால், காலம் நேரம் தெரியாமல் அக் கட்டடம் விழுவதற்கு சாத்தியம் உண்டு.

எனவே, இதை தகுந்த அதிகாரிகள் கவனத்தில் கொண்டு தக்கதோர் முடிவை எடுக்குமாறு பொது மக்கள் சார்பாக வேண்டிக் கொள்கிறேன்.

இத் தபாலகத்திற்கு மின்சாரமும் கிடையாது. இதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

**-ஜே.பிரோஸ்கான், கிண்ணியா.**


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


# வாசகர் சாலை

## பல்சுவை விருந்து!

வாரம் ஒருமுறை வலம் வரும் முரசே!

உன் வருகைக்கு வந்தனங்கள். அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களுக்கு அன்றாடம் அலசும் அரசியலும், பால் போன்ற பாலகர்கள் படித்து மகிழ பாப்பா முரசும், குறும்பு செய்வோரைக் குணப்படுத்த குறுக்கெழுத்துப் போட்டியும், காதல் இரசனையை ரம்மியமாக இரசிக்க தேன் கிண்ணமும், கவலைகளை மறந்துவிட காதலர்களின் சினி விசிட்டும், எடுத்த முயற்சி வெற்றி பெற இராசி பலனும், சிரிப்போரை சிந்திக்க வைக்கும் சிந்தியா பதில்களும், வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பதற்கிணங்க காதில பூ கந்தசாமியின் கற்பனைக் கலக்கலும் தெட்டத்தெளிவாகத் தரும் தினமுரசே, உனக்கு எங்கள் வாழ்த்துக்கள் என்றென்றும் உரித்தாகட்டும்.

*-கமல்ராஜா, தில்லையடி, புத்தளம்.*

## வளர்க பணி!

தினமுரசுக்கு வணக்கம்!

உன்னுடைய அனைத்து செய்திகளுமே நன்றாய் இருக்கின்றது. இதனை நான் தவறாமல் பார்த்துக் கொண்டு வருகின்றேன். வளர்க உன் பணி.

*-எஸ்.சஹானி, கலாவெவ.*

## எல்லாம் சூப்பர்!

வண்ண வடிவழகுடன் வாரா வாரம் வந்து நிற்கும் வார முரசே! உனக்கு எனது முதற்கண் முத்தங்கள். நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் Very Super. உன்னை வாங்காவிடின் என் இதயம் துடிக்க மறுக்கின்றது. உன்னைப் பார்க்காவிடின் என் கண் இமை மூட மறுக்கின்றது. அன்பே முரசே! நீ எமக்கு அள்ளி வரும் தேன்கிண்ணம், தொடர் கதைகள், சினிமா, சிறுகதைகள், லேடீஸ் ஸ்பெஷல் போன்றவை Very Very Super. என் அருமை முரசே, இன்னும் உன் புதிய பூக்களை பூத்திடுவாயாக. உன் சேவை வளர எனது வாழ்த்துக்கள்.

*-எஸ்.சிவதர்சினி, சங்கானை.*

## நன்றி!

என் இனிய முரசே!
என் இதய வானில்
சிறகடித்துப் பறக்கும்
சிநேகிதத்தின் சிகரம்
முரசே, சிந்தித்த சின்ன
எண்ணங்களைச் சிதறாமல்
சிறுக எழுதி அனுப்பி
வைத்தேன்.
தட்டிக்கழிக்காது, அதை
தடம் பதிக்க வைத்து,
சந்தோஷ வானில் என்னை
மிதக்க வைத்த எனதன்பின்
முரசே, சிரம் தாழ்ந்த
நன்றிகள்.

*-எம்.ஏ.ஷபீனா, கல்முனை.*

# சர்வதேச வலைக்குள் புலிகளைச் சிக்க வைக்கும்
# தேர்தல் முடிவு; பகிஷ்கரிப்பினால் ஏற்பட்ட ஆபத்து

## -அரசியல் ஆய்வாளரின் ஆரூடம்

மஹிந்த வெற்றி பெற்றால் யுத்தம், ரணில் வெற்றி பெற்றால் சமாதானம் என்பதுதான் பெரும்பாலான தமிழ் ஊடகங்களினதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் பலரினதும் கருத்தாக இருந்தது. ஆனால் புலிகளின் அபிப்பிராயமோ வித்தியாசமாக இருந்தது. ரணில் வெற்றிபெற்றால் சந்திரிகா அம்மையாரோடு சேர்ந்து தமக்கெதிரான நடவடிக்கைகளைப் பலப்படுத்துவாரென்று நினைத்துக் கொண்டார்கள். அதனால்தான் ஜனாதிபதித் தேர்தலில் அக்கறையில்லையென்று புலிகள் அறிவித்தார்கள் என்று சொன்னார் அரசியல் விமர்சகர் பெரியதம்பி மணிவண்ணன்.

மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளோடு செய்துகொண்ட உடன்பாடு, முரண்பாடுகளுக்கு வழிவகுக்குமென்பது புலிகளின் நினைப்பு. ஓர் யுத்தச் சூழல் உருவாகினால் அதுவே தமக்கு வாய்ப்பு என்பது அவர்களின் அனுமானம். நாமாக யுத்தத்துக்குப் போக மாட்டோம். யுத்தமென்று வந்தால் விடவும் மாட்டோமென்பதே புலித் தலைவர் பிரபாகரன் கடந்த கார்த்திகைத் தின உரையில் கூறிய முக்கிய விடயம். மஹிந்த வெற்றி பெற்றால் யுத்தம் ஏற்படும். அதுவே தமக்குச் சாதகமாக அமையுமென்ற குருட்டு நம்பிக்கையிலேயே தேர்தலில் அக்கறையில்லையென்று தேர்தலைப் பகிஷ்கரிப்பதுபோல் அறிவித்திருக்கிறார்கள். சமஷ்டித் தீர்வையே சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் ரணில் விக்கிரமசிங்கவும் வற்புறுத்துவதால் தீர்வுக்கான முயற்சிகளை அவர்கள் முன்னெடுப்பார்களென்ற பயம் புலிகளுக்கு இருக்கிறது. எனவேதான் அவர்கள் ரணிலை ஆதரிக்கவும் தயங்குகிறார்கள் என்று கூறினார் மணிவண்ணன்.

ரணில் விக்கிரமசிங்கா பதவிக்கு வந்தால், புலிகளுக்கெதிரான சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் உருவாக்கப்படுமென்ற பயமும் புலிகளுக்கு இருக்கிறது. இலங்கையில் பதவிக்கு வந்தவர்களில் மிக மோசமான ஜனாதிபதி சந்திரிகாவே என்பதும் புலிகளின் கணிப்பீடு. அதாவது வெற்றிகரமாக சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் புலி எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றவர் அவர். தேர்தலைப் பகிஷ்கரிப்பதா இல்லையா என்பது புலிகளின் சொந்த விடயமே. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூடியவர்கள் யாரென்பதை இனங்கண்டு அவர்களுக்கு வாக்களித்துத் தானாக வேண்டும். புலிகள், மஹிந்தவை ஆதரிக்காவிட்டாலும், மஹிந்த வெற்றி பெற்றால் தமக்கு வாய்ப்பு என்று கருதுகிறார்கள். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பிரச்சினைத் தீர்வுக்கு மஹிந்தவின் வெற்றி வழிவகுக்குமென்று உறுதியாக நம்புகிறது ஆனால் புலிகளோ, பிரச்சினை தொடருவதற்கு மஹிந்தவின் வெற்றி உதவுமென நம்புகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

## வவுனியா பாடசாலைகளுக்கு அலுமாரிகள் கையளிப்பு

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சரும் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள், வவுனியா மாவட்டத்திலுள்ள 16 தமிழ் பாடசாலைகளுக்கு அண்மையில் இரும்பு அலுமாரிகளை கையளித்துள்ளார். தமிழ்ப் பாடசாலைகளின் தளபாட மற்றும் உபகரணப் பற்றாக் குறைகளை நீக்கும் முகமாக அமைச்சர் முன்னெடுத்து வரும் வேலைத்திட்டத்தின் கீழ் அலுமாரிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி இலுப்பைக் குளம் றோமன் கத்தோலிக்க அரச தமிழ்க் கலவன் பாடசாலை, முகத்தான்குளம் அரச தமிழ்க் கலவன் பாடசாலை, செட்டிக்குளம் பாரதிபுரம் வித்தியாலயம், கண்ணாட்டி, கணேசபுரம் சண்முகானந்தா வித்தியாலயம், நித்தியநகர், நித்தியநகர் அரச தமிழ்க் கலவன் பாடசாலை, பூவரசன் குளம், நீலியா மோட்டை சரஸ்வதி வித்தியாலயம், பூவரசன் குளம், தாலிக்குளம் அரச தமிழ் கலவன் பாடசாலை, கந்தபுரம் வாணி வித்தியாலயம், காத்தார் சின்னக்குளம் அரச தமிழ்க் கலவன் பாடசாலை, மதீனா நகர் மதீனா வித்தியாலயம், சமனங்குளம் அரச தமிழ்க் கலவன் பாடசாலை, கல்நாட்டிய குளம் அரச தமிழ் கலவன் பாடசாலை, கோமரசன்குளம், மகா வித்தியாலயம், தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கு இரும்பு அலுமாரிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் கையளிக்கப்பட்டுள்ளன.

## அதி. வண. பிதா இராயப்புவுக்கு எச்சரிக்கை

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வேண்டுமென்று கூறியமைக்காக, மன்னார் மறை மாவட்ட ஆயர் வண. இராயப்பு யோசப், வன்னிக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு புலிகள் இயக்கம் கூறிய பின்னரும் அதனையும் மீறி பிதா இராயப்பு கூறியதே பிரச்சினையைக் கிளப்பியது. புலிகளின் இன்றைய நிலைப்பாடு மக்கள் மத்தியில் பீதி மனோபாவத்தை ஏற்படுத்துவதாக 'டெயிலி மிரர்' பத்திரிகைக்கு அவர் வழங்கிய கருத்துக் குறித்துக் கடுமையாக எச்சரிக்கப்பட்டாரென்றும் வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இந்து ஆலயங்களுக்கு நிதியுதவி



மக்களது பிரச்சினைகளை எங்களால் தீர்க்க முடியும். எங்களைக் கொண்டு மக்களாகிய உங்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் கடமை உங்களுக்கு இருக்கிறது. நீங்கள் எங்களைப் பலப்படுத்துவதன் மூலம் தான் அது சாத்தியமாகும் என கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சரும் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, அண்மையில் இந்து ஆலய பரிபாலன சபைகளின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்தார். இந்து ஆலயங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக நிதியுதவி வழங்கும் வைபவம் அமைச்சில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார். ஜனாதிபதித் தேர்தலில் ஈ.பி.டி.பி. மூன்று அடிப்படை அம்சங்களை முன்வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கியது. வைபவத்தில் கலந்துகொண்ட ஆலய தர்மகர்த்தாக்கள் மத்தியில் அமைச்சர் உரையாற்றுவதைக் காணலாம்.

## சந்திரசேகரனைச் சாடினார் தமிழ்ச்செல்வன்

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனிடம் வாங்கிக் கட்டிக்கொண்டார். கடந்த 14ஆம் திகதி வன்னியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்த போது இந்த லடாய் ஏற்பட்டதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன. ஜனாதிபதித் தேர்தலில் அக்கறையில்லையென்ற புலிகளின் நிலைப்பாட்டினை மாற்றுமாறு, சந்திரசேகரன் கோரிக்கை விடுத்தார். கடுகடுப்புற்ற தமிழ்ச்செல்வன், தமது நிலைப்பாட்டினை மாற்றப் போவதில்லையென அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்தார். "இதுகாலவரை நீங்கள் எமது பொங்கு தமிழ் நிகழ்ச்சிகள் உட்படப் பலவற்றில் கலந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் உணர்வுபூர்வமாகத்தான் இவற்றில் கலந்து கொண்டீர்களென்று நாம் நம்பியிருந்தோம். ஆனால் நீங்கள் சுயநல நோக்கத்துடனேயே கலந்துகொண்டீர்களென்பதை இப்போது உணர்கிறோம். அங்கொன்றும் இங்கொன்றுமாக இரு தோணிகளில் கால் வைக்காதீர்கள். எங்கள் முடிவை மாற்றும்படி கூறுவதற்கு உங்களுக்கு அதிகாரமில்லை" என்று காட்டமாகக் கூறினாராம் தமிழ்ச்செல்வன்.

## மிரட்டலே காரணம்

வடக்கு, கிழக்கிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்களிப்பு மந்தமாக இருந்தமைக்கு புலிகளின் அச்சுறுத்தலே காரணமென்று தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் தெரிவித்தன. முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய இடங்களிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் வாக்களிப்பில் மந்த நிலை காணப்பட்டமைக்கு பயமுறுத்தலே காரணமென்றும் தெரிவிக்கப்படுகிறது. புலிகளின் பயமுறுத்தல் காரணமாக வாக்காளர்களின் தொகை குறைவாகவே இருக்குமென்று தேர்தலுக்கு முன்னரேயே யாழ். அரசாங்க அதிபர் கணேஷ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தற்கொலைக் குண்டுதாரி அமெரிக்க தூதரகத்தில் சரண்

தான் தொடர்ந்து சீவிக்க வேண்டுமெனவும், தனக்கு அமெரிக்கா செல்வதற்கு விசா வழங்குமாறும் கேட்டு, புலிகளின் தற்கொலையாளி ஒருவர் அமெரிக்கத் தூதுவராலயத்தில் கடந்த ஏழாம் திகதி மாலை சரணடைந்துள்ளார். இவர் சரணடைந்த சில மணி நேரத்தில், இவரது உடலமைப்புக்கு ஏற்ற தற்கொலைக் குண்டுதாரியின் அங்கி ஒன்று அவ்விடத் துக்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. ஈ.பி.டி.பி.யின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து கொழும்புக்குப் போகுமாறு இவரைப் புலிகள் அனுப்பியதாகச் சரணடைந்தவர் கூறியுள்ளார். இவர் பரிச்சயமானவர் எனச் சொல்லப்படும் ஒரு சிங்களவருடனேயே அங்கு வந்துள்ளார். இவர்களது விபரங்களைப் பதிவு செய்த தூதுவராலய அதிகாரிகள் இவர்களைக் கொள்ளுப்பிட்டிப் பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளனர். இவர் மட்டக்களப்புக் கொக்கட் டிச்சோலையைச் சேர்ந்த ஜீவரெத்தினம் சுதர்சன் அல்லது பொற்கதிர் என்றழைக்கப் படும் 25 வயது இளைஞராவர். புலிகளது உளவுத் துறையைச் சேர்ந்தவரென்றும், அதில் இவரது பெயர் கண்ணன் எனவும் புலிகளின் தளபதி கபில் அம்மானிடம் தான் பயற்சி பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித சிறிவர்த்தன மேலதிக விசாரணைகள் தொடர்வதாகத் தெரிவித்தார்.

## திருமலை ப.நோ.கூ.சங்கம் தீவிர கண்காணிப்பில்!

திருமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பல ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதாக எழுந்த குற்றச்சாட்டினையடுத்து விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை கலைக்கப்பட்டு சில மாதங்களுக்கு முன்னர் புதிய இயக்குநர் சபையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. சில அதிகாரிகளின் உதவியோடு புலிகள் இயக்கமே இக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளில் தலையிட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. சுமார் 160 ஊழியர்கள் அங்கம் வகிக்கும் இச் சங்கத்தின் கணிசமான உறுப்பினர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டினையடுத்துச் சிலரின் தலைகள் உருளலாமென்று சங்க ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

## பிரசல்ஸில் புலி எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி

பெல்ஜியத்தின் தலைநகரான பிரசல்ஸில் கடந்த 14ஆம் திகதி புலிகள் இயக்கத்துக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். தமிழர் ஜனநாயகக் குழுக்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஐரோப்பாவின் பல நாடுகளிலிருந்து தமிழர்கள் கலந்துகொண்டனர். புலி இயக்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருக்கும் பயணத் தடையை நீக்கக் கோரி புலிச் சார்பு முகவர் அமைப்புகள் அண்மையில் பிரசல்ஸில் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றினை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் தமிழர் ஜனநாயகக் குழுக்கள் ஒழுங்கு செய்திருந்த பேரணியில் பதாகைகள் கொண்டு செல்லப்பட்டதோடு, கோஷங்களும் எழுப்பப்பட்டன. புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனம் செய்யக் கோரியும் ஐரோப்பிய நாடுகளின் வெளிநாட்டுப் பயங்கரவாதிகளின் பட்டியலில் புலிகள் இயக்கத்தைச் சேர்க்க வேண்டுமென்று கோரியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. யுத்த நிறுத்த காலத்திலும் புலிகள் கொலை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதற்கு கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டன. பிரபாகரன் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலைகள் இருப்பதால் சர்வதேச சமூகம் புலிகள் மீதான அழுத்தத்தை அதிகரிக்க வேண்டுமென்றும் பேரணியில் கலந்துகொண்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையே புலிகள் ஆதரிப்பார்களெனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்ட போதிலும், புலிகள் எடுத்த நிலைப்பாடு தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களான சிவாஜிலிங்கம், ரவிராஜ் போன்றவர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதென்று இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஒழுங்கு செய்தவர்களில் ஒருவரான முகுந்தன் என்பவர் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சி ரவிராஜ் எம்.பி.யூடாக தமிழ்ச்செல்வனுடன் கதைத்தபோதிலும் அம் முயற்சி வெற்றியளிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பேராசிரியர் சிவத்தம்பியின் பல்டி

"தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் அக்கறையின்றி இருக்கக்கூடாது. அவர்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும்" என்று பி.பி.சி.க்குப் பேட்டியளித்தவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி. புலிகள் இயக்கம் ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் வாக்களிப்பதை விரும்புவார்களென்று நினைத்துக் கொண்டபோது அவர் இவ்வாறு கூறினார். ஆனால் புலிகள் தேர்தலில் தமக்கு அக்கறையில்லையென்று கூறியதும் அவர் தனது சுருதிகளை மாற்றிக்கொண்டு விட்டார். தேர்தலைத் தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்று அவர் கூறியதன் காரணம் அவருக்கு மட்டுமே புரியுமென்கிறார் சக பேராசிரியரொருவர்.

## யாழ். கல்லூரி அதிபர்கள் இருவரையும் கொன்றவர்கள் புலிகளே!

### -யாழ்.பல்கலைக்கழகப் போதனாசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

"கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் சிவகடாட்சத்தையும், யாழ். மத்திய கல்லூரி அதிபர் இராஜதுரையையும் கொன்றவர்கள் படையினரோ மாற்றுத் தரப்பினரோ அல்ல, புலிகளே" என்று மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழகப் போதனாசிரியர் சங்கம் விடுத்துள்ள பிந்திய அறிக்கையில் தெரிவித்துள்ளது. சிவகடாட்சம் புலிகள் கூறுவது போல் தமிழ் எழுச்சிப் பேரவையின் செயலாளர் அல்லவென்றும் ஒரு காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தோடு நெருங்கிச் செயற்பட்டவரென்றும் அவரது மருமகனான நகுலன் என்பவர் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தோடு இணைந்து செயற்பட்டவரென்றும் 1986ஆம் ஆண்டு ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம் தாக்கியழிக்கப்பட்டபோது நகுலன் பாதிக்கப்பட்டாரென்றும் அறிக்கை கூறுகிறது. பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டவர்களைக் கொல்ல வேண்டுமென்றால், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், உபவேந்தர்கள், மதகுருமார்கள் எம்.பி.க்கள் போன்ற பலரைக் கொலை செய்யாமல், சிவகடாட்சம் போன்ற சாமான்யமான மனிதர்களைப் படையினர் கொல்ல வேண்டிய தேவையில்லை.

40,000 இராணுவச் சிப்பாய்களை யாழ்.மண்ணுக்கு உரமாக்குவோம் என்று வீரவசனம் பேசியவர்களை விட்டு விட்டு, இதிலொன்றிலும் சம்பந்தப்படாத சிவகடாட்சத்தைக் கொன்றவர்கள் யாரென்பது விளங்குமென்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிவகடாட்சம் கொலை தொடர்பாகப் புலிகளின் நிதர்சனம் இணையத் தளத்தில் வெளிவந்த தகவல்களையும் அந்த அறிக்கை ஆதாரமாகச் சுட்டிக்காட்டியுள்ளது. GTZ என்ற தன்னார்வத் தொண்டர் நிறுவனத்துடன் இணைந்து தனது பாடசாலைக் கட்டிடங்களைத் திருத்தியமைத்த ஒரு சிறந்த அதிபர் இவரென்றும், இவரைச் சந்திப்பவர்கள் எவருமே இவரைப் புலிகளின் தத்துவார்த்தவாதி என்று கூறமாட்டார்கள் என்றும் அறிக்கை கூறுகிறது. இதனைப் போன்றே யாழ்.மத்திய கல்லூரி அதிபர் இராஜதுரையைக் கொன்றவர்கள் புலிகளே என்றும் அறிக்கை குற்றம் சாட்டியுள்ளது.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# முரசம்

## மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

முன்னெப்போதும் இருந்திராத வகையில் ஊகங்களுக்கும் வதந்திகளுக்கும் இடந்தராத வகையில் இம்முறை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் பற்றிய எதிர்வு கூறல்கள் இருந்தன என்பதை எவரும் மறுக்கமுடியாது. மகிந்த ராஜபக்ஷவிற்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் மிகக் கடுமையான போட்டி நிலவியமையே அதற்குக் காரணமாகும். பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகள் மகிந்தவுக்குக் கிடைக்குமென்றும் மறுபக்கத்தில் ரணிலுக்கு முஸ்லிம் மக்களினதும் மலையக மக்களினதும் பெரும்பான்மையான வாக்குகள் கிடைக்குமென்றும் ஒரு கருத்து கடைசி இரண்டு வாரத்துக்கு முன்புவரை இருந்தது. பின்னர் புலிகள் இந்தத் தேர்தலில் யாருக்காகவும் பரிந்து பேசுவதைத் தவிர்த்து விட்டனர். தவிரவும் தமிழ் மக்கள் வாக்களிக்காமல் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்று கூறியதோடு அதை பல வழிகளிலும் வலியுறுத்தியும் வந்தனர். மறுபுறத்தில் மலைகத் தலைமைகள் கடந்த ஆட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க புலிகள் இயக்கத்தை இரண்டாக உடைத்த சாதனையை அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறி, சிங்கள மக்களின் வாக்குகளுக்காக வலைவீசியதை, புரிந்து கொள்ளாமல் தமது ஆதரவை இறுதி நேரத்தில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திக்குமுக்காடிப் போய் நின்றனர். அடுத்ததாக முஸ்லிம் வாக்குகளையும் முழுமையாக நம்ப முடியாத சூழல் உருவாகி விட்டது. குறிப்பாக கிழக்கு மாகாணத்திற்கு மகிந்த ராஜபக்ஷ விஜயங்களை மேற்கொண்டிருந்த போது அவருக்கு வழங்கப்பட்ட ஆதரவு பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்று எண்ணத் தோன்றியது.

இவ்வாறு வாக்களிக்கும் தினமான நவம்பர் பதினேழாம் திகதிவரை இரண்டு பிரதான வேட்பாளர்களில் யார் அடுத்த ஜனாதிபதியாவார் என்ற கேள்விக்கு எவராலும் தீர்க்கமான ஒரு முடிவினை தெரிவிக்க முடியமல் இருந்தது.

இவ்வரானதொரு நெருக்கடிமிகுந்த சூழலை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவது ஒவ்வொரு வாக்காளரிலும் தங்கியுள்ளது. தமது அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக எதைப்பற்றியும் கவலைப்படாமல் பிணங்களின் மீது அமர்ந்து கொண்டு சமாதானம் பேசுகின்ற போலித்தனமான தலைமைகளை மக்கள் நிராகரிக்கவேண்டும். கொலையாளிகளின் கூடாரமாக இலங்கை தேசம் மாறுவதையும், இலங்கை மக்கள் ஒவ்வொருவரும் அடுத்த வீநாடி மீது நம்பிக்கையற்றவர்களாக வாழ்வதையும் சமாதானத்தின் பெயரால் சகித்துக் கொண்டிருப்பவர்களையும் மக்கள் நிராகரிக்க வேண்டும். இவற்றுக்கும் மேலாக காலங்காலமாகத் தேர்தல் காலத்தில் மட்டும் சமாதானத்தின் தூதர்களாகவும், நாட்டின் இரட்சகர்களாகவும் தம்மை கூறிக் கொண்டு மக்களின் சொகுசான வாழ்க்கையிலிருந்து மலசல கூடம் வரையான சகல தேவைகளையும் தீர்த்து விடப் போவதாகவும் வாக்குறுதிகளை வாரிவழங்கி, தேர்தல் வெற்றிக்குப் பின் மக்களுக்கும், தேசத்திற்கும் மூன்றாம் மனிதர்கள் போல் வாழப் பழகியவர்களையும் மக்கள் நிராகரிக்க வேண்டும். இத்தனைக்காகவும் நிராகரிப்பதென்றால் யாருக்குத் தான் நாம் வாக்களிப்பது என்று மக்கள் எதிர்க்கேள்வியைக் கேட்பது புரிகிறது. அதற்காக வாக்களிக்காமலும் இருந்து விடுவது சரியென்றாகிவிடாது, ஆகவே உங்களிடம் வாக்குக் கேட்டு வந்தவர்களின் அரசியல் வாழ்க்கையை எவ்வளவுக்கு மீட்டிப்பார்க்க முடியுமோ அவ்வளவுக்கு மீட்டிக் கொண்டு ஆய்வு செய்து பார்ப்பதுவே உங்களுக்குரிய தெரிவாளர் யார் என்பதை தீர்மானித்துக் கொள்ள உதவியாக இருக்கும். இவ்வாறானதொரு உறுதியான முடிவை மக்கள் எடுப்பதனூடாகவே மக்களின் சக்தியின் மூலம் ஒருவரை அதிகாரத்துக்குக் கொண்டுவரவும் முடியும். அதே போல ஒருவரை அதிகாரத்திலிருந்து தூக்கியெறியவும் முடியும் என்பதை ஏமாற்றுப் பேர்வழிகளான அரசியல்வாதிகளுக்கு இடித்துரைக்க வேண்டிய பாரிய பொறுப்பாகும். இத்தனை எதிர்பார்ப்புகளும் வீணடிக்கப்படுமா? அல்லது கவனத்தில் கொள்ளப்படுமா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

■■


மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# பிரசார மேடைகளில் வெடிக்காத தேர்தல் குண்டுகள்!





**நரன்**

சர்வமுமே சர்ச்சைகளுக்குள்ளான ஜனாதிபதித் தேர்தல் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. ஜனாதிபதித் தேர்தல் இவ் வருடமா அல்லது அடுத்த வருடமா நடத்தப்பட்ட வேண்டுமென்று எழுந்த சர்ச்சை, பல்வேறு வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் இந்த வருடமேயென்று தீர்ப்பை வழங்கியதன் மூலம் உயர் நீதிமன்றம் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா இரண்டாவது தடவையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுச் சத்தியப் பிரமாணம் செய்த விடயம் அம்பலத்துக்கு வந்தபோதே ஆரம்பித்த சர்ச்சைகள், தொடர் கதையாகி முற்றுப் புள்ளிக்கு வந்திருக்கிறது. இந்த வருடமே ஜனாதிபதித் தேர்தலென்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததுமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பற்றிய இழுபறி ஆரம்பித்து விட்டது. ஜனாதிபதி வேட்பாளர் அநுரா பண்டாரநாயக்கவா? அல்லது மஹிந்த ராஜபக்ஷவா? என்று எழுந்த சிக்கல், மஹிந்ததான் ஜனாதிபதி வேட்பாளரென்று அறிவிக்கப்பட்ட பின்னரும் தொடர்ந்தது. ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளோடு மஹிந்த ராஜபக்ஷ செய்து கொண்ட உடன் பாடுகள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் குமுறலை ஏற்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது. ஒற்றையாட்சிக்குள் இனப் பிரச்சினைத் தீர்வு மற்றும் வடக்கு - கிழக்கு சுனாமிக் கட்டமைப்பு தொடர்பாகச் சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளுக்குமிடையிலான முரண்பாடு ஓரளவுக்கு மஹிந்தவின் தேர்தல் வெற்றிகளை, சாத்தியங்களைப் பாதிக்கவே செய்தது என்பதை மறுக்க முடியாது.

மஹிந்தவின் சிந்தனையும் ரணில் விக்கிரமசிங்காவின் மக்கள் நிகழ்ச்சித் திட்டமும் மக்கள் நலன் பேணும் வாக்குறுதிகளை வாரி வாரி வழங்கியிருந்தன. தேர்தல் முடிந்த பின்னர் வெற்றி பெறும் வேட்பாளர் இவற்றையெல்லாம் அமுல்படுத்துவாரென்று எதிர்பார்க்க முடியாது. தேர்தல் காலங்களில் அதிக வாக்குறுதிகளை வழங்குபவர்களை விட குறைந்த வாக்குறுதிகளை வழங்குபவர்கள் மீது நம்பிக்கை வைக்கலாம். ஏனெனில் அவர்கள் ஓரளவுக்காவது நேர்மையாக வாக்குறுதிகளை வழங்கியுள்ளனரென்று நம்ப முடியும்.

பெரும்பாலான தமிழ் ஊடகங்களும் அவற்றின் சார்பு நிலைத் தமிழ், முஸ்லிம் கட்சிகளும் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானால் யுத்தம் வெடிக்குமென்ற பாணியிலேயே பிரசாரம் செய்தன. மஹிந்த வென்றால் யுத்தமென்றும் ரணில் வென்றால் சமாதானமென்றும் கூட அவை பிரசாரங்களைக் கட்டவிழ்த்து விட்டன. இலங்கையில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அது யுத்தத்தை ஆரம்பிக்கக் கூடிய சாத்தியங்கள் இல்லை. ஏனெனில் யுத்தம் நடத்தி, இலங்கை அரசுகள் களைத்துப்போய் விட்டன அது மட்டுமல்ல, நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் யுத்தத்தை வெறுக்கின்றனரென்பதும் குறிப்பிடத்தக்கது. இது தவிர நிதியுதவிகளை வைத்துக் கொண்டு காத்திருக்கும் சர்வதேச நாடுகளும் யுத்தத்துக்கு எதிராகவே இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. புலிகளுக்குக் கூட யுத்தத்தை ஆரம்பிக்கக் கூடியதான சூழல் இல்லை. ஏனெனில் கருணாவின் பிரிவால் தற்காப்பு நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர். அத்துடன் அவர்கள் மீதும் சர்வதேச அழுத்தம் நிலவுகிறது. இருந்தாலும் அவ்வப்போது புலிகள் இயக்கம் உறுமிக் கொண்டுதான் இருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்கவைச் சமாதானத்தின் தூதுவராகத்தான் ஐ.தே.க.வும் பெரும்பாலான தமிழ் ஊடகங்களும் வர்ணித்து வருகின்றன. யுத்தத்தை எதிர்ப்பவன் தானென்றும் பேச்சுவார்த்தை மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேனென்றும் மஹிந்த எவ்வளவோ அழுத்திக் கூறியபோதிலும், அவர் ஜே.வி.பி.யோடு செய்து கொண்ட உடன்பாட்டை வைத்துக் கொண்டு அவரை யுத்தப் பிரியரென்று வர்ணித்தவர்கள், கடைசியில் தாமே பல்டி அடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

யாழ். நூலக எரிப்பின் சூத்திரதாரியென வர்ணிக்கப்பட்டவரும் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திசாநாயக்காவின் புதல்வரான நவீன் திசாநாயக்கா தேர்தலுக்குச் சில தினங்களுக்கு முன்னர் கினிகத்தேனவில் ஆற்றிய உரை, சமாதானப் பிரியர்களென்று கூறப்படுவோர் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. கினிகத்தேன என்ற சிங்களச் சொல்லுக்கு தீப்பற்றிய சேனை என்று அர்த்தம் சொல்லப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்கவின் கெட்டித்தனமான கையாள்கையே பிரபாகரனுக்கெதிராகக் கருணா அம்மான் தோற்றம்பெறக் காரணமாகியதென நவீன் திசாநாயக்கா ஆற்றிய உரை, அரசியல் அரங்கில் தீயை மூட்டியிருக்கிறது. போதாக்குறைக்கு ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளே அமெரிக்காவினதும் இந்தியாவினதும் ஆயுத உதவிகளைப் பெற உதவியதென்றும் நவீன் திசாநாயக்கா கூறியிருந்தார்.

அவ்வப்போது சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டு வந்தவர் நவீன் திசாநாயக்கா. இதனால் அவர் சர்ச்சைக்குரிய இளைஞராகவும் கருதப்பட்டார். நுவரெலியாவே அவரது தொகுதியென்பதால் நுவரெலியாவின் முடிசூடா மன்னன் என்று தன்னை நினைத்துக் கொள்ளும் ஆறுமுகம் தொண்டமானுக்கும் அவருக்குமிடையே அவ்வப்பொது உராய்வுகளும் ஏற்பட்டதுண்டு. நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் ஐ.தே.க.வின் தேசிய அமைப்பாளரான எஸ்.பி.திசாநாயக்கா சிறை சென்றபோது அந்தப் பதவி தனக்குத் தரப்பட வேண்டுமென்று வெளிப்படையாகவே கோரியவர் நவீன் திசாநாயக்கா என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் நவீன், கருணா பற்றிய தனது கருத்துக்களைச் சொன்னபோது துடிப்புமிக்க இளைஞரின் மாற்றுக் கருத்து என்றுதான் பலரும் நினைத்துக் கொண்டார்கள். ஆனால் இதே கருத்துக்களை ஐ.தே.க.வின் முக்கியஸ்தரும் ரணில் விக்கிரமசிங்காவின் நெருங்கிய சகாவுமான மிலிந்த மொரகொட தெரிவித்த போதுதான் சமாதானப் பிரியரின் ஆதரவாளர்களென்று கூறப்பட்டவர்கள் துடித்துப் பதைத்துக் கொண்டு விழித்தெழுந்தனர். இந்த வார்த்தைகள் வழமையான தேர்தல் குண்டுகள் என்று கூடப் பலர் நினைத்துக் கொண்டனர். உண்மையில் அது தேர்தல் குண்டுதான். ஆனால் அப்படி பல்டி அடிக்க வேண்டிய நிலைக்கு ரணிலின் நெருங்கிய சகாக்கள் தள்ளப்பட்டனர்.

**யாழ். நூலக எரிப்பின் சூத்திரதாரியென வர்ணிக்கப்பட்டவரும் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திசாநாயக்காவின் புதல்வரான நவீன் திசாநாயக்கா தேர்தலுக்குச் சில தினங்களுக்கு முன்னர் கினிகத் தேனவில் ஆற்றிய உரை, சமாதானப் பிரியர்களென்று கூறப்படுவோர் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. கினிகத்தேன என்ற சிங்களச் சொல்லுக்கு தீப்பற்றிய சேனை என்று அர்த்தம் சொல்லப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்கவின் கெட்டித்தனமான கையாள்கையே பிரபாகரனுக்கெதிராகக் கருணா அம்மான் தோற்றம்பெறக் காரணமாகியதென நவீன் திசா நாயக்கா ஆற்றிய உரை, அரசியல் அரங்கில் தீயை மூட்டியிருக்கிறது.**

புலிகளின் ஆயுத அடாவடித்தனமும் அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கையும் சிங்கள மக்கள் மத்தியில் கணிசமான எதிர்ப்புகளைக் கிளறி விட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையாகவே புலி எதிர்ப்புப் பிரசாரத்தை முன்னெடுத்துச் செல்லவில்லையென்ற போதிலும், ஜே.வி.பி. மேற்கொண்ட ஐ.தே.க. விரோத பிரசார நடவடிக்கைகள் ரணிலின் இதயத்தில் நெருஞ்சி முள்ளாகக் குத்தியது. புலிகளுடன் அவர் செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் காணப்பட்ட ஓட்டை, ஒடிசல்களை ஜே.வி.பி.யினர் அக்குவேறு ஆணி வேறாகக் கிழித்தனர். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் சுதந்திரமாக நடமாடுவது மட்டுமல்ல, சுதந்திரமாகப் பயமின்றிக் கொலை செய்வது கூடச் சிங்கள மக்களை உசுப்பி விட்டிருந்தது. குறிப்பாக லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலை, மன்னாரிலுள்ள புலிக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்ற மூன்று பொலிஸ் அதிகாரிகளை புலிகள் கைது செய்து, பிணை வழங்காமல் சிறையில் வைத்தமை போன்ற பல விடயங்கள் ஐ.தே.க. வுக்கு எதிரான சாட்சியங்களாக மாறின.

இந்த நிலையில்தான் விரும்பியோ விரும்பாமலோ கருணாவின் கதையைக் கட்டவிழ்த்து விட வேண்டிய நிர்ப்பந்தம் ஐ.தே.க.வின் பெரும் புள்ளிகளுக்கு ஏற்பட்டது. எனவேதான் கருணாவின் கதையைக் கட்டவிழ்த்து விட வேண்டிய கட்டாய நிர்ப்பந்தம் நவீனுக்கும் மிலிந்தவுக்கும் ஏற்பட்டது. சமாதானப் பிரியரென்றும் Mr. Clean என்றும் சொன்னதைச் செய்பவரென்றும் ஐ.தே.க.வினரால் வர்ணிக்கப்படும் ரணிலுக்கு வாய்மூல ஒப்பதல் வாக்குமூலம் அளிக்க முடியாததாலேயே நவீனும் மிலிந்தவும் ரணிலின் முகவர்களாக வாக்குமூலம் அளித்தனர்.


இருபது வருடங்களுக்கு மேலாக சிவில் யுத்தம் நிலவிய ஒரு நாட்டில், யுத்தத்தில் சம்பந்தப்பட்ட ஆயுதக் குழு சமாதான காலத்திலும் ஆயுத அடாவடித்தனங்களில் ஈடுபடும் ஒரு நிலையில் புலிகளுக்கு வேதாகம வசனங்களை ஓதிக் கொண்டிருப்பதில் அர்த்த மில்லை. இதனாலேயே நவீனும் மிலிந்தவும் ஒப்புதல் வாக்கு மூலம் அளிக்க வேண்டிய தேவையேற்பட்டது. இவை ரணிலின் பிரசார மேடைகளில் ரணிலுக்காக வெடித்த தேர்தல் குண்டுகள்தான்.

சமாதானமே தனது சத்திய வேதமென்று ரணில் சொல்வாரென்றால் கருணா பற்றிய கதை வந்திருக்க வேண்டிய தேவையே ஏற்பட்டிருக்காது.

இதற்கிடையில் இரு பிரதான வேட்பாளர்களில் எவரையும் ஆதரிக்கப் போவதில்லையென்று புலிகளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் விடுத்திருக்கும் அறிவித்தல், தமிழ் மக்களின் வயிற்றைக் கலக்கியிருக்கிறது. புலிக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்கள் தாம் விரும்பியபடி வாக்களிக்க அனுமதிப்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. புலிகளின் இந்த அறிவிப்பு ஒரு சூட்சும நிலையை ஏற்படுத்தியிருப்பதாக யாழ். மக்கள் கருதுகின்றனர். இது புலிகளின் தேர்தல் குண்டென வர்ணிக்கப்படுகிறது. மஹிந்த ஜே.வி.பி.யுடன் உடன்பாடு செய்ததைக் காரசாரமாகக் கண்டித்தவர்களால் பகிரங்கமாகவே ரணிலுக்கு விசுவாசம் தெரிவிக்க முடியாமல் போயிருக்கலாம். புலிகள் ரணிலை ஆதரித்தால் கணிசமான வாக்குகள் மஹிந்தவிற்கு போகலாம். எனவே தமது கட்டுப்பாட்டுப் பகுதி மக்களை விரும்பியபடி வாக்களிக்கச் சொன்னவர்கள் ஏன் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்காளர் அட்டைகளைப் பறித்துச் செல்கிறார்களென்பது விடை தேட வேண்டிய கேள்விதான். எது எப்படியிருந்தாலும் தேர்தல் மேடைகளால் வெடித்த குண்டுகளும் இருக்கின்றன. வெடிக்காமல் புஸ்வாணமாகிப் போனவையும் இருக்கின்றன. இனித் தொடர் நிகழ்வுகள் குண்டுகளை வெடிக்க வைத்து மக்களைத் துடிக்க வைக்காவிட்டால் அதுவே போதும். தேர்தல் குண்டுகள் தாராளமாக வெடிக்கட்டும். உண்மைக் குண்டுகள் மட்டும் வெடிக்கக் கூடாது. ■

---

## ஊரிலிருந்து....



வழமையாகவே தேர்தல் என்று வந்தால் வாக்காளர்களைத் தேடிச்சென்று வேட்பாளர்கள் ஆதரவு திரட்டுவது வழக்கம். 2001 பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின் ஆட்சியமைத்த ரணில், தேர்தலுக்குப் பிறகு யாழ். நகருக்குச் சென்றார். பெருமளவு மக்கள் மத்தியில் யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட லொத்தர் சபையின் சீட்டிழுப்பில் கூட கோலாகலமாக பங்கு பற்றினார். அது அன்று தேர்தலுக்குப் பின் நடந்த விடயம். ஆனால் இன்று தேர்தலுக்கு முன் யாழ்ப்பாணத்தில் ஒரு பொது மகனைத்தானும் நேரடியாகச் சந்தித்து தமக்கு வாக்களிக்குமாறு கோர அவரால் முடியவில்லை. இவ்வளவிற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவரே அவர்தான். தான் விரித்த வலையில் தானே விழுந்துவிட்டார். இந்தக் கடுப்புத்தான் நவீன், மிலிந்தவின் வாயிலிருந்து சில உண்மைகளைக் கொட்ட வைத்துள்ளது.

தென்னிலங்கை தலைமையுடன் பரஸ்பர பேச்சுவார்த்தை நடாத்தாமல் தீர்வு சாத்தியமில்லை. புலிகளுக்கோ அதில் நம்பிக்கை இல்லை. ஊரிலிருந்து ஐயோ இங்கிலிசில் சொன்னார் "எல்லாப் பாதையும் ரோமபுரியை நோக்கியே" புலிகளின் நகர்வுகள் எல்லாம் யுத்தத்தை நோக்கியே.

இலங்கையின் 5ஆவது ஜனாதிபதித் தேர்தலில் புலிகள் என்ன முடிவை எடுக்கப் போகின்றார்கள் என அனைவரும் எதிர்பார்த்திருந்தாலும், அனேகர் எதிர்பார்த்தது போலவே மக்களின் முடிவிற்கு அதனை விடுவதாகக் கூறி புலிகள் நழுவிவிட்டனர். கடந்த 10ஆம் திகதி தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 பேருடன் சுமார் 3 மணித்தியாலம் வரை தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தனர். அதன் முடிவில் பத்திரிகையாளர்களுக்கு முகம் காட்டாமல் தமிழ்ச்செல்வன் புறப்பட்டுச்செல்ல, சம்பந்தன் மட்டுமே “தமிழ் மக்களுக்கு தேர்தலில் அக்கறை இல்லை” என புதிய கண்டுபிடிப்பு ஒன்றினை வெளியிட்டார். அனேகர், ஊடகவியலாளர்கள் உட்பட, தமிழ் மக்களின் அக்கறை இன்மையினை கண்டுபிடிக்கத்தான் 3 மணித்தியாலங்கள் புலிகளும் கூட்டமைப்பினரும் பேச்சுவார்த்தை நடாத்தினார்களா எனக் கேள்வி எழுப்பாமல் இல்லை.

புலிகளைப் பொறுத்தவரை, ஜனாதிபதித் தேர்தலைப் பற்றியோ, அதன் கண்காணிப்பைப் பற்றியோ எவ்வித அக்கறையும் இல்லாமல் தான் இருந்தார்கள். மஹிந்த, ரணில் இருவருமே தமக்கு ஆபத்தானவர்கள் என்பது அவர்களுக்கு நன்கே தெரிந்திருந்தது. ஆயினும் 10ஆம் திகதியன்று ஒன்று தேர்தல் பகிஷ்கரிப்பு அல்லது யாருக்காவது ஆதரவு என இரண்டில் ஒன்றை புலிகள் வெளியிடுவார்கள் என எண்ணியோரும் அனேகர் உள்ளனர். ஆனால் எல்லாமே புஸ்வாணமாகப் போய்விட்டபின் பெரிதும் அதிர்ச்சியடைந்தவர்கள் தென்னிலங்கை சிறுபான்மைக் கட்சித் தலைமைகளே.

இதேவேளை புலிகள் தாம் செய்யப்போவதை ஒரு போதும் சொல்லுவதுமில்லை. செய்தவை யாவற்றையும் உரிமை கோருவதும் இல்லை. ஆனால் தமது அரசியல் பணி செய்யச் சென்றோரை திருப்பி அழைத்து விட்டதாகக் கூறிய புலிகள் அதன் பின்னரே தமது துணைப் படைகளின் பெயரில் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தினர். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின் புலிகளின் துணைப் படையின் நடவடிக்கைகள் மும்முரம் பெற்றன.

இதில் வேடிக்கையான சம்பவம் என்னவெனில் அரசு - புலிகள் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க வந்த இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு வழமையான வன்முறைகளுடன் மேலதிகமாக தேர்தல் வன்முறையினைக் கண்கானிக்கும் பளுவும் கூடியுள்ளது. மறுபுறம் தேர்தலைக் கண்காணிப்பதற்கென்றே பிரத்தியேகமாக வேறு அமைப்புகளும் கடமையில் ஈடுபட்டுள்ளன. இதில் நடைபெறும் வன்முறைகள் யுத்த மீறல் வன்முறைகளா அல்லது தேர்தல் வன்முறைகளா என பட்டிமன்றம் ஒன்று நடத்தாதது மட்டும்தான் குறை.

ஆனால் இது பற்றி எதுவும் கவலைப்படாமல் தமது திட்டமிட்ட நடவடிக்கையினை புலிகள் மேற்கொண்டு வருகின்றனர். நவம்பர் 17ஆம் திகதி நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஓர் ஒத்திகையாகவே கடந்த 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெற்ற தபால் மூல வாக்களிப்பை

# கண்காணிப்பாளர்களைத் திணறடித்த வன்முறைகள்

அலசுவது

**- ஜே.கே. -**

புலிகள் நோக்கியுள்ளனர் என்பது நடைபெற்ற சம்பவங்களில் இருந்து தெளிவாகின்றது.

இம்மாதம் 7ஆம் திகதி தபால் மூல வாக்களிப்பு ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே பளையில் இருப்பதாகக் கூறப்பட்ட இளம்பரிதி, தனது சகாக்களுடன் யாழ். செயலகத்திற்குள் பிரவேசித்துள்ளார். அங்கு அவர் தபால் மூல வாக்களிப்புச் சீட்டுக்களை - அவை வாக்களிக்கப்பட்டால் என்ன, வாக்களிக்கப்படாவிட்டால் என்ன - கைப்பற்றிச் செல்ல முனைந்துள்ளார். செயலக ஊழியர்கள் உட்பட அனேகர் பார்த்திருக்கையிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. ஆயினும் சுதாகரித்துக்கொண்ட யாழ். செயலக உயர் அதிகாரி ஒருவர், புலிகளுடன் வாக்குவாதப்பட்டதுடன் வாக்குச் சீட்டுக்கள் புலிகளினால் கடத்தப்படுமாயின், தாம் தமது பதவியை உடனடியாகவே இராஜினாமாச் செய்து விடுவதாகவும் கூறியுள்ளார். இதனைச் சற்றும் எதிர்பாராத புலிகள் வேறு வழியின்றி அங்கிருந்து அகன்று சென்றுள்ளனர். இச்சம்பவம் பொதுமக்கள் அனேகர் பார்த்திருக்கும் போது இடம்பெற்றாலும் பின்னர் அரச அதிபர் கே.கணேஷினால் அவ்விடயம் மறுக்கப்பட்டிருந்தது.

> இலங்கை தமிழ் சிறுபான்மைத் தரப்பில் ஈ.பி.டி.பி.யினர் மட்டுமே ஜனாதிபதித் தேர்தலில் தமது ஆதரவை பிரதமர் மஹிந்தவிற்கு தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளதுடன், இனப்பிரச்சினைக்கான தமது 3 கட்டத் தீர்வுத் திட்டத்தையும் அதனோடிணைந்து பகிரங்கமாக அறிவித்துள்ளனர். இந்நிலையில் மஹிந்த, ரணில் எவர் பதவிக்கு வந்தாலும் தமது இருப்பிற்கு ஆபத்து என்பதை புலிகள் தெளிவாகவே அறிந்துள்ளனர். மஹிந்தவின் நேரடியான தீர்வு திட்டங்களும் ரணிலின் சர்வதேச மயப்படுத்தப்பட புலிகளை முடக்கும் திட்டமும் பகிரங்கப்படுத்தப்பட்டுவிட்டன. கடந்த வாரம் நவீன் திசாநாயக்கா மற்றும் ரணிலின் வலது கையான மிலிந்த மொறகொட ஆகியோரின் பேச்சுக்கள் ஐ.தே.க.வின் புலிகள் தொடர்பான நிலைமையினைப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்திவிட்டன.

அதேவேளை கோண்டாவில் உபதபால் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த வாக்காளர் அட்டைகளுக்கு, காவலாக இருந்த படையினர் மீது கடந்த மாதம் 30ஆம் திகதி இரவு புலிகளினால் கைக்குண்டு வீச்சு நடாத்தப்பட்டுள்ளது. இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்ததுடன் படுகாயமடைந்த மற்றொரு பொலிஸ் வீரரின் காலொன்று சத்திர சிகிச்சையின் பின் துண்டிக்கப்பட்டுள்ளது.

மேலும் தென்மராட்சியில் மீசாலை உட்பட இரு இடங்களில் இனம் தெரியாதோர் என்ற போர்வையில் நேரடியாகவே புலிகளினால் வாக்காளர் அட்டைகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த 11ஆம் திகதி ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் விஜயம் செய்திருந்த வேளை, அதாவது அக்குழுவின் தலைவர் ஜோன் குஷ்னகான் யாழ்ப்பாணத்தில் நின்ற போதே அல்லைப்பிட்டி எனும் இடத்தில் தீவக மக்களுக்கு எடுத்துச்செல்லப்பட்ட ஒரு தொகுதி வாக்காளர் அட்டைகள் புலிகளினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவை யாவற்றையும் விட முக்கியமான விடயம், தபால் மூல வாக்களிப்பு நடைபெற்ற போது இடம் பெற்றதாகும். வாக்களிப்பு நிலையங்களில் ஒன்றாக யாழ். தொழில்நுட்பக் கல்லூரியும் காணப்பட்டது. அங்கு காலையிலேயே திரண்ட தமிழீழ சர்வதேச மாணவர் பேரவையினைச் சேர்ந்தோர், எவரையும் உள்ளே வாக்களிக்கச் செல்லவிடாமல் தடுத்திருந்தனர். புலிகளின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இயங்குகின்றது என்பது ஒன்றும் இரகசியம் அல்ல.

இதே வேளை, கடந்த 8ஆம் திகதி மேற்சொன்ன அதே சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர்கள் கலட்டிச்சந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் ஓர் ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. அதாவது வாக்களிப்பு நடைபெறும் போது எவ்வாறு அதனைக் குழப்புவது அல்லது வாக்குப் பெட்டியினை எப்படிக் கடத்துவது என செய்முறை ஒத்திகையினை தாம் மேற்கொண்டதாகப் பின்னர் அவர்கள் கூறியுள்ளனர்.

மேற்சொன்ன சம்பவங்கள் அனைத்தையும் நோக்கும்போது ஜனாதிபதித் தேர்தலில் தமது நிலைப்பாடு என்ன என்பதை புலிகள் தமது செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தி வருவது கண்கூடு. இடம்பெற்ற மேற்சொன்ன வன்முறைகள் அனைத்திற்குமே புலிகளை நோக்கி குற்றஞ்சாட்டியே கைகள் நீளுவதனால் தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வழமைபோலவே வாய் மூடி மௌனிகளாக உள்ளனர். அவர்களில் புலிகளின் உத்தரவை வேத வாக்காக எடுத்துக்கொள்வோரைத் தவிர, வேறு சிலர் எதிரணித் தலைவருக்கு புலிகள் தமது ஆதரவைத் தெரிவிக்க மாட்டார்களா என்ற நப்பாசையில் காணப்பட்டதாக அவர்களுக்கு நெருங்கிய சிலர் கூறியுள்ளனர். குறிப்பாக அவ்வணியில் இருந்து கூட்டமைப்பு தொழில்சார் பாராளுமன்ற உறுப்பினர் மூலம் நேரடியாகவே, தூது கூட அனுப்பப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நிலைமை இவ்வாறு இருக்க, தமிழர் தாயகப் பகுதியில் புலிகள் கண்கொத்திப் பாம்பாக இருக்கும்போதே சிறிதும் ஓசைப்படாமல், யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சந்தித்து அளவளாவியுள்ளனர். இது புலிகளுக்கு மட்டுமல்ல, எதிரணியினருக்கும் பேரிடியாக இருந்தது. தாம் புலிகளுடன் செய்துகொண்ட சமாதான ஒப்பந்தத்தின் மூலமே பிரதமரினால் காங்கேசன்துறை செல்ல முடிந்தது எனக் கூறிய ரணில் அணியினரை நோக்கி, அதே ஒப்பந்தத்தின் காரணமாகத்தான் ரணிலினால் காங்கேசன்துறை சென்றும் யாழ்ப்பாணம் செல்ல முடியவில்லை என பதிலடி கொடுத்துள்ளது மஹிந்த அணி.

**இலங்கை தமிழ் சிறுபான்மைத் தரப்பில் ஈ.பி.டி.பி.யினர் மட்டுமே ஜனாதிபதித் தேர்தலில் தமது ஆதரவை பிரதமர் மஹிந்தவிற்கு தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளதுடன், இனப்பிரச்சினைக்கான தமது 3 கட்டத் தீர்வுத் திட்டத்தையும் அதனோடிணைந்து பகிரங்கமாக அறிவித்துள்ளனர். இந்நிலையில் மஹிந்த, ரணில் எவர் பதவிக்கு வந்தாலும் தமது இருப்பிற்கு ஆபத்து என்பதை புலிகள் தெளிவாகவே அறிந்துள்ளனர். மஹிந்தவின் நேரடியான தீர்வு திட்டங்களும் ரணிலின் சர்வதேச மயப்படுத்தப்பட புலிகளை முடக்கும் திட்டமும் பகிரங்கப்படுத்தப்பட்டுவிட்டன. கடந்த வாரம் நவீன் திசாநாயக்கா மற்றும் ரணிலின் வலது கையான மிலிந்த மொறகொட ஆகியோரின் பேச்சுக்கள் ஐ.தே.க.வின் புலிகள் தொடர்பான நிலைமையினைப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்திவிட்டன.**

எனவே, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இருக்கும் புலிகள் தேர்தலில் தமிழ் மக்களுக்கு அக்கறை இல்லை என வாயினால் கூறிவிட்டு, கண்காணிப்பாளர்களைத் திகைக்க வைக்கும் நடவடிக்கைகளைக் கைகளினால் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கலாம். ◎

## அதிரடி அய்யாத்துரை



**அதிகாரத்துக்கான** எலக்ஷன் ஜனங்களைப் படாதபாடு படுத்திப்போட்டுப் போயிருக்கிறது. போன சூட்டோடையே இன்னொரு புயலையும் கிளப்பியெல்லோ விட்டுப் போட்டுப் போயிருக்கு. அதொண்டுமில்லையுங்கோ, யார் அதிகாரத்துக்கு வந்தாலும் அடுத்த மூன்றாவது மாசத்திலேயே பொதுவான எலக்ஷன் நடைபெறும் என்று திட்டவட்டமாத் தெரிஞ்சு போச்சு. இவ்வளவு நாளும் தலைவருக்காக தவில் வாசிச்சவை இனி தங்களுக்காக தம்பட்டம் அடிச்சுக் கொண்டு வரப் போகினம். அது சரி, நான் தெரியாமத்தான் கேக்கிறன், அதிகாரத்துக்கான எலக்ஷனை பகிஷ்கரிச்சுப் போட்டு தமிழ் மக்களுக்கு ஆர்வமில்லையெண்டு அறிக்கை விட்டவை, உந்தப் பொதுவான எலக்ஷனில என்ன செய்யப்போயினமோ எண்டு கூத்தமைப்பு எம்.பி.மார் ஆளாளுக்கு யோசிச்சுக் கொண்டிருக்கினமாம். இப்ப இருக்கிற இருபத்திரெண்டு பேரின்ர லிஸ்டிலையும் சில சேஞ்ச் பண்ணிப்போட்டு நொமினேசனை ரெடி பண்ணுவினம் எண்டது தானுங்கோ கூத்தமைப்புக்காரருக்கு இருக்கிற லேட்டஸ்ட் கவலையாம்.

**தலையிருக்க** வால் ஆடக்கூடாது எண்டுவினம். பச்சைக் கட்சிக்குள்ள அது தானுங்கோ நடக்குது. பெரும்பான்மையவையின்ர வாக்குகளையும் விடக்கூடாதெண்ட தலைவரின்ர திட்டத்தைத்தான் நளினும், மிலிந்தவும் செயல்படுத்திச் சினமோ தெரியாது. அதுதானுங்கோ ரெண்டெழுத்தாரின்ர தேசியத் தலைவரிட்டை இருந்து கருணா அம்மானை பிரிச்சு எடுத்து சாதனை புரிஞ்சது தங்கட தலைவர்தான் எண்டு வாக்கு வேட்டையாடிச்சினம். உந்த விவகாரம் கிணறு வெட்ட பூதம் கிளம்பின மாதிரி சலசலப்பை ஏற்படுத்திச்சுது. ஆனாலும் தலைவர் அதைப் பத்தி மூச்சுக்காட்டாம இருந்தார். தலைவர் சும்மா இருந்தாலும் தன்மானத் தமிழன் மண்ணெண்ணை யார் சும்மா இருப்பாரோ? மிலிந்த தலைமைத்துவத்துக்கு துரோகம் செய்யிறார்; தலைமையை அபேஷ் பண்ணப் பார்க்கிறார் எண்டு வாய்க்கு வந்த படியெல்லாம் வாங்கு வாங்கெண்டு வாங்கிப் போட்டார். அவருக்குகென்ன ரெண்டு தலைவர் மார் தேவையான மாதிரி அறிக்கையை விட்டுப்போட்டு பிஸினைஸப் பார்க்க வேண்டியது தானாக்கும்.

**நாட்டுக்கும்** தன்ர கையாலதான் சுதந்திரம் கிடைச்சுது எண்ட மாதிரி கைது செய்யப்பட்டு கை விலங்கோடை கூட்டிக் கொண்டு போகேக்க, கை ரெண்டையும் உயர்த்தி ஏதோ பெரும் சாதனை செய்தவர் மாதிரி கூட்டுக்குள்ள போனவர், ஒரு மாதிரி விடுதலையாகிட்டார். அவரின்ர தலைவர் அதிகார அம்மணியோடை கண்டுகொண்ட இணக்கப்பாட்டுக்குக் கைமாறாக திஸாநாயக்கவுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்திருக்கினம். எதிர்காலத்திலையும் சில பேருக்கு பொலிரிக்ஸில இருந்து விடுதலை வாங்கிக் கொடுக்கப் போகினமாம். உதில என்ன பிரச்சினை எண்டால் வாழ்க்கையின்ர சிறைக்குள்ளையும், பொருளாதாரத்தின்ர சிறைக்குள்ளையும் காலம் காலமாக அகப்பட்டுக் கிடக்கிற மகா ஜனங்களை விடுவிக்கத்தான் யாரும் இல்லையுங்கோ.

**ரெண்டெழுத்தாருக்குள்ள** ரெண்டுபட்ட கருத்து வலுத்துக் கொண்டிருக்குதாம். அதிகார எலக்ஷனில பச்சைக்குக் கொஞ்சப்பேர் ஆதரவு கொடுக்க வேணும் எண்டிச்சினமாம். இன்னும் கொஞ்சப் பேர் நீலக் கட்சி வந்தால்தான் எங்களுக்கு நல்லம் எண்டு சொல்லிக் கொண்டு இருந்திச்சினமாம். மருந்துக்கும் மாற்றுக் கருத்துப் பேசக்கூடாதெண்ட இறுக்கமான கொள்கையோடை இருந்தவைக்குள்ளேயே உந்த எலக்ஷன் ஒரு உசுப்பு உசுப்பி இருக்குதாமுங்கோ. உதே நிலை தொடருமாக இருந்தால் மாத்தையா, கருணாவுக்குப் பிறகு இன்னொரு உள்ளியக்க களையெடுப்பு திரும்பவும் ஆரம்பிச்சுடும் எண்டு பெடியள் யோசிக்கினமாம். பாம்பின் கால் பாம்பறியும் எண்டுவினமே அப்புடிப் போல மாற்றுக் கருத்து, வேற்றுக் கருத்தெண்டு எதையாவது கதைச்சால் தலைவர் என்ன செய்வார் எண்டு தொண்டர்களுக்குத் தெரியாதா. என்ன? ம்... இவ்வவளவு தான் அவையின்ர சனநாயகமாக்கும்...

**இலங்கை** கிரிக்கெட் அணிக்காரர் அண்டை நாட்டுக்குப் போய் ஆடின போட்டிகளிலை, அண்டை நாட்டுக்கார அணி எங்கட நாட்டு அணியைப் போட்டு புரட்டிப் போட்டினம் எண்டது உண்மைதானுங்கோ. அதுக்காக வாங்கிற சம்பளத்துக்குத் தகுதி இல்லாதவை எண்டு கவாஸ்கர் சொல்லிறது கொஞ்சம் ஓவருங்கோ. உப்பிடி ஓவரா அவர் சொல்லியும் இரசிகர்கள் ஒருவரும் மூச்சு விடாம இருக்கினமே எண்டது தானுங்கோ ஆச்சரியமா இருக்கு. உந்த மௌனத்தைப் பார்த்தால் அவர் சொன்னது உண்மைதானோ எண்டும் யோசிக்க வேண்டியதாயிருக்கு. உந்தத் தோல்விக்குப் பிறகு கிரிக்கெட்டின்ர சரித்திரமே முடிஞ்சுது எண்டு நினைச்சுப் போட்டினமாக்கும் இண்டைக்கு மௌனமா இருக்கிறவை, நாளைக்கு ஒரு வெற்றி வரேக்க கொடி பிடிச்சுக் கொண்டு முன்னுக்கு வந்து நிப்பினம். உந்த ஸ்டையில் விளையாட்டுக்கும் பொருந்தும்; பொலிரிக்ஸ"க்கும் பொருந்தும்.

**என்ன** சொல்லுங்கோ ரெண்டெழுத்தார் கடைசி நேரத்தில காலை வாரி விட்டது, பச்சைக் கட்சித் தலைவருக்குச் செய்தது பியோ கிரீன் எண்டுவினமே அதுபோல பச்சைத் துரோகமுங்கோ. ரெண்டாயிரமே இருந்தாலும் ஓடி வந்து ஒப்பந்தம் செய்தது மட்டுமில்லாம வெளிநாடுகளுக்கு டூர் கூட்டிக் கொண்டு திரிஞ்சவர். அதுமட்டுமே உந்த ஏ நைன் பாதையைத் திறந்து விட்டு ரெண்டெழுத்தார் கோடிக்கணக்கில காசு சம்பாதிக்கிறதுக்கு வழி கண்டுபிடிச்சுக் குடுத்தவர். உந்த நன்றிக் கடனுக்காவது உந்த எலக்ஷனில ஒரு சப்போர்ட் தருவினம் எண்டு பகல் கனவும் இரவுக் கனவுமாக இருந்த மனிசன், ரெண்டெழுத்தார், புடையன் பாம்பெண்டு சொல்லி தன்ர பொலிரிக்சுக்கே பெரிய போடா போட்டிச்சினமே எண்டது தானுங்கோ கவலையாம். நல்ல காலம் பிரஸர் வராமல் இருந்த வரைக்கும் பிழைச்சன் எண்டு இருக்கிறாராம். பொலிரிக்ஸ் முடிவு என்னவாக இருந்தாலும் நடந்த துரோகத்திற்கு உந்தப் பாட்டு பொருத்தமோ எண்டு பாருங்கோ.

*“யார் யாரோ நண்பன் என்று*
*ஏமாந்த நெஞ்சம் ஒன்று*
*பூ வென்று முள்ளைக்கண்டு*
*புரியாமல் நின்றேன் இன்று.”*







## சமாதான நீதவான் பட்டம் சமுதாயத்துக்கு நன்மை பயக்க வேண்டும் - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

இறைவனுக்கும் மக்களுக்கும் இடையே தொடர்பினை ஏற்படுத்தக் கூடியவர்களாக மட்டுமன்றி, அதற்கு அப்பால் சமூகத்தின் மேம்பாடு மற்றும் நன்மை கருதியும் தங்களது கடமைகளை நிறைவேற்றுவதற்கு சிவாச்சாரியர்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு இந்து சமய அலுவல்கள் அமைச்சரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கடந்த 9.11.2005 அன்று சிவாச்சாரியர்களுக்கு சமாதான நீதவான் கௌரவப் பட்டங்கள் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், சமாதான நீதவான் என்னும் பட்டங்கள் வெறும் கௌரவப் பட்டங்களாக மாத்திரம் இருக்கக்கூடாது. எமது சமுதாயத்துக்குப் பயன்படத்தக்க விதத்தில் அவை அமைய வேண்டும். தொடர்ந்தும் நாம் ஒரு நிம்மதியற்ற சூழலில் வாழ்ந்து வருகின்றோம். தமிழர்களை தமிழர்களே கொலை செய்து வருகின்ற ஒரு சூழல் இங்கே தொடர்ந்து நிலவி வருகிறது. இதனை நிறுத்த வேண்டும்.

எமது அடிப்படைப் பிரச்சினைகள் முதல் அரசியல் பிரச்சினைகள் வரை அனைத்தையும் கட்டம் கட்டமாகத் தீர்த்துக் கொள்வதற்கு, ஓர் அரசியல் கட்சியின் தலைவர் என்ற வகையிலேயே தான் நடைமுறைச் சாத்தியமான மூன்று அணுகு முறைகளை முன்வைத்துள்ளதாகவும், இந்த அணுகுமுறைகளில் சென்று செயற்படுவார்களேயானால் தமிழ் பேசும் மக்கள் நல்லதொரு வாழ்க்கையை உரிமையாக்கிக் கொள்வார்கள் எனவும் தெரிவித்தார்.

மேற்படி வைபவத்தில்,
சோமசுந்தர சர்மா,
பாலசுப்பிரமணியம் ஐயர் கோபாலகிருஸ்ணன்,
பொன்னுசாமி குருக்கள் வரதராஜ குருக்கள்,
சாம்பசிவ குருக்கள் ஜகதீஸ்வர சர்மா,
சிவபாலசர்மா சசிகாந்தன்,
கருணாகரேஸ்வர குருக்கள் செந்திநாத குருக்கள்,
விஸ்வநாத ஐயர்,
சோமசுந்தர ஐயர்,
கிருஸ்ணசாமி ஐயர் பாலகிருஸ்ணன்,
தியாகராஜ ஐயர் புருஷோத்தம ஐயர்,
சிவசாமி ஐயர் கரக்குவரத குருக்கள்,
சிவசாமி ராஜேந்திர சர்மா,
தியாகராஜ ஐயர் சோமசுந்தரம்,
நாராயண சர்மா நாகேந்திர சர்மா,
இரத்தின ஐயர் பரமேஸ்வர ஐயர் ஆகியோருக்கு அமைச்சர் அவர்கள் கௌரவ சமாதான நீதவான் பட்டங்களை வழங்கி கௌரவித்துள்ளார். இவ் வைபவத்தில் கௌரவ அமைச்சரின் இந்து சமய விவகாரங்களுக்கான ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் உட்பட அமைச்சு அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



# விளம்பரப் பகுதி

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் **D.D. Enterprises** என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் **"Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- **(E-mail):– murasu@sltnet.lk**

## மக்களினால் மேன்மையடையத்தக்கவர்கள்!

புத்தளம் நகரத்தின் தில்லையடி கிராமத்தில் அமைந்திருக்கும் தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இவ்வருடம் இடம்பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 20 மாணவ - மாணவிகள் 100க்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளமை போற்றிப் பாராட்ட வேண்டிய விடயமாகும்.

அம் மாணவர்களுள் முறையே, சம்சுதீன் சமீரா 156 புள்ளிகளையும், அப்துல் வாஹித் றிசாதா 139 புள்ளிகளையும், அப்துல் வாஜித் பாத்திமா நப்லா 133 புள்ளிகளையும் ஐயூப்கான் பாத்திமா தஸ்னா 136 புள்ளிகளையும் பெற்று பாடசாலைக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெருமை தேடித் தந்துள்ளனர். வரும் காலங்களில் மாணவ - மாணவியர்கள் மேலும் அதிக புள்ளிகளைப் பெற்று சித்தியெய்த வேண்டும் என இறைவனை பிரார்த்திப்பதுடன் இவர்களுக்கு ஊக்கமும் பயிற்சியும் அளித்த ஆசிரியர், ஆசிரியைகளுக்கும் பெற்றோரின் சார்பாகவும் பொது மக்கள் சார்பாகவும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*—சமூக சேவையாளனும் மக்கள் நலன் விரும்பியுமான, எஸ்.ஏ.சி. நியாஸ், புத்தளம்.*

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

**- ஆசிரியர்**








# மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -11 - 2344831
web- www.drpksamy .com

## இன்னொருவர் பார்வையில்

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் சிவகடாட்சத்தையும் யாழ். மத்திய கல்லூரி அதிபர் இராஜதுரையும் கடந்த மாதம் 24 மணி நேர வித்தியாசத்துக்குள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களைத் தாம் கொல்லவில்லையென்று தெரிவித்த புலிகள், கொலைக் குற்றச்சாட்டைப் படையினர் மீது தெரிவித்திருந்தனர். இவர்களைக் கொன்றவர்கள் புலிகளேயென்று மனித உரிமைகளுக்கான யாழ்.பல்கலைக்கழகப் போதனாசிரியர் சங்கம் குறிப்பிட்டிருக்கிறது. மேற்படி அமைப்பு கடைசியாக வெளியிட்ட நீண்ட அறிக்கையிலிருந்து கல்லூரி அதிபர்களின் கொலை தொடர்பாகக் குறிப்பிட்ட பகுதியை இங்கே தருகிறோம்.**

# யாழ். கல்லூரி அதிபர்களைக் களையெடுத்தவர்கள் புலிகளே!

## -மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழகப் போதனாசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

**ஆரோக்கியமான** சமாதான முன்னெடுப்பு என்பது, பாசிஸ இலக்குகளுக்கு மக்கள் வாயளவில் சேவை செய்து பாசிஸ்டுகளின் திட்டமிட்ட வழிமுறைகளுக்குப் பந்தம் பிடிப்பதை விட மக்கள் நேர்மையாக செயற்பட வழிவகுக்கும். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலான சமாதான காலத்தில் மக்களின் வாழ்வுரிமைக்குக் குறைந்த அளவு சுதந்திரமே கிடைத்தது. அத்துடன் யாராவது அதிருப்தி தெரிவிக்கும் அறிகுறி ஏதும் தென்பட்டால், அவை மரணத்தை விளைவிக்கும் அளவுக்குப் பயங்கரமானவையாக இன்னமும் இருக்கின்றன. மக்கள் செலுத்தும் மரியாதையைத் தாம் நினைத்தபடி செயற்படுவதற்கான அங்கீகாரமென்று பாசிஸ்டுகள் நினைத்துக் கொள்கின்றனர். அதிருப்தி தெரிவிக்கும் போக்குகள் அவர்களைப் பொறுத்தவரையில் சகித்துக் கொள்ள முடியாதவையாக இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்ட கல்லூரி அதிபர்கள் சிவகடாட்சம் மற்றும் இராஜதுரை ஆகிய இருவரையும் பொறுத்தவரை இதுதான் நடந்ததென நாம் கருதுகிறோம்.

இந்த இருவருமே புலிகளின் அதிகாரக் கட்டுப்பாட்டின் கீழ் வாழ்வதற்கு இணங்கி வந்திருந்தனர். இந்த இரு கல்லூரி அதிபர்களின் கொலைகளை ஏட்டிக்குப் போட்டியானவை என்று காண்பிப்பதற்காக, ஒப்பீட்டளவில் மிகச் சிறு முரண்பாடுகளைப் பெரிதுபடுத்திக் காட்டுகின்றனர். அதாவது முதலில் கொலை செய்யப்பட்ட சிவகடாட்சத்தைப் புலிகளின் அதித்தீவிர ஆதரவாளரென்றும் மற்றவரான இராஜதுரையைப் புலி எதிர்ப்பாளரென்றும் காட்டுவதற்கு முயற்சியெடுக்கப்படுகிறது. இருவருமே தமது அழிவைத் தாமே தேடிக்கொள்ள விரும்பாதவர்கள். இருவருமே புலிகளுடனான தொடர்புகளில் மிகவும் கவனமாகச் செயற்பட்டவர்கள். அதாவது அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் முதல் கிராம சேவகர்கள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள் வரையிலான அரசாங்க ஊழியர்கள் புலிகளுடன் மிகக் கவனமாக தொடர்புகளைக் கொண்டிருப்பதுபோல் இந்த இருவருமே மிகக் கவனமாகச் செயற்பட்டிருக்கிறார்கள். புலிகளின் கூட்டங்களில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டால் அனைவருமே பங்கு பற்றுவதுண்டு.

ஏனைய அரசாங்க ஊழியர்களைப் போலன்றி கல்லூரி அதிபர்கள் வித்தியாசமான ஒரு சூழ்நிலைக்கு முகம் கொடுத்து வந்தனர். கல்லூரி நேரங்களில் புலிகள் வழமையாக வந்து அலுவல்களைக் குழப்புவார்கள். ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கு மாணவர்களை அழைப்பார்கள். தமது பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக பெற்றோர்கள் ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் தயவை நாடி நிற்பார்கள். தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கும் நிலையில் ஓர் அதிபரால் என்னதான் செய்ய முடியும்? அவரால் செய்யக்கூடியதெல்லாம் புலிகளின் கோரிக்கைகளுக்கு அடிபணிந்து செயற்படுவதுதான்.

சமாதான முயற்சிகளின் ஆரம்ப காலத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் ஸ்ரீபதி, புலிகளின் உத்தரவுகளை எதிர்க்க முனைந்தார். 2002ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆம் திகதி புலிகளின் யாழ்ப்பாண அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி வடமராட்சியில் கல்லூரி அதிபர்களின் கூட்டமொன்றினைக் கூட்டினார். அங்கு அவர் ஆற்றிய உரை அதிபர் ஸ்ரீபதியைக் குறிப்பதாகவும் இருந்தது. "வயல் வெளிகளில் நெல் முளைக்கும்போது அவற்றையும் களைகளையும் வேறுபடுத்திக் காண முடியாது. சில காலம் செல்ல களைகள் பூக்கத் தொடங்கும். அப்போது அவற்றைத் தெளிவாக இனம் கண்டு கொள்ள முடியும். அப்போதுதான் களைகள் பிடுங்கப்பட வேண்டிய தருணம் உருவாகும்" என்று இளம்பரிதி கூறினார். புரிந்துணர்வு ஒப்பந்தம் தேவையற்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதைத் தடுத்து விடுமென்று பாடசாலை அதிபர்கள் கனவுகாணக் கூடாதென்று இளம் பரிதி எச்சரித்தார். இரண்டு நாட்களின் பின்னர் வீட்டிலிருந்து இரவு நேரத்தில் கடத்தப்பட்ட ஸ்ரீபதி மயானமொன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டு தாக்கப்பட்டார். இரத்தம் வடிந்த நிலையில் காணப்பட்ட ஸ்ரீபதி, வீட்டுக்குச்சென்று பின்னர் அங்கிருந்து ஆஸ்பத்திரிக்குச் சென்றார். இது சகல அதிபர்களுக்குமே ஓர் எச்சரிக்கையாக விடுக்கப்பட்டது.

இராஜதுரையைப் பொறுத்தவரை மிகக் கவனமாகச் செயற்படுவதற்கு வழியிருந்தது. 1985ஆம் ஆண்டு சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஆனந்தராஜா புலிகளால் கொலை செய்யப்பட்டதையும் ஹாட்லிக் கல்லூரி அதிபருக்கு அண்மையில் நேர்ந்ததையும் நன்கு தெரிந்தவர் என்பதால் அவர் உறுதியாக இருந்திருக்க வேண்டும். யாழ்.மத்திய கல்லூரி மெதடிஸ் த மிஷனரிகளால் நிறுவப்பட்டது. யாழ்ப்பாணத்தின் முன்னணிக் கல்லூரிகளிலொன்று. இராஜதுரையின் சகோதரரான நடராஜா பனை அபிவிருத்திச் சபையை கட்டியெழுப்புவதில் முன்னணிப் பங்கு வகித்தவர். 1996ஆம் ஆண்டு யுத்தத்தினால் சேதமாக்கப்பட்ட யாழ்.மத்திய கல்லூரியை மீள நிர்மாணிப்பதில் பெரும் பணியாற்றினார். கணனி வசதிகள் போன்ற பல வசதிகளை கல்லூரிக்கு செய்து கொடுத்ததால் ஏனைய பாடசாலைகளின் அபிமானத்தை அவர் பெற்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பழைய ஆதரவாளர் பரம்பரையைப் போன்று முற்போக்கு சிந்தனையையும் கொண்டிருந்ததால் இராஜதுரை புலிகளை வெறுத்தார். என்றாலும் அவர் மிகக் கவனமாக செயற்பட்டார். உதாரணத்திற்கு ஒன்றைக் கூறமுடியும். அன்ரன் பாலசிங்கத்தின் 'யுத்தமும் சமாதானமும்' என்ற நூல் வெளியீட்டு விழா யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றபோது, அதில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்கும் புலிகள் அழைப்பு விடுத்திருந்தனர். அதில் கலந்து கொண்ட இராஜதுரை நூலின் பிரதியொன்றினை விலை கொடுத்து வாங்கினார்.

பாடசாலை விடயங்களில் புலிகள் தலையிட்டபோது அவர்களுக்கு எதிராக இராஜதுரை செயற்படவில்லை. புலிகள் அழைக்கின்றபோது மாணவர்களை அனுப்பி வைக்க வேண்டுமென்ற உத்தரவுக்கு அவர் அடிபணிய மறுத்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஊடாக மத்திய கல்லூரிக்குப் பணம் அனுப்பப்பட்டமையும் புலிகளுக்கு ஆத்திரத்தை மூட்டியது. அவர் இறப்பதற்குச் சில காலத்துக்கு முன்னர் புலிகளின் நிதர்சனம் இணையத்தளத்தில் அவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. அவர் கிளிநொச்சிக்குச் சென்று தனது பாடசாலையின் தேவைகள் குறித்தும் அமைச்சர் டக்ளஸ்

**சமாதான முயற்சிகளின் ஆரம்ப காலத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் ஸ்ரீபதி, புலிகளின் உத்தரவுகளை எதிர்க்க முனைந்தார். 2002ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆம் திகதி புலிகளின் யாழ்ப்பாண அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி வடமராட்சியில் கல்லூரி அதிபர்களின் கூட்டமொன்றினைக் கூட்டினார். அங்கு அவர் ஆற்றிய உரை அதிபர் ஸ்ரீபதியைக் குறிப்பதாகவும் இருந்தது. "வயல் வெளிகளில் நெல் முளைக்கும்போது அவற்றையும் களைகளையும் வேறுபடுத்திக் காண முடியாது. சில காலம் செல்ல களைகள் பூக்கத் தொடங்கும். அப்போது அவற்றைத் தெளிவாக இனம் கண்டு கொள்ள முடியும். அப்போதுதான் களைகள் பிடுங்கப்பட வேண்டிய தருணம் உருவாகும்" என்று இளம்பரிதி கூறினார். புரிந்துணர்வு ஒப்பந்தம் தேவையற்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதைத் தடுத்து விடுமென்று பாடசாலை அதிபர்கள் கனவுகாணக் கூடாதென்று இளம்பரிதி எச்சரித்தார்.**

தேவானந்தா வழங்கிய நிதியுதவி குறித்தும் இளம்பரிதிக்கும் புலிகளின் யாழ்ப்பாணக் கல்விப் பொறுப்பாளர் அருள் மாஸ்டருக்கும் விளங்கப்படுத்தினார். அருள் மாஸ்டர் புலி இயக்கத் தலைவருடன் பேசிய பின்னர் இராஜதுரையின் உயிருக்கு ஆபத்தில்லையென்று உறுதியளித்தார். ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி இராஜதுரை கொல்லப்பட்டார். அவரைக் கொன்றவர்கள் புலிகள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவர்களும் இராஜதுரையைச் சிறந்த கல்விமான் என்று மதித்தவர்களும் கிளர்ந்தெழுந்து பாரிய ஆர்ப்பாட்டப் பேரணிகளை யாழ் நகரில் நடத்தினர். இது புலிகளுக்கு ஆத்திரத்தையூட்டியது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் சிவகடாட்சத்திற்கு இராஜதுரையைப் போல பெரும் செல்வாக்கு இருக்கவில்லை. இவர் கடந்த காலங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தோடு நெருங்கிய தொடர்புளைக் கொண்டிருந்தவர். அவரது மருமகன் நகுலனைப் போன்று அவர் செயற்பட்டார். இதனால் இராஜதுரையை விட புலிகளுடன் மேலும் இணக்கத்திற்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் சிவகடாட்சத்திற்கு இருந்தது. இல்லையேல் உயிர் வாழ முடியாது என்பது அவருக்குத் தெரியும். ஆனால் மனதில் பட்டதை அப்படியே பயமின்றிச் சொல்லக் கூடியவரென்று அவரைப் பற்றி அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகின்றனர். சமூக சேவைகளில் ஈடுபட்ட ஒரு மனிதர் என்பதால் புலிகள் தமக்காக பணிபுரியுமாறு அவரை நிர்ப்பந்தித்தனர். ஆனால் அவர் தனது உரைகளில் புலிகளுக்கு ஆதரவாக தீவிரமாகப் பேசியவரல்ல. ஒக்டோபர் 11ஆம் திகதி சிவகடாட்சம் கொல்லப்பட்டார். இது குறித்து செய்தி வெளியிட்ட தமிழ் நெற் இணையத்தளம், தமிழ் ஆர்வலர் யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். கோப்பாய் வடக்கிலுள்ள சிவகடாட்சத்தின் வீட்டுக்குச் சென்ற இரு துப்பாக்கித்தாரிகள் அவரை சுட்டுக்கொன்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுவிட்டனர் என்று குறிப்பிட்டிருந்தது. அவரை தமிழ் எழுச்சிப் பேரவையின் கோப்பாய் அமைப்பாளர் என்றே அந்த இணையத்தளம் குறிப்பிட்டிருந்தது. அதாவது ஒரு கல்லூரி அதிபர் மீதோ அல்லது கிராமத் தலைவர் மீதோ புலிகள் நிர்ப்பந்திக்கும் வேலையை விட இது மிகவும் குறைந்ததாகும். மறுநாள் மாணவர்கள் தாமாகவே ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். ஆனால், புலிகள் இதில் காத்திரமான பங்கெதையும் வகிக்கவில்லை. இந்த ஆர்ப்பாட்டங்களில் டயர்களை எரித்தல், கற்களை வீசுதல் போன்றவற்றை மேற்கொள்ளும் புலிகளின் வழமையான கும்பல்கள் இதில் சம்பந்தப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

புலிகளின் ஊடகங்களில் வெளிவந்த மாறுபட்ட தகவல்களின் விளைவாக சிவகடாட்சத்தை புலிகளே கொன்றனர் என்று உள்ளூர் புலி இயக்க உறுப்பினர்கள் கருதத் தலைப்பட்டனர். பின்னர் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் தலைமை சிவகடாட்சத்திற்கு 'நாட்டுப்பற்றாளர்' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது. சிவராம், குமார் பொன்னம்பலம், பேராசிரியர் எபநேசர் போன்றவர்களுக்கு புலி இயக்கத் தலைவர் பிரபாகரன் மாமனிதர் பட்டங்களை வழங்கி கௌரவித்தார். புலிகளின் யாழ்ப்பாண அரசியல் பிரிவு சிவகடாட்சத்திற்கும் நாட்டுப்பற்றாளர் பட்டம் வழங்கிய பொழுது, கோப்பாய் பிரிவு எழுச்சிப் பேரவையின் தலைவரென்றே குறிப்பிட்டிருந்தது.

இதற்குப் புறம்பாக தனது பாடசாலைக் கட்டிடங்களைப் புனரமைப்பதில் GTZ அமைப்போடு இணைந்து செயற்பட்டதால் அவரை நல்ல அதிபரென்று பலர் பாராட்டினர். அவரைச் சந்தித்துப் பேசியவரெல்லாம் அவரை புலி இயக்கத்தின் தத்துவார்த்தவாதியென்று எவரும் குறிப்பிட்டதில்லை. பாடசாலை விவகாரங்களில் அனைவருடனும் ஒத்துழைத்துச் செயற்பட்டார். பண்பாளர் என்றும் அவர் கருதப்பட்டார். புலிகளின் நினைவு தின நிகழ்ச்சிகளில் மக்கள் கலந்து கொள்ளவோ அல்லது தலைமை தாங்கவோ நிர்ப்பந்திக்கப்படுவதுண்டு. கிராமம் கிராமமாகவும் வாரா வாரமும் இவ்வாறு நடைபெறுவதுண்டு. இவ்வாறு கோப்பாயில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்ளுமாறு சிவகடாட்சம் நிர்ப்பந்திக்கப்பட்டமை ஒன்றும் புதிய விடயமல்ல. அவர் புலிகளைப் பொறுத்தவரை மிகவும் சாதாரண மனிதர். எனவே இராணுவமோ ஏனையவர்களோ அவர் மீது இலக்கு வைக்க வேண்டிய தேவை கிடையாது. பொங்கு தமிழ் நிகழ்ச்சிதான் அவரைக் குறி வைக்கக் காரணமென்றால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், உபவேந்தர்கள், அரசாங்க அதிபர்கள், மதகுருமார்கள் ஏன் புத்தபிக்குகள் என்று கூட இலக்கு வைக்கப்பட வேண்டிய பெரும் புள்ளிகள் பலர் இருக்கின்றனர். அப்படியென்றால் பொங்கு தமிழ் மேடைகளிலிருந்து யாழ்ப்பாண மண்ணுக்கு 40,000 படை வீரர்களை உரமாக்குவோம் என்று பயமுறுத்திய பல பெரும் புள்ளிகள் இருக்கின்றனர். இவ்வாறு பயமுறுத்தும் பேச்சுகளை நிகழ்த்தியவரல்ல சிவகடாட்சம்.

சிவகடாட்சம் கொல்லப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தோடு வழமையாகத் தொடர்பு கொள்ளும் புலிச் செயற்பாட்டாளர்கள் சிவகடாட்சம் தமது இயக்கத்தவரால் தான் கொல்லப்பட்டாரென்று நினைத்துக் கொண்டதால் ஒன்றும் செய்ய முனையவில்லை. இராஜதுரை கொல்லப்பட்ட பின்னர் தான் நெருக்கடியொன்று உருவாகி வருவதைப் புலிகளின் யாழ். அரசியல் பிரிவு உணர்ந்து விழித்துக் கொண்டது. மாணவர்கள் புலிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணிகளில் தாமாகவே ஈடுபட்டதை புலிகள் உணர்ந்து கொண்டனர். அதன் பின்னர் தான் மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை வலுவிழக்கச் செய்யும் முகமாக தமது முகவரமைப்புகளை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுமாறு புலிகள் தூண்டினர். சிவகடாட்சத்தை புலிகளின் முக்கியஸ்தர் என்று காட்டுவதற்காகவே 'நாட்டுப் பற்றாளர்' எனப் பட்டமளித்தனர். இப்பட்டத்தை வழங்கியவர் பிரபாகரனல்ல. வழமைக்கு மாறாக புலிகளின் யாழ்ப்பாண அரசியல் பிரிவே இதனை வழங்கியது. ஆனால் இந்தப் பட்டத்தை புலிகள் இயக்கமே வழங்கியதாக உதயன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. பெரும் தலைவரே இப்பட்டத்தை வழங்கினாரென்று சாதாரண வாசகரொருவர் நினைத்துக் கொள்ளும் விதத்தில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

புலிகளின் புலனாய்வுப் பிரிவின் கட்டுப்பாட்டிலிருக்கும் நிதர்சனம் இணையத்தளம் சிவகடாட்சத்தை கோப்பாய் பிரிவு தமிழ் எழுச்சிப் பேரவையின் செயலாளரெனக் குறிப்பிட்டிருந்தது. இளம்பரிதியால் தான் இப்பட்டம் வழங்கப்பட்டிருப்பதால் அது ஒன்றும் முக்கியத்துவமிக்கதல்ல. 2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் காலமான பிரபாகரனின் மாமனாரான ஏரம்பு மாஸ்டருக்கும் இப்பட்டம் வழங்கப்பட்டிருந்தது. அவர் உயிருடனிருக்கும்போதே இப்பட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


இதை வழங்கியவரும் பிரபாகரனே. பொதுவாகப் பிரபாகரனே பட்டங்களை வழங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது. சிவகடாட்சத்திற்கு புலி இயக்கத்தின் சார்பாக ஏன் பட்டம் வழங்கவில்லையென்பது கேள்விக்குரியது.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

எனக்கு முதன்முதலாகக் கார் வாங்கிக் கொடுத்ததே திரு.பாலன் அவர்கள்தான். தமிழின்பாலும், தமிழ்க் கவிஞர்களின்பாலும், மிகுந்த காதல் உடையவர்.

அண்ணா அவர்களுக்கும். அவரது அமைச்சரவைக்கும் பாலன், விஜயா கார்டனில் விருந்தளித்தபோது, அதை ஒரு குடும்ப நிகழ்ச்சியாக நினைத்து நானும் அதில் கலந்து கொண்டேன்.



விருந்து நடந்து கொண்டிருந்தது. விஜயா கார்டனை ஒட்டிய ஒரு மர நிழலில் நானும், என்னுடைய நெருங்கிய நண்பருமான திரு.முல்லை சத்தியும் உரையாடிக் கொண்டிருந்தோம்.

திரு.முல்லைசத்தி, கல்லக்குடி போராட்டத்தில், கலைஞரோடு தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்தவர்.

முல்லைசத்தியோடு, நான் பேசிக் கொண்டிருக்கையில், அண்ணா அவர்கள் எங்கள் அருகே வந்தார்கள். முல்லைச்சந்தியிடம் அவரைப்பற்றியும் அவர் சகோதரர் திரு. முல்லை வடிவேலு பற்றியும் குசலம் விசாரித்துவிட்டு, அண்ணா என் நலம் குறித்தும் அன்போடு வினவினார்கள்.

'வாலி', எம்.ஜி.ஆர் படத்துக்கு நீங்க நிறையப் பாட்டெழுதுறீங்கன்னு கேள்விப்பட்டேன். ரொம்ப மகிழ்ச்சி' என்று தோளைத் தட்டிக் கொடுத்துப் பேசிய அண்ணா அவர்கள், எம்.ஜி.ஆரைப் பற்றிக் குறிப்பிட்டு என்னிடம் பேசும்போது, கீழ்க்கண்ட வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொன்னார்கள்.

'TRY TO BE HIS GOOD BOOKS'

இதுதான் அண்ணா அவர்கள். எனக்கு அன்போடு உபதேசித்த வாக்கியம். தான் உரையாடல் எழுதிய 'நல்லவன் வாழ்வான்' படத்திலும் 'எதையும் தாங்கும் இதயம்' படத்திலும், நான் பாடல் எழுதப் பெரிதும் காரணமாயிருந்தத அண்ணா அவர்கள், நான் திரைத்துறையில் நீடித்து நிற்க வேண்டும். என்கிற நல்லெண்ணத்தில் அவ்வாறு அறிவுரை கூறினார்கள்.

அந்த அறிவுரையை, அட்சரம் பிசகாமல் ஏற்று நான் அதன் அடியொற்றி நடநத்தால்தான், எம்.ஜி.ஆர். அவர்கள்பால் எனக்கிருந்த நட்பை நான் இறுதிவரை இற்றுப் போகாமல் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது.

ஏறத்தாழ ஏழாயிரம் பாடல்களைக் கடந்து இன்னமும் நான் இறையருளால் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன் என்றால், பல்வேறு பெருமக்களின் நட்பையும் வாழ்த்தையும் நான் பெறற்கரிய செல்வமாகப் பெற்று சேமித்து வைத்துக் கொண்டிருப்பதுதான் தலையாய காரணம் என்று தாழ்மையோடு சொல்லிக் கொள்கிறேன்.

இசையமைப்பாளர்களிலும், இயக்குநர்களிலும் மூன்று தலைமுறைகளைக் காணும் வாய்ப்பு, என் தாய் செய்த தவத்தால் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அதுபோல், சக கவிஞர்களிடமும் எனக்கு எந்தக்காலத்திலும் காழ்ப்போ, கசப்போ எள்ளளவும் என் உள்ளத்தில் ஏற்படாத அளவு ஒரு பக்குவத்தில் என் மனதைப் பழக்கி வைத்திருக்கிறேன்.

திருவாளர்கள் விஸ்வநாதன் - ராமமூர்த்தி காலத்திலேயே நான் நெருக்கமாகப் பழகித் தொழில் புரிந்த இசையமைப்பாளர்கள் இருவர். ஒருவர் திரு. எஸ்.எம். சுப்பையா நாயுடு அவர்கள். மற்றவர் திரு.வி.குமார்.

திரு S.M.S. நாயுடு அவர்களின் இசையமைப்பில், கர்நாடக சங்கீதம் கொடிகட்டிப் பறக்கும். மிகச் சிறந்த இசைமேதை மட்டுமல்ல; அவர் மிகச் சிறந்த மனிதரும் கூட.

'கொஞ்சும் சலங்கை' படத்தில் இடம்பெற்ற 'சிங்கார வேலனே! தேவா' என்னும் பாடல் திரு. சுப்பையா நாயுடுவின் திருநாமத்தைக் காலம் உள்ளளவும் சொல்லிக் கொண்டிருக்கும்.


(தொடரும்.......)




---

**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....**

## நடாஷா என்கிற உளவாளி




சோவியத் நிர்வாகத்தின் தலைமை அதிகாரிகள் செயல்படுகின்ற இடம் மாஸ்கோவிலுள்ள கிரெம்ளின். நடாஷா அங்கேதான் வேலை பார்த்தாள். கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தில் நம்பிக்கை இல்லாதவளைப் போலக் காணப்பட்டாள். அவளுக்குப் பல்வேறு ஆசைகளைக் காட்டி அமெரிக்கர்கள் அவளைத் தங்களின் கையாளாக ஆக்கிக் கொண்டார்கள். அவளுக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் மாஸ்கோவிலேயே இரகசியமாக அமெரிக்கர்கள் உளவுப் பயிற்சியும் அளித்தார்கள். சரியான மனிதர்களை எவ்வாறு தேர்ந்தெடுத்து உளவு வேலைக்கு அமர்த்திக் கொள்வது போன்ற விஷயங்கள் அவளுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டன. அவள் தனக்கு நெருக்கமானவர்கள் சிலரைச் சரிக்கட்டி கிரெம்ளினுக்குள்ளேயே முக்கிய இடங்களில் வேவுகாரர்களை உருவாக்கினாள்.

நடாஷா ரொம்பவும் கெட்டிக்காரத்தனமாகச் செயல்பட்டாள். ஒருமுறை தன்னுடைய கையாளாக ஒரு ஆளை நியமித்துவிட்டால், பிறகு அந்த ஆளுடன் அவள் நேரடி தொடர்பு வைத்துக்கொள்வது கிடையாது. அவளுக்காகப் பணியாற்றிய சிலருக்கு, தாங்கள் கொடுக்கின்ற தகவல்கள் அந்நிய நாடுகள் தெரிந்துகொள்ளக் கூடாத இரகசியங்கள் என்று கூடத் தெரியாது. அவளுடைய கையாட்கள் தகவல்களை நுண்ணிய படங்களாக (Micro Film) எடுத்து நூல் நிலையத்திலிருந்து படிக்க எடுத்துச் செல்லும் புத்தகத்துள் வைத்து மறுபடியும் அந்தப் புத்தகத்தை நூல் நிலையத்திலேயே திருப்பி வைத்து விடுவார்கள். தொடர்பு மனிதர்கள் அந்த நூலை எடுத்துச் சென்று படங்களை அப்புறப்படுத்தி தாங்கள் கொண்டு செல்லும் நூலோடு எடுத்துப் போய் விடுவார்கள்.

ரஷ்ய உயர் மட்ட அதிகாரிகள் மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகளைத் தெரிந்து கொள்ள நடாஷா ஒரு யுக்தி செய்தாள். பெண்களின் காலணியின் அடிப்பகுதியில் பதிவு கருவிகளை மறைத்து வைக்கச் செய்தாள். நம்பிக்கையான மூன்று பெண்களிடம் இந்த வேலையை ஒப்படைத்தாள். இந்த ஏற்பாட்டின் மூலம் அந்த மாநாட்டில் பேசப்பட்ட அனைத்து விஷயங்களையும் அமெரிக்க உளவு நிறுவனத்தால் அறிந்து கொள்ள முடிந்தது.

ஒரு சமயம் நடாஷா மிக இரகசியம் என்று போடப்பட்ட கோப்பு ஒன்று தன்னுடைய மேலதிகாரியின் மேஜை மீது இருப்பதைக் கவனித்தாள். மிக முக்கியமான ஆராய்ச்சி பற்றிய தகவல்கள் அடங்கிய கோப்பு அது என்று மேலதிகாரி அவளிடம் தெரிவித்தார். அதில் என்ன இருக்கிறது என்று தெரிந்துகொள்ள நடாஷாவுக்கு ரொம்பவும் ஆசை. ஆனால் அந்த முயற்சி எவ்வளவு ஆபத்தானது என்பதையும் அவள் அறிவாள். அதிலுள்ள. விஷயங்களை நுண்ணிய படங்களாக எடுத்து அமெரிக்க உளவாளிகளிடம் ஒப்படைக்க அவள் ஆசைப்பட்டாள்.

மேலதிகாரி அவசர வேலையாக தான் வெளியில் போக வேண்டும் என்று கூறிவிட்டு, கூட இருந்த சக ஊழியர் ஒருவரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு வெளியேறினார். ஆனால் அவர் வெளியேறுவதற்கு முன்னதாகவே பாதுகாப்பு அதிகாரி ஒருவர் முன்னெச்சரிக்கையாக அந்த அறைக்குள் வந்து உட்கார்ந்து விட்டார்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)


---

**நடுத்தர** வயதுகளை அடைகின்ற திருமண மான பெண்களில் பலர் ஒரு விதமான பிரச்சி னைக்கு ஆட்படுகின்றனர். அதாவது இளம் பருவத்தில் இருந்ததைப் போன்றே தனது கண வரின் அவதானத்தைத் தன் மீது தக்க வைத்துக் கொள்வது எப்படி? என்பதுதான் அந்தப் பிரச்சினை.

இளம் பருவத்தில் தனது கவர்ச்சி மிகு உடலால் வளைத்துப் போட்டுக் கொண்ட தன் கணவனை நடுத்தர வயதாகும் போது கட்டிப் போட்டுக்கொள்வது இவர்களைப் பொறுத்த வரையில் ஒரு பயங்கர விடயமாக உள்ளது.

# ஆண்களை வசீகரிக்கும் பெண்களின் வாசனைகள்

எனவே, இப் பிரச்சினைக்கு தற்போது மேலைத் தேய விஞ்ஞானிகள் ஒரு தீர்வைக் கண்டுபிடித் துள்ளனர். இவர்கள் கண்டு பிடித்துள்ள ஒரு வகை இரசாயனத் திரவத்தை நடுத்தர வயதுப் பெண்கள் பூசிக்கொண்டால், இளம் பெண்களிடம் இழுபட்டுச் செல்வதைப் போல் ஆண்கள், நடுத்தர வயதுடைய பெண்களின் பால் வசீகரிக்கப்படுவர் என்ற விடயம் இப்போது தெரியவந்துள்ளது.



பெண்களுக்கு உண்மையிலேயே இது ஒரு அரிய கண்டுபிடிப்பாகும் என்பதில் வியப்பில்லை.

அமெரிக்க விஞ்ஞானியான வினிபிரட் கட்லர் என்பவர் இந்த அரிய வசிய மருந்தைக் கண்டு பிடித்துள்ளார். இதனை அமெரிக்க ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள ஜோஆன் பிலீபில் மற்றும் சுயான் ரேக்கோ ஆகியோர் பரிசீலனை செய்து பார்த்துள்ளனர்.

இந்தப் பரிசீலனை சம்ப வமும் சுவாரஸ்யமானது. ஆய்வாளர்கள் இந்த இரசா யனத்தை வாசனைத் திரவியத் துடன் கலந்து வைத்துக கொண்டு, நடுத்தர வயதுகளைக் கொண்ட 44 பெண்களை ஆய்வுக்கு உட்படுத்திக் கொண்டனர். இதில் பாதிப் பேருக்கு மேற்படி அரிய மருந்து வழங்கப்பட்டதுடன் மீதிப் பேருக்கு வெறும் வாசனைத் திரவியம் மட்டுமே வழங்கப்பட் டுள்ளது. ஆய்வுக்கு உட்படுத்தப் பட்ட பெண்கள் தங்களுக்கு வழங்கப்பட்டது என்ன என்பதை அறியவில்லை. வெறும் வாசனைத் திரவியம் என்பது மட்டுமே அவர்களுக்குத் தெரியும்.



இதனைத் தினமும் பூசும்படியும் தங்களது துணைவர்களுடன் கொள்கின்ற பாலியல் உறவுகள் தொடர்பான தகவல்களை ஒரு குறிப் பேட்டில் தினமும் எழுதிக் கொள்ளும்படியும் இப் பெண்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட் டுள்ளன.



6 வாரங்களுக்குப் பின்னர் கிடைத்த தகவல்கள் மிகவும் விசித்திரமானவையாகும். மேற்படி இரசாயனக் கலவையுடனான வாசனைத் திரவியத்தைப் பயன்படுத்தியிருந்த பெண்களில் நூற்றுக்கு 41 வீதமானவர்கள் தங்களது துணைவர் களுடன் முன்பைவிட உயரிய பாலியல் இன்பத்தைக் கண்டதாகக் குறிப்பேட்டில் எழுதி இருந்தனர். வெறும் வாசனைத் திரவியத்தைப் பயன்படுத்தியவர்களில் நூற்றுக்கு 14 வீதமானவர் களுக்கும் அவ்வாறான அனுபவங்கள் ஏற்பட்டி ருந்தன. இரசாயனக் கலவையைப் பயன்படுத்திய 61 வீதமானப் பெண்கள் ஏனைய நாட்களைவிட பாலியல் ரீதியில் நெருக்கம் கொண்டிருந்ததாகவே எழுதி இருந்தனர்.

இந்த இரசாயனம் என்ன? இதனை வெளிப் படுத்துவதை ஆய்வாளர்கள் மறுக்கின்றனர்.

இதுவரையில் இவர்கள் இதற்கான பேடன்ட் அனுமதிப் பத்திரத்தைப் பெறாமையே இதற்குக் காரணமாகும்.

எனினும் இவர்கள் முதன் முதலில் இதனை, பெண்களின் அக்குல்களில் வழியும் வியர்வையில் இருந்து கண்டு பிடித்துள்ளதாகத் தெரியவருகிறது.

உண்மையில் ஆய்வாளர்கள் தற்போது இதனைச் செயற்கையாகத் தயாரித்து வருகின்ற போதிலும், பெண்களின் வியர்வையில் உள்ள இயற்கைத் தன்மையில் இருந்தே கண்டுபிடித் துள்ளனர். பெரோமோன (Pheromone ) எனக் கூறப்படுகின்ற இந்த இரசாயனத்தின் மூலம் இளம் பெண்களால் ஆண்களின் பாலியல் உணர்வு களை மிக அதிகளவில் தூண்ட இயலும்.

'பெரோமோன' என்றால், மனிதன் உட்பட ஏனைய மிருகங்களின் உடம்பினுள் இயற்கையாகவே சுரக்கப்படுகின்ற ஒருவகை இரசாயனமாகும். இது வியர்வைகள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. தனது வர்க்கத்தில் இருக்கின்ற ஏனைய உறுப்பினர்களுக்கு எதையேனும் தெரியப்படுத்துவதற்காக அல்லது அசைவுகளை வெளிப்படுத்துவதற்காக இந்த இரசாயனம் பயன்படுகின்றது.

அழகு, பேச்சு, ஆடை அணிகள் போன்ற வற்றை உபயோகப்படுத்துகின்ற மனிதனுக்கு அவனின்பால் ஏனையவர்களின் அவதானங்களை ஈர்த்துக் கொள்வதற்கு இந்த இரசாயனம் தேவைப்படாது என்றாலும் மிருகங்களுக்கு இது இன்றியமையாததாகும்.

பெரோமோனவின் வாசனையானது எமது மூக்குக்கு எட்டக்கூடிய ஏனைய வாசனைகளில் இருந்தும் மாறுபட்டது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதில் இன்னொரு விடயம் என்னவென்றால் இந்த இரசாயனத்தின் மூலம் ஏற்படுகின்ற மாற்ற மானது ஏற்கனவே கொண்ட அனுபவம் அல்ல என்பதுதான்.

அதாவது மாடு, பன்றி போன்ற மிருகங்கள் அருகில் இருக்கும் பெண்பால் மிருகங்களில் இருந்து இந்த இரசாயன வாசத்தை அறிந்தவுடன் பாலியல் ரீதியில் தயாராகி விடுகின்றன. இம் மிருகங்கள், பெண்பால் மிருகங்களுடன் எந்த வகையிலான முன் அனுபவங்களும் இன்றியே பாலியல் உறவு கொள்கின்றன. எனவே இந்தள வுக்கு இந்த இரசாயனம் வேலை செய்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

ஆதிகால மக்கள் தங்களது பாலியல் செயற்பாடுகளுக்கு இந்த இரசாயனத்தையே பெரிதும் நம்பி இருந்திருக்கக் கூடும். எனினும் பாலியல் கவர்ச்சி தொடர்பில் கால ஓட்டத்தில் இன்று பல்வேறு முறைமைகள் ஏற்பட்டிருப்பதால் இந்த இரசாயன வித்தை கண்டு கொள்ளப் படாமல் விடப்பட்டுள்ளது.

எனினும், பெண்களின் பாலியல் உறவு தயார் நிலைகளை ஆண்களுக்கு உணர்த்துவதற்கு இந்த இரசாயனம் இன்றும் உதவி வருகின்றது என்கிறார் அமெரிக்க, டெக்சாஸ் பல்கலைக் கழகத்தின் மனோதத்துவ நிபுணரான தேவேந்திர சிங்.

இந்த நிலையில் இந்த இரசாயனக் கலவையைப் பயன்படுத்த இன்று பல வாசனைத் திரவிய தயாரிப்பாளர்கள் போட்டி போட்டு வருகின்றனர்.

-பாரூக்

# உரிமை மடல்... 27

**அன்பான எம் தேசத்து மக்களே!**
**புலம் பெயர்ந்து வாழும் எம் தாயக தேசத்து உறவுகளே!**
**என் உயிரினும் மேலான பாசமிக்க தோழர்களே!**

**உங்களுக்கு வணக்கம்!**

மக்களின் மகிழ்ச்சிக்காக மக்கள் என்ற கடலில் வாழும் மீன்கள் நாங்கள்!

மக்களை விட்டு.... மக்களின் நலன்களை விட்டு நாம் விலகியிருப்போமேயானால் என்றோ எமது முடிவுரை எழுதப்பட்டிருக்கும்!

மக்களின் தேவைகளை மறுதலிக்கும் ஆயுத பலாத்காரத்தில் எங்களது இருப்பும் உயிர்ப்பும் ஆதாரப்பட்டிருக்கவில்லை! மாறாக சவால்களுக்கும் மரண அச்சுறுத்தல்களுக்கும் மத்தியிலும் நாம் தொடர்ந்தும் மக்கள் என்ற கடலில் மக்கள் மீதான அக்கறையோடு வாழ்ந்து கொண்டிருப்பதால் மட்டுமே இன்னமும் எழுந்து முகமுயர்த்தி எம்மால் நிற்க முடிகிறது!

மறுபடியும் ஒரு உரிமை மடலில் உங்களோடு நான் மனம் திறந்து பேசுவதில் மனம் மகிழ்கின்றேன்!

ஈ.பி.டி.பி. யினராகிய எமது எண்ணங்கள் யாவும் மக்களாகிய உங்களது சமாதானம் குறித்தவைகளே!

எமது இலக்கு, வாழும் உரிமையைத் தொலைத்துவிட்ட எம் தாயக தேசத்தின் வாழ்வுரிமை குறித்தவைகளே!

எமது கனவுகள், இலட்சியங்கள் யாவும் இந்த மண்ணில் தமிழ் பேசும் மக்கள் உரிமைகளோடு முகமுயர்த்தி நிற்கவேண்டும் என்பது குறித்தவைகளே!

கடந்த கால சந்தர்ப்பங்களைத் தமிழ்த் தலைமைகள் சரிவரப் பயன்படுத்தியிருந்தால் எமது தாயக தேசத்தின் மக்களாகிய நீங்கள் இன்று சுதந்திரப் பிரஜைகளாக வாழ்ந்துகொண்டிருப்பீர்கள்!

ஆகவேதான் மாற்றத்தை விரும்பும் மக்களுக்காக நான் மாற்றுத் திட்டங்களோடு - மக்களாகிய உங்களோடு - மனம் திறந்து பேச விரும்புகிறேன்!

எமது மண்ணில் ஆற்றல் மிக்க அறிவும் விவேகமும் பயன்படுத்தப்பட்டிருந்தால் இன்று ஆயுதங்கள் ஆட்சி செய்திருக்காது! ஆயுத அச்சுறுத்தல் நிலைத்திருக்காது!..... மக்களின் அவலங்கள் நீடித்திருக்காது!

எமது போராட்ட வரலாற்றின் அனுபவங்கள் எமக்கு நிறைவான அறிவைத் தந்திருக்கின்றன. அந்த அறிவும் எங்களது ஆற்றலும் மக்களாகிய உங்களது ஆதரவும் முழுமையாக ஒன்றுபட்டு இருந்திருக்குமேயானால் இன்று எமது தேசம் சுதந்திரமடைந்திருக்கும்!

ஆகவேதான் நாம் அறிவுபூர்வமான.... ஆக்கபூர்வமான.... நடைமுறைச் சாத்தியமான எமது மூன்று கட்டத் திட்டத்தோடு மக்களாகிய உங்களது தாயக விடுதலைக்காகத் திடமாக எழுந்து நிற்கின்றோம்!

எமது மூன்று கட்டத் திட்டம் குறித்து மக்களாகிய நீங்கள் தெளிவுடன் இருப்பது குறித்து, நான் திருப்தியடைகின்றேன்! மக்களாகிய உங்களது விருப்பங்கள் எமது திட்டத்திற்கான அங்கீகாரத்தைத் தந்திருக்கின்றன!

நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறை என்பதால் மட்டுமே நாம் இந்த வழிமுறையைத் தேர்ந்தெடுத்திருக்கின்றோம்!

இந்த வாரம் மக்களாகிய உங்களில் பலரோடு நான் எமது திட்டம் குறித்து நேரில் சந்தித்துக் கதைத்திருந்தேன்! நான் சந்தித்தவர்களில் பலர் என்னோடு மனம் திறந்து கதைத்தார்கள்!

எமது மூன்று கட்டத் திட்டம் குறித்து தங்களது சாதகமான நம்பிக்கையைத் தெரிவித்திருந்தார்கள். ஈ.பி.டி.பி. யின் வழிமுறையை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்! ஆனாலும் மக்களின் பெயரால் அரசியல் நடத்தும் சிலர் மட்டும் ஈ.பி.டி.பி. யின் வழிமுறை நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்று என்று பிரசாரம் செய்து வருவதாகக் கவலையோடு என்னிடம் கூறியிருந்தார்கள்!

மக்களாகிய உங்களில் சிலர் நித்திரையில் இருக்கலாம்! ஆனாலும் அவர்களை என்னால் தட்டியெழுப்ப முடியும்! ஆனால் மக்களாகிய உங்களின் பெயரால் அரசியல் நடத்தும் சிலர் நித்திரை கொள்வது போல் நடிக்கின்றார்கள்! அவர்களை என்னால் தட்டியெழுப்ப முடியாது என நான் அவர்களிடம் கூறியிருந்தேன்.

ஏனென்றால், நடைமுறைச் சாத்தியமான வழிமுறை என்று கருதியதால் மட்டுமே நாம் அந்த மூன்று கட்டத் திட்டத்தைத் தேர்ந்தெடுத்திருந்தோம்! ஆனால், அவர்களோ எமது திட்டத்தை நடைமுறைச் சாத்தியமற்ற திட்டம் என்று கூறி வருவது, நித்திரை கொள்வது போல் நடிப்பதைப் போன்றதே என நான் கருதுகின்றேன்!

மக்களாகிய உங்களது வாழ்வியல் உரிமை குறித்து நாம் இதுவரை எதைச் சாதித்திருக்கின்றோம் என்பது குறித்து நீங்கள் தெளிந்த மனத்துடன் இருக்கின்றீர்கள்!

நாம் எவைகளைச் சாதித்தோமோ அவைகள் ஊர் பார்த்த உண்மைகளாக உங்கள் முன் சாட்சியங்களாக இருக்கின்றன!

மக்களின் பெயரால் அரசியல் நடத்தும் சிலர் ஈ.பி.டி.பி. எதைச் சாதித்தது என்று எம்மை நோக்கி ஒரு விரலை நீட்டும் போது.... எஞ்சியுள்ள நான்கு விரல்களும் அவர்களை நோக்கி நீள்கின்றன! இதற்குப் பதில் சொல்வார்களா அவர்கள் என்று உங்களிடம் நான் கேட்கின்றேன்!

1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது! அதன் பின்பு புலிகள் தவிர்ந்து ஈ.பி.டி.பி. உட்பட ஏனைய அமைப்புகள் யாவும் ஜனநாயக வழிக்கு வந்திருந்தன.

அப்போது புலிகளும் ஆரம்பத்தில் அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் ஜனநாயக வழிக்கு வருவதாகவே அறிவித்திருந்தனர்.

1997 இல் தமிழ்க் கட்சிகள் ஜனநாயக வழிக்கு வந்து பத்து வருடங்கள் என தமிழ் ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டிருந்தன.

ஜனநாயக வழிக்கு வந்து பத்து வருட நிறைவையொட்டி பல கட்சிகளும் கருத்து வெளியிட்டிருந்தன. அப்போது தமிழ் ஊடகம் ஒன்று சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களிடம் ஒரு கேள்வியைத் தொடுத்திருந்தது!

ஜனநாயக வழிக்கு வந்து பத்து வருடங்கள் ஆகின்றன! இதுவரை நீங்கள் எதைச் சாதித்திருக்கின்றீர்கள்? என அந்தப் பத்திரிகை யாளர் சுரேஸ் பிரேமச்சந்திரனிடம் கேள்வி கேட்டிருந்தார்!

அதற்குப் பதிலளித்திருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன், புலிகள் இதுவரை ஆயுதப் போராட்டம் நடத்தி எதைச் சாதித்திருக்கின்றார்கள் என்று பத்திரிகையாளரிடம் திருப்பிக் கேள்வி கேட்டிருந்தார்!

நியாயமான கேள்விதான்!..... ஆனாலும் சுரேஸ் பிரேமச்சந்திரனைப்போல் நான் ஒரு போதும் ஆயுதப் போராட்டத்தை முழுமையாக நிராகரித்தவன் அல்ல! இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முன்பு நடத்தப்பட்ட ஆயுதப் போராட்டம் நியாயமான ஒன்றுதான் என நான் உறுதியாகத் தெரிவிக்க விரும்புகிறேன்!

சம கால இருப்புக்காக, கடந்த கால நகர்வுகளை நான் கொச்சைப்படுத்த விரும்பவில்லை! சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்கள் ஆயுதப் போராட்டத்தை முழுமையாக நிராகரித்துக் கேள்வி கேட்டது போல் என்னால் கருத்துச் சொல்ல முடியாது!

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குப் பின்பு மட்டும் யுத்தம் நடத்தியதில் புலிகள் இதுவரை எதைச் சாதித்திருக்கிறார்கள்?.... இதைத்தான் நான் புலிகளிடம் கேட்க விரும்புகிறேன்!

புலிகள் இருந்ததையும் கெடுத்தார்களா?.... அல்லது இருப்பதை விட அதிகமாக ஏதாவது எடுத்தார்களா?...இதைத்தான் புலிகளை நோக்கி நான் கேட்க விரும்புகிறேன்!

ஜனநாயக வழிக்கு வந்து பத்து வருடங்களில் எதைச் சாதித்தீர்கள் என்று ஜனநாயக வழிக்கு வந்திருந்தவர்களைப் பார்த்து புலிகள் கேட்டிருந்த கேள்வி! அந்தக் கேள்வியைத்தான் ஒரு ஊடகவியலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களிடம் கேட்டிருந்தார்.

அதற்கு, புலிகள் ஆயுதப் போராட்டம் நடத்தி இதுவரை எதைச் சாதித்திருந்தார்கள் என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களால் புலிகளை நோக்கி திருப்பிக் கேள்வி கேட்க முடிந்ததே ஒழிய, தம்மால் எதை சாதிக்க முடிந்தது என்ற கேள்விக்கு அவரிடம் பதில் இருக்கவில்லை!

உண்மையாகவே எதைச் சாதித்தார்கள் என்ற கேள்விக்கு இரு தரப்பிடமும் நியாயமான பதில் இல்லை! எதையும் சாதிக்காமல் இருப்பதை விடவும் வாசல் தேடி வந்து நின்ற சந்தர்ப்பத்தைச் சரிவரப் பயன்படுத்தாமல் அதை உடைத்துச் சிதைப்பதென்பது மிகப் பெரிய வரலாற்றுத் துரோகமாகும்!

இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்பது ஒரு பொன்னான வாய்ப்பு! அதைச் சரிவரப் பயன்படுத்த வேண்டிய வரலாற்றுக் கடமை ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பிற்கும் புலிகளுக்கும் மட்டும்தான் பிரதானமாகக் கிடைத்திருந்தது. ஆனால் அதை அவர்கள் சரிவரப் பயன்படுத்தியிருக்கவில்லை!

சரி, பிழைகளுக்கு அப்பால் ஒரு அரசியல் தீர்க்கதரிசனத்தோடு தோழர் பத்மநாபா அவர்களும் தோழர்களும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்று அதற்குச் செயல் வடிவம் கொடுக்க முற்பட்டிருந்தார்கள் என்பது உண்மைதான்!

அதில் ஈ.பி.டி.பி. யினராகிய நாம் பங்கெடுக்க முடியாமல் ஜனநாயக விரோதமான முறையில் மாகாண சபையோடு சம்பந்தப்பட்ட கட்சிகளால் தடுக்கப்பட்டிருந்தாலும், அந்த ஒப்பந்தம் குறித்து நாங்கள் எமது சாதகமான சமிக்ஞையைச் காட்டியிருந்தோம்!

ஆனால் என்ன நடந்தது?.... ஈ.பி.ஆர். எல்.எவ். அதைச் சரியான நெறிப்படுத்தலின்றி தவறாகப் பயன்படுத்தியிருந்ததால் அந்த மாகாண சபைத் திட்டத்திலிருந்து மக்கள் அந்நியப்பட்டு தூரத்தில் நிற்க வேண்டியிருந்தது!

புலிகள் தங்களது சுயலாப அரசியலுக்காக அதை மூர்க்கத்தனமாக எதிர்த்திருந்ததால் மக்கள் அதை விட்டு அந்நியப்பட்டு தூரத்தில் நிற்க வேண்டியிருந்தது..

எமது அயலுலக நட்பு நாடாக விளங்கும் இந்தியாவின் மாபெரும் பங்களிப்போடு - அவர்களின் அனுசரணையோடு - உருவாக்கப்பட்ட மாகாணசபையை அடிப்படையாக கொண்ட எமது மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு நோக்கிய திட்டங்களை சரிவர சாதிக்க முடியாமல் போனமைக்கு யார் பொறுப்பு என்பதை மக்களாகிய நீங்கள் உணர்வீர்கள்!

சாதிக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் சாக்கடையில் வீசப்பட்டமைக்கு புலிகள்தான் பொறுப்பு! சுரேஸ் பிரேமச்சந்திரனையும் மத்திய குழு உறுப்பினராகக் கொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்புத்தான் பொறுப்பு!

சமாதானத்தின் மீதான மக்களின் நம்பிக்கைகள் உடைபட்டன! மக்களுக்கு அழிவுகளை மட்டும் தருகின்ற புதிய தென்பையும் நம்பிக்கையினையும் ஊட்டியிருந்த - மாகாண சுயாட்சி என்ற திட்டம் முளையிலேயே கருவறுக்கப்பட்டு திருகி எறியப்பட்டது.

மக்களாகிய உங்களது விருப்பங்களுக்கு மாறாகத் துப்பாக்கிகள் தீர்ப்பெழுதும் இருண்ட யுகம் மட்டும்தான் அப்போதும் எம் தேசமெங்கும் விரிந்து கிடந்தது!

மக்களுக்கு வழிகாட்ட வேண்டியவர்கள், நெறி தவறிய அரசியல் வழி முறையினால் மூட்டை முடிச்சுக்களோடு மக்களை விட்டு ஓடிப்போனர்கள்!

அப்போதுதான் அவலப்படுகின்ற மக்களின் குரல் கேட்டு ஈ.பி.டி.பி. இந்த மண்ணில் கால் பதித்தது!

மக்களாகிய நீங்கள் துயரங்களைச் சுமந்த படி.... எதிர்காலம் குறித்த நம்பிக்கையற்றவர்களாக - நடைப்பிணங்களாக - திரிந்துகொண்டிருக்கையில்....

மக்களைக் காப்பதற்கு யாருமற்ற நிலையில்..... சமாதான நம்பிக்கைகளை மறுபடி இந்த மண்ணில் கட்டியெழுப்புவதற்கு யாருமற்ற நிலையில்.....தமிழ் பேசும் மக்களை இருண்ட யுகத்தில் இருந்து அகன்ற வெளிச்சத்திற்கு அழைத்துச்செல்ல யாரும் அற்ற நிலையில்...

யுத்தம் நிறுத்தப்பட்டு மறுபடியும் இந்த மண்ணில் ஒரு சமாதான சூழல் மலருமா என்ற ஏக்கங்களோடு மக்களாகிய நீங்கள் காத்திருக்கையில்.......

ஈ.பி.டி.பி. யினராகிய நாங்கள் மக்கள் என்ற சமுத்திரத்தில் கால் பதித்திருந்தோம்!

நீண்ட கால ஆயுதப் போராட்டத்தின் அனுபவங்கள்..... மக்களின் நாடி நரம்புகளைப் பிடித்துப் பார்த்து நாங்கள் கண்டு கொண்ட உண்மைகள்..... எமது தாயக தேசத்தின் விடியலை விரைவாக வென்றெடுக்க வேண்டும் என்ற எங்களது திடமான நம்பிக்கைகள்.....

இவைகள்தான் எங்களை ஈ.பி.டி.பி. என்ற புதிய வடிவத்தில் மக்களாகிய உங்களுக்கு அறிமுகப்படுத்தியிருந்தது.

மக்களிடமிருந்து ஒரு ஊசியையோ நூலையோ எடுக்காதே!... மக்களை பலாத்காரப்படுத்தி எதையும் செய்விக்காதே!.... மக்களின் தேவைகளை அறிந்து தொண்டு செய்! மக்களை இம்சைப்படுத்தாதே! என்ற கட்டாய கட்டளைகளை எமக்கு நாமே பிறப்பித்துக்கொண்டே நாம் மக்களாகிய உங்களிடம் வந்திருந்தோம்!

ஏனென்றால் மக்களின் பெயரால், மக்களிடையே நின்று, மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்களினால் உங்களுக்கு ஏற்பட்டிருந்த அசௌகரியங்களை நாங்கள் அறிவோம்! அவர்களால் மக்களாகிய நீங்கள் சந்தித்திருந்த வேதனைகளும் சோதனைகளும் சொல்லில் அடங்காதவைகள்!

ஆகவேதான் பத்தோடு பதினொன்றாக அன்றி....மாற்றத்தை விரும்பும் மக்களுக்கான மாற்றுத் தலைமையாக நாங்கள் உங்களிடம் வந்திருந்தோம்!

1990ஆம் ஆண்டு யாழ். தீவுப் பகுதியைப் படையினர் மீட்டிருந்த போது தீவுப் பகுதி மக்களை நட்டாற்றில் கைவிட்டு ஓடிப் போனார்கள் புலிகள்! தீவுப் பகுதி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமல்ல என்று தாங்கள் மக்களை விட்டுத் தப்பியோடியமைக்குக் காரணம் கற்பித்திருந்தனர் புலிகள்!

1994ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் நடந்தது! உண்மையின் சாட்சியங்களாக.... ஊர் பார்த்த உண்மைகளாக... அந்த மக்களுக்கு சவால்களுக்கு மத்தியில் நாம் செய்திருந்த அளப்பரிய சேவைகளால் தான் ஈ.பி.டி.பி. யினராகிய எம்மைப் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக அவர்கள் தெரிவு செய்திருந்தனர்.

தேர்தலில் போட்டியிடுவது துரோகம்!.... தேர்தலில் மக்கள் வாக்களிப்பது துரோகம்!.... அதற்கு ஒத்துழைப்பு வழங்குவது துரோகம் என்று புலிகள் அப்போது அறிவித்திருந்தனர். அச்சுறுத்தல்களுக்கும் பெரும் சவால்களுக்கும் மத்தியில் நாங்கள் தேர்தலில் போட்டியிட்டிருந்தோம்!

ஜனநாயகப் பாரம்பரியங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை ஊட்டவும்.... ஒரு சரியான இலக்கு நோக்கி மக்களை அழைத்துச் செல்லவும்.... கிடைக்கின்ற பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் ஊடாக மக்களின் நாளாந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும்..... அர்த்தமுள்ள ஒரு அரசியல் தீர்வு நோக்கி நாம் நகர்வதற்காகவும்தான் அன்று நாம் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டிருந்தோம்!

அதன் பின்பு நடந்த ஜனாதிபதித் தேர்தல்.... உள்ளூராட்சிச் சபை தேர்தல்.... அதன் பின்பு மீண்டும் பாராளுமன்றத் தேர்தல் என்று நாங்களே முகமுயர்த்தி முன்னின்று போட்டியிட்டிருந்தோம்!

அப்போது பாராளுமன்றப் படிக்கற்களை மிதிப்பது துடக்கென்றும் துரோகம் என்றும் கூறி வந்தார்கள் புலிகள்!

எமது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களாகிய உங்களுக்கு எம்மால் செய்ய முடிந்த சேவைகள் அனைத்தையும் நாம் சாதித்துக் காட்டியிருந்தோம்! எமது வழி முறை கண்டு.... புதிய அணுகு முறை கண்டு..... நாம் செல்லும் பாதையின் மீது நம்பிக்கை கொண்டு மக்களாகிய நீங்கள் எங்களை நோக்கி வந்தீர்கள்!.... நாங்கள் உங்களை நோக்கி வந்தோம்!.....

மக்களாகிய உங்களுக்கும் ஈ.பி.டி.பி. யினராகிய எங்களுக்கும் ஏற்பட்டிருந்த இறுக்கமான உறவுகண்டு அச்சப்பட்டனர் புலிகள்! தங்களை விட்டு மக்களாகிய நீங்கள் முழுமையாக விலகிப் போய் விடுவீர்கள் என்ற அச்சம் புலிகளுக்கு ஏற்படத் தொடங்கியது!

அழிவுகளை மட்டும் தருகின்ற முடிவற்ற ஆயுதப் போராட்டத்தை விட்டு கால மாற்றத்தின் கட்டளையாக எழுந்து வந்த ஜனநாயக அரசியல் களம் நோக்கி மக்களாகிய நீங்கள் விருப்பமுடன் வருவது கண்டு புலிகள் அச்சப்படத் தொடங்கினார்கள்.

ஆகையால்தான் பாராளுமன்றப் படிகள் துடக்கென்றும் பாராளுமன்றப் பாதை துரோகம் என்றும் கூறி, அந்த வழிமுறையின் மீது அச்சுறுத்தல் விடுத்து வந்த புலிகள், இன்று அதே பாராளுமன்றத்திற்கு தங்களது பிரதிநிதிகளை அனுப்பிவைத்திருக்கிறார்கள்!



**எம் இனிய மக்களே!**

பாராளுமன்றத் தேர்தலின் ஜனநாயகப் பாரம்பரியங்களை மீறும் விதத்தில் புலிகள் தேர்தல் நடைமுறைகளைப் பயன்படுத்தியிருப்பது என்பது உண்மைதான்!.... ஆனாலும் அவர்களைப் பாராளுமன்றம் நோக்கி இழுத்து வந்தவர்கள் நாங்கள்!

சமாதானப் பேச்சுவார்த்தையினையும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் புலிகள் தங்களது சுயலாப வன்முறை அரசியலுக்குப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது உண்மைதான்!..... ஆனாலும் அந்த இலக்கு நோக்கிப் புலிகளை இழுத்து வந்தவர்கள் நாங்கள்!

இதுதான் மக்களாகிய உங்களது ஆதரவோடும் பங்களிப்போடும் ஈ.பி.டி.பி. யினராகிய நாம் செய்து முடித்திருக்கும் பிரதானமானதும் பெறுமதிமிக்கதுமான சாதனையாகும்!

நான் மறுபடியும் ஒரு விடயத்தை இந்த இடத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்!

நாம் முன்னெடுக்கும் நடைமுறைச் சாத்தியமான மூன்று கட்டத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் புனிதப் பயணத்தில் மக்களாகிய நீங்கள் கடந்த காலங்களை விடவும் கணிசமான அளவு ஒத்துழைத்து வந்தால் புலிகளையும் இந்த வழிமுறை நோக்கி இழுத்து வர முடியும் என்பது எனது திடமான நம்பிக்கையாகும்!

நாற்காலிக் கனவுகளுக்காக நாங்கள் பாராளுமன்றம் சென்றவர்களல்ல! வெறும் விளம்பரங்களுக்காக மட்டும் பாராளுமன்றத்தில் வீராவேச உரை நிகழ்த்தியவர்களும் அல்ல!

சொத்துக்கள் வாங்கிக் குவிக்கவும், சொந்த பந்தங்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கவும் நாங்கள் பாராளுமன்றக் கதிரைகளைப் பயன்படுத்தியவர்களல்ல.

பாலஸ்தீன மண்ணில் எந்த இலட்சியத்திற்காக நான் ஆயுதப் பயிற்சி எடுத்திருந்தேனோ, அந்த இலட்சியத்தை இன்னொரு மாற்று வடிவத்தில் அடைவதற்காகவே நாம் பாராளுமன்றம் சென்றவர்கள்!

நாங்கள் ஒன்பது பாராளுமன்ற ஆசனங்களோடு அதிகாரத்தில் இருந்தபொழுது தான், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்களினால் அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனை கொண்டுவரப்பட்டது!

நாங்கள் அக்கறை எடுத்திருக்காவிட்டால்.....

ஜனாதிபதி அவர்களது தீர்வு யோசனைக்கு நாங்கள் ஆதரவு வழங்கியிருக்காவிட்டால்.....

நாங்கள் மக்களாகிய உங்களது சார்பாக ஜனாதிபதி அவர்களிடம் கோரிக்கை விடுத்திருக்காவிட்டால் அந்தத் தீர்வுத் திட்டம் வரையப்பட்டிருக்காது!

புண்ணுக்கு வலியா?....

மருந்துக்கு வலியா?... ஜனாதிபதி அவர்களின் சமாதான எண்ணங்களுக்கு நாங்களும் உந்து சக்தியாக இருந்த காரணத்தினால் மட்டும்தான் அவரால் அந்தத் தீர்வுத் திட்டம் வெளியிடப்பட்டது.

பொறுப்பற்ற அரசியல் தலைமைகளைப்போல் நாங்களும் சுய லாப அரசியலுக்காக அதை எதிர்த்திருந்தால் ஜனாதிபதி அவர்கள் அத்திட்டம் குறித்து அக்கறை செலுத்தியிருக்கவேண்டிய தேவை இருந்திருக்காது!

ஜனாதிபதி அவர்களின் தீர்வுத் திட்டம் குறித்து நாம் சில திருத்தங்களோடு எங்களது மாற்று யோசனைகளையும் உள்ளடக்கவேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் மட்டும்தான் அதை ஏற்றிருந்தோம்!

மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு அரச தரப்பினர் எம்மைக் கேட்டிருந்தபோது, நாம் எமது மக்களாகிய உங்களது தலைவிதியை நிர்ணயிக்கும் நியாயமான அரசியல் தீர்வு குறித்து எமது மாற்று யோசனையினை 19 பக்கங்களில் தயாரித்து அரசிடம் சமர்ப்பித்திருந்தோம்!

*(தொடர்ச்சி 22ஆம் பக்கம் பார்க்க)*




கூடுந் திரவியத்தின் குவைகள் - திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள் - இவை
நாடும் படிக்குவினை செய்து .- இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்கக்...

- சுப்பிரமணிய பாரதியார்



# நாகர்களும் பகார் மரமும்



பாரதத்தின் வடகிழக்குப் பகுதியிலுள்ள நாகர்கள் பகார் மரத்தை மட்டும் வெட்டுவதில்லை. பகார் என்பது அடர்ந்த கிளைகளைக் கொண்ட ஆலமரத்தைப் போல் தோற்றமளிக்கும் ஒரு மரமாகும். இதையொட்டி ஒரு சுவாரஸ்யமான கதை உள்ளது.

ஒரு முறை நாகர் இனத்தைச் சேர்ந்த ஒரு வாலிபன் அடர்ந்த காட்டு வழியே சென்று கொண்டிருந்தான். அந்தக் காடு பெரிய மலைகளாலும், அடர்ந்து வளர்ந்த பெரிய மரங்களாலும் சூழப்பட்டிருந்தது. அந்தக் காட்டில் இரவு நேரத்தில் கொடிய பேய், பிசாசுகள் நடமாடுவது உண்டு. இந்தப் பேய்கள் மனிதனை முன்புறம் இருந்து தாக்குவதில்லை என்றும், பின்புறமாக வந்து அழுத்திப் பிடித்து கொன்று உண்டுவிடும் என்றும் கேள்விப்பட்டிருந்தான். சிறிது நேரத்தில் மாலை மங்கி, இரவு மெதுவாகப் பரவத் தொடங்கியது.

அந்தச் சமயம் திடீரென ஒரு சிறிய பேய் அவனைத் தாக்க முயற்சி செய்தது. ஆனால் சரியான நேரத்தில் அதைப் பார்த்துவிட்டதால், அந்த இளைஞன் அந்தப் பேயைத் தன் ஆயுதத்தால் தாக்கிக் கொன்று விட்டான். ஆனால் கொஞ்ச நேரத்தில் கும்மிருட்டு ஆகிவிடும் என்றும், பேய்களைத் தன்னால் இருட்டில் கண்டுபிடித்துத் தப்பிக்க முடியாது என்றும் தெரிந்து கொண்ட இளைஞன், ஏதாவது ஒரு பெரிய மரத்தின் மீது ஏறி ஒளிந்து கொண்டு இரவைக் கழிக்க எண்ணினான்.

உடனே அருகிலிருந்த வெண்மை நிறத்தில் பூக்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த ஒரு பெரிய மரத்தை அணுகி இரவில் தங்க இடம் கேட்டான். ஆனால் அந்த மரம் அவனுக்கு இடம் தர மறுத்து விட்டது. பேய்கள் இரவில் நடமாடும் போது அவனை இந்த மரத்தில் பார்த்து விட்டால் அவை அவனை மட்டுமல்லாமல் மரத்தையும் நாசமாக்கி விடும் என்று அந்த மரம் பயப்பட்டது.

இவ்வாறு மரம் தனக்கு இடம் அளிக்க மறுத்ததை எண்ணி, இளைஞன் கவலையும், பயமும் அடைந்தான். மற்றொரு மரத்தை அடைந்து, "மரமே, எனக்கு இன்று இரவு தங்க இடம் தருவாயா? பேய்கள் என்னைக் கண்டால் சும்மா விடாது" என்று கெஞ்சினான். ஆனால் அந்த மரமும் "நாங்கள் மனிதர்களுக்கு உதவி செய்வதில்லை. நீ வேறிடம் பார்" என்று சொல்லி விட்டது.

இரவில் தங்க இடம் தேடி ஒவ்வொரு மரமாக முயற்சி செய்து கொண்டிருந்த இளைஞனை, ஒரு பகார் மரம் பார்த்து இரக்கம் கொண்டது. அவனைத் தன்னிடம் அழைத்து "என்னுடைய அடர்ந்த கிளைகளில் நீ மறைவாக உட்கார்ந்து கொண்டு இரவைக் கழிக்கலாம். அந்தப்

**பாப்பா முரசு சிறுகதை**

பேய்களால் உன்னைப் பார்க்க முடியாது. சத்தம் செய்யாமல் மேலே ஏறி என்னிடம் ஒளிந்து கொள். பேய்கள் வந்தால் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றது.


தனது நன்றியை அந்த மரத்துக்குத் தெரிவித்துவிட்டு, அந்த இளைஞன் அடர்ந்த மரக்கிளைகளுக்குள் ஒளிந்து கொண்டான். நடு இரவாகி விட்டது. காட்டிலுள்ள பூச்சிகள் சத்தமிடும் ஒலி மட்டும் கேட்டது. திடீரென பேய்கள் கும்பலாக அந்தப் பக்கம் வந்தன.

"அவன் எங்கே? எங்கள் சகோதரனைக் கொன்ற அந்த மனிதன் எங்கே? அவனைக் கொல்ல வந்திருக்கிறோம். அவன் மட்டும் கிடைத்தால் அவனைக் கண்ட துண்டமாக வெட்டி விடுவோம்" என்று ஆத்திரத்துடன் கத்திக் கொண்டே அந்த வாலிபனைத் தேட ஆரம்பித்தன. ஒவ்வொரு மூலையிலும் தேடியும் அவனைக் காண முடியாததால் அந்தப் பேய்களின் ஆர்ப்பாட்டமும் கூக்குரலும் அதிகரித்துக் கொண்டே போயின. அந்தச் சத்தத்தில் பூச்சிகளின் ஒலியும் காற்று வீசும் ஒலியும் அமுங்கிப் போயின.

பேய்கள் இப்போது ஒவ்வொரு மரத்தையும் நோக்கி, "அவன் எங்கே?" என்று கேட்டன. மரங்கள் தனக்குத் தெரியாது என்று சொல்ல, கடைசியில் இளைஞன் ஒளிந்திருந்த பகார் மரத்தை அடைந்தன. "எங்கள் சகோதரனைக் கொன்ற அந்த மனிதன் எங்கே?" என்று பகார் மரத்தைக் கேட்க, "அவனை நான் பார்க்கவில்லை. அவன் காட்டில் வேற எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கிறான்" என்று அந்த மரம் சொல்லிவிட்டது.

ஏமாற்றமடைந்த பேய்கள் இறுதியில் அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டன. மீண்டும் அந்தக் காட்டில் அமைதி நிலவியது. அபாயத்திலிருந்து தப்பித்துக் கொண்ட இளைஞன், "பகார் மரமே, நீ எனக்கு செய்த உதவியை நான் என்றென்றும் மறக்க மாட்டேன்" என்று சொல்லி அந்த மரத்தை அன்புடன் தழுவிக் கொண்டான். பிறகு பத்திரமாக வீடு திரும்பிய அந்த இளைஞன், தன் கிராமத்திலுள்ள அனைவருக்கும் தனக்கு நேரவிருந்த அபாயத்தையும், பகார் மரம் தன்னை எவ்வாறு காப்பாற்றியது என்பதையும் விவரித்தான். அவன் பத்திரமாகத் திரும்பி வந்த மகிழ்ச்சியில் கிராமத்து மக்கள் பெரிய விருந்தொன்று ஏற்பாடு செய்து தங்கள் மகிழ்ச்சியைக் கொண்டாடினார்கள். அந்த விருந்தில், தங்கள் கிராமத்து இளைஞனுக்கு பகார் மரம் செய்த பேருதவியைப் பாராட்டி, அன்றிலிருந்து பகார் மரத்தை வெட்டுவதில்லை என்று முடிவு செய்தார்கள். ஆகவேதான் இன்றும் நாகர்கள் பகார் மரத்தை மட்டும் வெட்டுவதில்லையாம்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28.11.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 622**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 620

**பரிசுக்குரியவர்:**
ஜெ. திவ்யா,
புதிய தெரு, உப்புக்குளம், மன்னார்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| வி.மதுசனன், தரம் 1B, மட்/கோட்டை முனை கனிஷ்ட வித்தியாலயம், மட்டக்களப்பு. | சுகன்யா சுதாகர், க/ஸ்ரீ முத்து மாரி அம்மன். தமிழ் மகா வித்தியாலயம், கம்பளை. |
| எம். முஸ்தாக் அஹமட், தரம் 4, 142, பறகஹதெனி, வேவுட. | யோகராசா சிவரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. |
| ஆர். நிவித்திகா, ஐ.டி. 55A, சந்தை சுற்று வட்ட வீதி, வவுனியா. | ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |
| செ. கவிஷன், 61, கோணேசபுரம், உவர் மலை, திருகோணமலை. | ர. சிரஞ்சனா, தரம் 10 E, மட்/செங். ம.க. செங்கலடி. |
| ருமேஸ் மானியா, 12/3, பண்டாரநாயக்க பெதச, புசல்வாவ. | பி.எம்.எப். சாபிரா, 75, கண்டி வீதி, மல்லவபிட்டிய, குருநாகல். |


# ஆத்திசூடி

## தீவினை அகற்று

நீ துன்பத்தையும், அகௌரவத்தையும் விளைவிக்கத்தக்க தீய செயல்களைச் செய்வதை விட்டு விடு.

எஸ் நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# மருளுகின்ற விழிகளுள்ள மானே!



சுள்ளிபோல நான்கு
கால்கள் மேலே
புள்ளியுடல்
தந்தவர்தான் யாரோ
கொள்ளைஆசை
கொண்டுஉனைத்
தேடி
பிள்ளைவாறான்
கூடிவிளை யாடு.

மருளுகின்ற விழிகளுள்ள மானே
வெருளுகின்ற வேகம் உனக்
கேனோ
இருளிலுனை வேட்டையாட
வென்று
வருபவரைக் கண்டுவிட்டாய்
தானோ.

அழகுக்கு மேலழகு
சேர
ஆபத்தும் கூடவுண்டு மானே
குளம்தேடி நீர்குடிக்க வந்தாய்
கொஞ்சம்நில் நான்கொல்ல
மாட்டேன்.

# அதிசய உலகம்

## பாலைவனப் பிராணிகள்





வெய்யில் கொளுத்தும் வறண்ட பாலைவனத்தில் கூட சில உயிரினங்கள் வசிக்கின்றன. அது போன்ற அறிய உயிரினங்களில் அகாமா என்ற பாலைவனப் பல்லியும் ஒன்றாகும். பகலில் கடும் வெய்யிலிலிருந்தும் இரவில் கடுங் குளிரிலிருந்தும் தப்பிக்க தன்னுடைய கொடுக்கு போன்ற முன்னங் கால்களினால் 6 அடி ஆழம் வரை மணலில் தோண்டி தனக்கென்று பொந்து தயாரித்துக்கொள்ளும். கத்தி போல் கூர்மையாக இருக்கும் தன் வாலினால் எதிரிகளைத் தாக்கக் கூடிய சக்தி இதற்கு உண்டு.

தாவரங்கள் மிக மிகக் குறைவாயிருந்தும், நீர்நிலைகளே இல்லாமல் இருந்தும் கடும் வெய்யில் அடித்தும் கூட எப்படியோ சில உயிரினங்கள் பாலைவனத்திலும் உயிர் வாழ்ந்து சமாளிக்கின்றன.


# உங்கள் பொது அறிவு எப்படி?

## கண்டுபிடிப்புகளும் கண்டுபிடித்தோரும்

| | |
|---|---|
| 01. மயக்க மருந்து | - சேர்.ஜேம்ஸ் சம்சன் |
| 02. மேர்கரிஷ்ணமானி | - பரநீற் |
| 03. நவீன சத்திரசிகிச்சை முறை | - விஸ்ரர் பிரபு |
| 04. அம்மைநோய் தடைப்பால் | - எட்வேட் ஜேனர் |
| 05. சிறுபிள்ளைவாத நோய் மருந்து | - சோக் |
| 06. விசர்நாய்க்கடி மருந்து | - லூயி பாஸ்டர் |
| 07. பிரெயின் எழுத்துமுறை | - லூயி பிபெயில் |
| 08. தட்டச்சு இயந்திரம் | - ஷோல்ஸ் |
| 09. தையல் மெசின் | - எலியாஸ்கோவ் |
| 10. அமெரிக்காவை கண்டுபிடித்தவர் | - கிறிஸ்தோபர் கொலம்பஸ் |
| 11. பூமியை வலம் வரும் சக்தி | - சேர் ஐசாக் நியூட்டன் |
| 12. ரேடியம் | - கியூரி அம்மை. |

# தகவல் பெட்டி


## மிஸ்டர் ரப்பர்



கனடாவைச் சேர்ந்த பியரே பேவுமியனின் திறமை என்னவென்று எழுத வேண்டியதில்லை. பார்த்த பார்வைக்கே தெரிகிறது இவருடைய உடம்பு இழுத்த இழுப்புக்கு இணங்கும் ரப்பர் உடம்பு என்று. அவ் வசதியைப் பயன்படுத்தி எவ்வளவு அழகாக கால்களை மேசையாக மாற்றிக் கொண்டுள்ளார் பாருங்கள்


## பல்லிலே கலை வண்ணம்

ரோன் க்கிரான்ட் என்ற கலைஞர் பல்லிலே படம் வரைவதில் வல்லமை பெற்றவர். பல் ஓவியராக அறிமுகப்படுத்தப்படும் இவர், பல்லிலே உருவாக்கிய கண்கவர் கலைவண்ணமே இது.



## உண்ண வந்த பண்டா

எட்டு பண்டாக்களை இவ்வாறு ஒரே தடவையில் காணக்கிடைப்பது அபூர்வமான சந்தர்ப்பங்களிலேயேயாகும். சீனாவின் வோலோங் ஆராய்ச்சி மற்றும் வன அபிவிருத்தி மத்திய நிலையத்தில் தமது பகல் உணவை வரிசையாக வந்து உண்ணும் போதே இந்த அபூர்வப்படத்தைப் பிடிக்கக்கிடைத்தது. உலகிலேயே வனங்களைத் தவிர்த்து மனிதக் கட்டுப்பாட்டில் வாழும் (மிருகக்காட்சிகள் உட்பட) மொத்த பண்டாக்களின் எண்ணிக்கை 140 மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.



## நீளும் நீளம்




சீனாவின் அன்யுய பிரதேசத்தில் வசிக்கும் ஒரு பெண்ணுக்கு அசாதாரண முறையில் மணமகளாக வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அவர் இந்த ஆசையைத் தனது மணமகள் ஆடை மூலமே இலகுவில் பூர்த்தி செய்து கொண்டார். 40 மீட்டர் நீளம் கொண்ட அவரது ஆடையைத் தூக்கிச் செல்வதற்கு 18 பேர் தேவைப்பட்டார்கள் என்றால் பார்த்துக் [illegible]

## ரோபோ மீன்

மீன்களின் நடவடிக்கையைக் கண்காணிப்பதற்கு விஞ்ஞானிகள் ரோபோ மீன்களை உருவாக்கி உலா விட்டுள்ளார்கள். இப் படத்தில் தெரிவதும் அவ்வாறான ரோபோ மீன் ஒன்றே.



எஸ்.எம்.எஸ்.அனுப்புவதன் மூலம் தேநீர் கோப்பை ஒன்றைக் கூட கொள்வனவு செய்து கொள்ள முடியுமான அளவுக்கு உலகம் முன்னேறியுள்ளது. நீங்கள் அதற்காகப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட கேத்தல் ஒன்றைக் கொள்வனவு செய்யவேண்டும். அதைத் தொழிற்படுத்துவதற்காக அக் கேத்தலுடன் பொருத்தப்பட்டுள்ள சிறிய ரெகோடர் இயந்திரத்தில் உங்கள் செல்லிடப்பேசி இலக்கத்தைப் பதிவு செய்ய வேண்டும். பின்னர் அதில் உள்ள பாத்திரங்களில் சரியான அளவுகளில் தேயிலை சீனி, மா போன்றவற்றை அளவாக இட்டுத் 'தேநீர் ஒன்று தயாரிக்கவும்' என்று எஸ்.எம்.எஸ் ஒன்று அனுப்பினால் போதும். உங்களுக்குச் சூடான சுவையான தேனீர் ஒன்று கிடைக்கும். எதிர்வரும் ஜனவரியில் இக் கேத்தல் சந்தைக்கு வருகிறதாம்.





பெரிசு

# தமிழுக்கு ஒரு சாவ்லா.....

தமிழுக்கு புதிதாக வருகிறார் கீர்த்தி சாவ்லா. மும்பையைச் சேர்ந்த கீர்த்தி சாவ்லா மாடலிங் மூலமாக தெலுங்கு சினிமாவுக்குப் போய் பல படங்களில் தனது உடல் திறனைக் காட்டி வருபவர்.

அங்கு ஜூனியர் என்டிஆருக்கு ஜோடியாக ஆதி என்ற படத்தில் அறிமுகமாகி, இப்போது இரண்டாவது ஹீரோயினாகவே காலம் கடத்திக் கொண்டிருக்கும் கீர்த்தி கோலிவுட்டுக்கு வருகிறார்.

ஆக்ஷன் (அம்) புலி அர்ஜுன் நடித்த ஆணை என்ற படத்தில் இரண்டாவது ஹீரோயினாக நடித்தார். தெலுங்குப் படங்களில் அர்ஜுன் நடித்தபோது ஏற்பட்ட நட்பை வைத்து இந்தச் சான்ஸை லவட்டினாராம் கீர்த்தி.

அதேபோல தெலுங்கில் சக்கை போடு போட்ட பி கிரேட் மூவியான 'சதி சாவித்திரி' யில் இரண்டு ஹீரோயின்களில் ஒருவராக கவர்ச்சியாட்டம் போட்டார். அந்தப் படம் இப்போது டப் ஆகி தமிழுக்கும் வந்துள்ளது.

இந்தப் படங்கள் மூலம் கோலிவுட்டில் நுழையக் கிடைத்த எண்ட்ரியை மிக அழகாகப் பயன்படுத்தி சோலோ ஹீரோயினாகிவிட்டார் கீர்த்தி சாவ்லா.

ஜெய் ஆகாஷை வைத்து தியாகராஜன் இயக்கும் 'வேட்டை' என்ற படத்தில் இவர்தான் ஹீரோயின். ஒரே ஹீரோயின். தியாகராஜன் யார் தெரியுமா? 'மாநகரக் காவல்' படத்தை இயக்கியவர். வேட்டையும் செமையான ஆக்ஷன் படம் தானாம். இதில் ரகளையான கவர்ச்சி காட்டிக் கொண்டிருக்கிறார் கீர்த்தி.



# உதட்டழகி சமிக்ஷா

சமிக்ஷா! பெரிதும் பேசப்பட்டு, அதிகம் கவனிக்கப்படாமல் போன ஒரு அழகிய நடிகை. 'அறிந்தும் அறியாமலும்' படம் பார்த்தவர்கள் சமிக்ஷாவை அறிந்திருப்பார்கள். முதல் படத்திலேயே இரசிகர்களைக் கவருபவர்கள் ஒரு ரகம். இரண்டு, மூன்று படங்களுக்குப் பிறகு கவனிக்கப்படுபவர்கள் இன்னொரு ரகம். இதில் சமிக்ஷா இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர் எனலாம்.

முதல் படம் நன்றாக ஓடியும் கூட சமிக்ஷாவுக்குப் பிரேக் கிடைக்கவில்லை. மாறாக அதில் நடித்த ஆர்யா தான் இப்போது முன்னணி நாயகராகி விட்டார்.

சமிக்ஷா விளம்பரப் படங்களில் நடித்து வந்த மாடல்.

மாடலிங்கில் நுழைந்தால் சினிமாவுக்குள் ஈசியாக எண்ட்ரி ஆகி விடலாம் என்ற இந்தக் காலத்தில், சமிக்ஷாவும் அதற்கு விதி விலக்கல்ல. விளம்பரப் படங்களில் நடித்துப் பிரபலமாக இருந்த சமிக்ஷா 'அறிந்தும் அறியாமலும்' மூலம் சினிமா நடிகையாகிவிட்டார்.

ஆனால் முதல் படத்திற்குப் பிறகு அவரைக் காணோம். என்னாச்சு மேடம் என்று சமிக்ஷாவிடம் கேள்விகளைப் போட்டோம். சமிக்ஷாவுடன் இதோ ஒரு என்கவுண்டர்!

"தமிழ் இரசிகர்களுக்கு நான் பல விளம்பரப் படங்கள் மூலம் முன்பே அறிமுகமாகி விட்டேன்.

டி.வி.விளம்பரம் மூலம் வீடுகளில் புகுந்த நான், இப்போது திரைப்படங்கள் மூலம் அவர்களது இதயத்திற்குள்ளும் ஊடுருவியுள்ளேன்.

நான் வளர்ந்தது, படித்தது எல்லாம் டெல்லியில். மாடலிங் செய்ய ஆரம்பித்த நான் விரும்பித்தான் சினிமாவுக்குள் வந்தேன்.

சினிமாவில் நடிப்பதற்காக நான் நிறைய ஹோம் ஒர்க் செய்துள்ளேன். நடிப்புக்காகப் பயிற்சியும் எடுத்துள்ளேன்.

அதனால் எந்த ரோல் கொடுத்தாலும் அதைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு.

இப்போது கிளாமர் காலம். எனவே படங்களில் கிளாமர் காட்டாமல் நடிக்க முடியாது என்ற நிலை. எனவே நானும் திகட்டாத அளவுக்கு கிளாமர் காட்டத் தயார் தான். வல்கர் இல்லாத அளவுக்கு கிளாமர் காட்டுவதில் தப்பே இல்லை. தமிழில் நடிக்கவே ஆசைப்படுகிறேன்" என்றார் உதட்டழகி சமிக்ஷா.



ஜெயம் ரவி

# கமல்ஹாசனின் அமெரிக்க பிறந்த நாள்

நடிகர் கமலஹாசன் தனது 52ஆவது பிறந்த நாளை 07.11.2005இல் அமெரிக்காவில் கேக் வெட்டி கொண்டாடினார்.

கமலஹாசன் 'வேட்டையாடு விளையாடு' படப்பிடிப்புக்காக அமெரிக்கா சென்றார். நியூயோர்க்கில் மன்ஹாட்டன் பகுதியில் இந்தப் படப்பிடிப்பு நடந்தது. கமலஹாசன் மற்றும் ஜோதிகா நடிக்கும் காட்சிகள் அங்கு படமாக்கப்பட்டன.

இந்த நிலையில் கமலஹாசன் தனது பிறந்த நாளை கடந்த ஏழாம் திகதி திங்கட்கிழமை படப்பிடிப்புக் குழுவினருடன் கேக் வெட்டி கொண்டாடினார்.

பின்னர் இயக்குநர் கௌதம் மேனன் உள்ளிட்ட படப்பிடிப்புக் குழுவினருக்கு கமல் விருந்து கொடுத்தார்.

இந்த பிறந்த நாள் கொண்டாட்டத்தில் லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் இசை சம்பந்தப்பட்ட படிப்பு படித்து வரும் கமலஹாசனின் மகள் சுருதி ராஜலட்சுமியும் கலந்து கொண்டார்.

படப்பிடிப்பை முடித்து கொண்டு கமலஹாசன் வருகிற 12ஆம் திகதி சென்னை திரும்புபினார்.

சி
வி
னி
சி
ட்

# 'அம்மா' ஆனார் ரேணுகா மேனன்!

**அம்மா** வேடத்தில் நடிக்க மறுத்த நடிகைகளுக்குச் சாபம் விட்டார் தங்கர்பச்சான். அவரது 'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி' படத்தில் 2 குழந்தைகளுக்கு அம்மாவாக நடிக்க முன்னணி ஹீரோயின்கள் மறுத்ததால் கோபமடைந்து அவர் சாபம் போட்டார்.

பின்னர் நவ்யா நாயர் நடிக்க, படம் சூப்பர் ஹிட் வெற்றியாக ஓடிக்கொண்டுள்ளது. இது பழைய கதை.

இப்போது வளரும் நாயகி ஒருவர் ஒரு குழந்தைக்கு அம்மாவாக ஒரு படத்தில் நடிக்கிறார். இப்படித் துணிச்சலாக நடிக்க முன் வந்திருப்பவர் கேரளத்து வரவான ரேணுகா மேனன். பார்க்க படு பளிச் என இருக்கும் ரேணுகா மேனன் நடித்த முதல் இரு படங்களும் டப்பா பட வரிசையில் சேர்ந்து விட்டன.

பெப்ரவரி 14, தாஸ் ஆகிய இரு படங்களும் ஓடாததால் ராசியில்லாத நாயகி வரிசையில் சேர்ந்து விடுவார் எனப் பேசப்பட்டது.

ஆனால் யாரும் எதிர்பாராத வகையில் கையில் சில படங்களுடன் தெம்பாகவே வலம் வருகிறார் இந்தக் கேரளத்து சேச்சி. 'கலாபக் காதலன்' என்ற படத்தில் தற்போது ஆர்யாவுடன் நடித்து வருகிறார் ரேணுகா.

இந்தப் படத்தில் ஒரு குழந்தைக்கு அம்மாவாக நடிக்கிறாராம் ரேணுகா.

எப்படி மற்ற இளம் கதாநாயகிகளுக்கு இல்லாத துணிச்சல் உங்களுக்கு என்று ரேணுகாவிடம் ஆச்சரியக் கொக்கியைப் போட்டபோது,

"இப்படிப்பட்ட கேரக்டரில் நடிக்க எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. மலையாளத்தில் இதுபோன்ற ரோல்களில் முன்னணி நடிகைகள் நடிப்பது சாதாரண விஷயம். ஒரு படத்தில் அம்மா கேரக்டரில் நடிப்பார்கள், அடுத்த படத்தில் கல்லூரி மாணவியாக வருவார்கள்.

நல்ல கதையாக இருப்பதால் இரசிகர்கள் அப்படிப்பட்ட கேரக்டர்களை ஏற்றுக்கொள்கி றார்கள். நடிக்கும் நடிகையை அவர்கள் முக்கியமாகப் பார்ப்பதில்லை. கதாபாத்திரத்தைத் தான் பார்ப்பார்கள்.

எனவே மலையாள நடிகையான எனக்கு இது போன்ற கேரக்டரில் தமிழில் நடிப்பதில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. எனவேதான் 'கலாபக் காதல'னில் ஒரு குழந்தைக்கு அம்மா பாத்திரத்தில் கலக்கலாக நடித்து வருகிறேன்" என்கிறார் ரேணுகா.

தங்கர் கேட்டால் ரொம்பச் சந்தோஷப்படுவார். மலையாளியாக இருந்தாலும் கூட அட்சரச் சுத்தமாக தமிழில் பேசி அசத்துகிறார் ரேணுகா.



ஆர்யா - ரேணுகாமேனன்
கலாபக் காதல்






# தெலுங்கில் சூர்யா

விக்ரமைப் போலவே தெலுங்கில் காலடி எடுத்து வைக்க சூர்யாவும் முடிவு செய்துள்ளார்.

விக்ரம் நடித்த ஆக்ஷன் படங்களுக்கும், பிதாமகன், காசி போன்ற படங்களுக்கும் தெலுங்கில் பெரும் வரவேற்பு கிடைத்தது. சமீபத்தில் ரிலீஸ் ஆன அந்நியன் தெலுங்கில் வசூலில் புதிய சாதனை படைத்துவிட்டது. பல முன்னணி தெலுங்கு ஹீரோக்களின் படங்களை ஓரம் கட்டியது அந்நியன்.

இதையடுத்து நேரடியாக தெலுங்குப் படங்களில் நடிக்கத் திட்டமிட்டுள்ளார் விக்ரம்.

அதேபோல சூர்யாவுக்கும் அங்கு பெரும் வரவேற்புக் கிடைத்து வருகிறது. காக்கா....காக்க படத்தின் மூலம் சூர்யா அங்கு பெரும் பிரபலமாகிவிட்டார். அந்தப் படத்தை நடிகர் வெங்கடேஷை வைத்து தாணுவே தெலுங்கில் தயாரித்தார். ஆனால், அது அவ்வளவாக ஓடவில்லை. அதே நேரத்தில் சூர்யா நடித்த காக்கா காக்கவை டப் செய்து வெளியிட்டபோது வசூல் குவிந்தது.

இந்நிலையில் இப்போது கஜினி படம் தமிழைப் போலவே தெலுங்கிலும் சக்கைபோடு போட்டு வருகிறது.

தெலுங்கில் டப் செய்யப்பட்டுள்ள இந்தப் படத்துக்கு பெரும் கூட்டம் கூடுகிறது. இதையடுத்து இயக்குநர் முருகதாசுடன் ஹைதராபாத் வந்த சூர்யா, அங்கு ஒரு திரையரங்கில் கூட்டத்தோடு கூட்டமாகப் படம் பார்த்தார்.

அங்கு சூர்யாவை அடையாளம் கண்டுகொண்ட இரசிகர்கள் சூர்யாவை மொய்த்துவிட்டனர். இதன்பின் நிருபர்களைச் சந்தித்தார் சூர்யா.

அவரது பேட்டி விவரம் :

தமிழில் நான் நடித்த கஜினி படம் தெலுங்கில் டப்பிங் செய்து வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் படத்துக்கு மிகப் பெரிய வரவேற்புக் கிடைத்துள்ளது. ஹைதராபாத்தில் இரசிகர்களுடன் இரசிகராக தியேட்டரில் உட்கார்ந்து படம் பார்ப்பதற்காகவே வந்தேன்.

தியேட்டரில் இரசிகர்கள் படத்தின் ஒவ்வொரு காட்சிக்கும் கொடுத்த வரவேற்பு மிக ஆச்சரியமாக இருந்தது. இதைக் கனவிலும் கூட நான் நினைத்துப் பார்க்கவில்லை.

கஜினி பட வெற்றி தனிப்பட்ட நபருடையது அல்ல. படத்தின் ஒட்டுமொத்த குழுவுக்கு கிடைத்த வெற்றி. டைரக்டர் முருகதாஸ் நினைத்தபடி படம் உருவானது. தெலுங்கில் கஜினிக்குக் கிடைத்த வெற்றியை நேரில் காண்பதற்காக வந்தேன்.

எனக்கு திருப்பு முனையாக காக்க காக்க, நந்தா, பிதாமகன் ஆகிய படங்கள் அமைந்தன. ஒவ்வொரு வெற்றிப் படமும் எனக்குப் புதிய பாடத்தைக் கற்றுத் தந்துள்ளது.

எனது அடுத்த படம் ஆறு. இதில் எனக்கு ஜோடியாக திரிஷா நடிக்கிறார்.

ஜோதிகாவுடன் நடிக்கும் 'ஜில் என்று ஒரு காதல்' படத்தின் படப்பிடிப்பின் சில காட்சிகள் ராஜமுந்திரியில் எடுக்க இருக்கிறோம். இந்தப் படத்தை என் உறவினர் ஒருவர்தான் தயாரிக்கிறார்.

***ஜோவுடன் திருமணம் :***

தெலுங்குப் படங்களில் நேரடியாக நடிக்கவும் நான் தயாராக இருக்கிறேன். ஒரே நேரத்தில் தமிழ் - தெலுங்கு இரு மொழிகளில் தயாராகும் படத்தில் நடிக்கவும் நான் ரெடி. ஆனால், எனக்கு தெலுங்கு அவ்வளவாகத் தெரியாது. அதை இப்போது கற்று வருகிறேன் - என்றார் சூர்யா.


இதையடுத்து எல்லா நிருபர்களுமே ஜோதிகாவை நீங்கள் திருமணம் செய்யப்போவது உண்மைதானே? என்று கேட்க, 'நோ கமெண்ட்ஸ்' என்று சொல்லிவிட்டு சிரித்தார் சூர்யா.

ஆனால், உங்கள் இருவருக்கும் எப்போது திருமணம் என்று அவரை தொடர்ந்து நிருபர்கள் குடைந்ததால் சிரித்தபடியே, "நடக்கும். அடுத்த ஆண்டு கூட அது நடக்கலாம்" என்றார்.

கஜினி படத்தைப் பார்த்துவிட்டு சென்னையில் உள்ள சூர்யாவின் வீட்டுக்கு ஒரு மலர்க் கொத்தை அனுப்பினாராம் தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவி. தொடர்ந்து அவரது போன் காலும் வந்ததாம். சூர்யாவை ஏகத்துக்கும் பாராட்டித் தள்ளிவிட்டாராம் சிரஞ்சீவி.




ஏ.எம்.ரத்னத்தின் ஸ்ரீசூர்யா மூவிஸ் தயாரிப்பில் அவரது வாரிசு ஜோதிகிருஷ்ணா இயக்கத்தில் ஒரு வருடத்திற்கு முன் 'எனக்கு 20 உனக்கு 18' படத்தில் நடித்ததை தன் சம்பந்தப்பட்ட பேட்டிகளிலும் பயோடேட்டாக்களிலும் மறைக்கப் பார்க்கிறாராம் 'மழை' படக் கதாநாயகி ஸ்ரேயா. அம்மணி, தெலுங்கில் படு பிஸி என்பதும் மழையைத் தொடர்ந்து தனுஷின் 'திருவிளையாடல்', ரஜினி-ஷங்கர் கூட்டணியின் 'சிவாஜி' படங்களிலும் கதாநாயகி என்பதும் தெரியும் தானே...?




**வாசகர்கள் கேட்ட முகவரிகள்**

VIJAY,
NO. 86/87, STATE BANK COLONY, 3RD STREET,
SALIGRAMAM, CHENNAI - 600 093.
PHONE : 23765748.

-எம்.எஸ்.நௌசாற், கல்முனை - 01

ASIN,
KARKIKKAMURI 1ST CROSS ROAD,
COCHIN - 1 1, KERALA. INDIA.
PHONE : 914842372060, 2366150.

-எஸ்.ப்ரியா, யாழ்ப்பாணம்.

AJITH KUMAR,
NO.5. KAMARAJAR SALI, (OPP TO PRASAD LAB)
SALIGRAMAM, CHENNAI - 600 093.
PHONE : 2362 4843.

-வி.சுதர்ஷினி, கொழும்பு - 15.

JAYAM RAVI,
137, KODAMBAKKAM HIGH ROAD, T.NAGAR,
CHENNAI - 600 017.
PHONE : (0) 283441 12, 28342733,

-என்.எஸ்.பி. துரை, வாழைச்சேனை.

முகப்பில்
சிம்பு ~ ப்ரியாமணி

'வல்லவனுக்கு சிம்பு - நயன்தாராவின் உதடு கடித்தது போன்ற போஸ்டர்களால் எழுந்த சர்ச்சை.... தனுஷ் - ப்ரியாமணியின் தொடையில் கைவிடுவது போன்று ''அது ஒரு கனாக்காலம்' படத்திற்கான ஸ்டில்கள் எடுக்கப்பட்டு ஒட்டப்பட்ட போஸ்டர்கள் சென்னை மாநகர பொலிஸ் கமிஷனர் கிழித்தெறிய உத்தரவிட்டது. இவையெல்லாவற்றையும் மிஞ்சி விடுமாம் கோவை பிரதர்ஸ் படத்தில் நமீதாவுடன் சிபிராஜின் நெருக்கம். மேற்படி கோவை பிரதர்ஸ் படத் துவக்க நாளில் இவை போஸ்டர்களாகவும் சென்னை மாநகரில் ஒட்டப்பட இருக்கின்றன. சென்னை பொலிஸ் உஷார் ப்ளீஸ்.

# அழகி ஐஸ்க்கு வயது 32




முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய்க்கு நவம்பர் 1ஆம் திகதி 32 வயது பிறந்தது. உடல் எடையைக் குறைக்க உணவுக் கட்டுப்பாடு மேற்கொள்ளவில்லை என்று கூறியுள்ளார்.

தமிழில் இருவர், கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன், ஜீன்ஸ் ஆகிய படங்களில் நடித்து இரசிகர்களை கிறங்க வைத்த ஐஸ்வர்யா இந்தியில் தற்போது முன்னணியில் உள்ளார்.


சமீபத்தில் சில ஹாலிவுட் ஆங்கிலப் படத்திலும் ஒப்பந்தமாகியுள்ளார்.

தி லாஸ்ட் லெஜியான் படப்பிடிப்புக்காக ரஷ்யா சென்றுள்ளார். அங்கு படப்பிடிப்பில் மும்முரமாக குதிரைச் சவாரி, வாள் சண்டை என தூள் கிளப்பிக் கொண்டிருக்கிறார்.

பிப்டி கேஜ் தாஜ்மகாலுக்கு நவம்பர் 1ஆம் திகதி 32 வயது பிறந்தது. குடும்பத்தினர், நண்பர்கள் ஐஸ்சுக்கு தொலைபேசியில் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

அப்போது எனக்கு வாள் சண்டை, குதிரைச் சவாரி ஆகியன ரொம்பத் த்ரில்லா இருக்கு. எனக்கு இனிப்பான பற்கள் உள்ளதால் நான் ஒரு போதும் உணவுக் கட்டுப்பாடு முயற்சி செய்வதில்லை என்றார் 50 கேஜ் ஐஸ்.

ரஜினியின் அடுத்த படமான 'சிவாஜி'யில் எப்படியாவது ஐஸை கதாநாயகியாக்கிவிட வேண்டும் என்று இயக்குநர் சங்கர் பிரம்ம பிரயத்தனம் செய்கிறார். அம்மணி படு பிஸி. "கால்ஷீட் இப்போ இல்ல" என்று சொல்லிவிட்டார்.






## வழிமாறிப் போகலாமா?

வாள் ஏந்திய
தமிழ் மன்னர்
வரலாற்றில்,
வீழ்ந்த கதையை
மறைத்து,
வென்ற கதையை
மிகைப்படுத்தி
தோளுக்கு
வலி சேர்க்க
துணை நல்ல
'போர்' என்று
வாலைக்கும்
வாலிபனுக்கும்
'வடிகட்டிய'
அறிவு சொன்ன
வரலாற்று
'சிற்பிகள்' -
வழிமாறிப்
போகலாமா?

மதியின்
வழியன்றோ
மாமன்னர்
வீரமெல்லாம்!

சதியின்
வழியில்
சம்பவங்கள்
மாறலாமா..?

புரியாத
பூஜ்ய - கணக்கால்
பொய்மையை
மெய்யாக்கும்
புல்லர்கள்
சூழ்ச்சியில் சிக்கிப்
போகலாமா?
புத்தி ஜீவிகளும்...?

*—நா.ஜெயபாலன், பிபிலை.*

## கொடுத்துப் பாருங்கள்

வாய்ப்புகள் வசமாகாமல்
சாந்தமாய் இருக்கின்றன
சில தீக்குச்சிகள்.....

உரசிப் பார்க்க
ஒருவருமின்றி அதன்
பலத்தை, பலவீனத்தை
பட்டியல் போடுவதெப்படி?

இலங்கையிலும் பல
இளங் குயில்கள்
கூண்டை விட்டு வராமலே
கூவிப் பார்க்கின்றன.

அவைகளில் ஒன்று
சித்ராவாகக் கூட இருக்கலாம்
எவர் கண்டார்?
ஒலி வாங்கியை கொடுத்துப்
பாருங்கள்!

இங்கும் பல உள்ளங்கள்
எழுதுகோலை ஏந்தியபடி
ஏங்கி நிற்கின்றன....
வாய்ப்புக் கிடைத்தால் வைரமுத்து
ஆகலாம் என்று!

வெறும் ஏட்டுக் கல்வியால்
ஏற்றமில்லை இந்த ஊரில்!
வாழ வழி காட்டுங்கள்.
நம்மிலும் பில்கேட்ஸ் உருவாகலாம்!
எவர் கண்டார்?
வாய்ப்புகளைக் கொடுத்துப் பாருங்கள்!

*—ஷீலா மாணிக்கம், அக்கரபத்தனை.*

## அனல் காற்று

## எழுதப்படாத கவிதை

உனக்கு - உன்
தாயும்,
எனக்கு - என்
தன்மானமும்
முக்கியமாகிப்
போனதால்
முறிந்தது
நம் காதல்.

நீ முத்தமிட்ட
விரல் நுனியும்,
உன் மூச்சுப்பட்ட
விழி இமையும்
அருவருத்து
அலறுகையில்

என்
முழு மேனியுமே!
தீக்குளிக்கத்
துடிக்கிறது.

ஒரு தீக்குச்சியும்,
கொஞ்சம் திராவகமும்
போதும் - நீ
இராமனாக
இருந்திருந்தால்....

*—சிஹ்னாஸ் தௌபீக், ஹுஸைனியா புரம்.*

எழுதப்படாத
ஒரு கவிதையின்
துயரங்களுடன்
வேகமாய் நகர்ந்து
கொலுசு மனசு.
நாட்களை நோக்கிய
இரசித்தலின் என்புகள்
முறிகிறது
புல்லாங்குழலின்
குரல்வளையில்
புழுக்கள்
பூப்பெய்ததால்.

நிராகரித்து
புறம் தள்ளி
குத்திக்கிளறிய
சில ஞாபகக்
காயங்கள்
நேற்றைய
புன்னகையை
உதட்டில் சுமந்து.

அனுப்பும்
மடல்களுக்கு
கடவுளின்
கையொப்பமிருந்தும்
காலத்தின் கிளர்வில்
துயர் முற்றியதான
சொல்லி முடியாத
கதைகளாய்
காரணம் சொன்னாய்
கண்களால்.
கூடாரமடித்து
குந்தியிருந்த
மரணம் கூட
கொஞ்சம்
ஓரம் தள்ளிற்று.
கொழுப்பேறிக்
கிடந்த
கொடூரக்காரியே
ஊதி அடங்கும்
பொழுதொன்றில்
காதல்
முளைப்பதாய்
கவிதை
எழுதுகின்றாய்
கைது செய்யப்பட்டுக்
கிடக்கிறேன்
தேசத்தின்
பள்ளத்தாக்கில்.

*—ஏ.நஸ்புள்ளாஹ், கிண்ணியா.*

## ர யி ல்

மலைப் பாம்பு போல்
வளைந்து நெளிந்து
குகையினுள் நுழைகிறது
மலை நாட்டுப் புகையிரதம்.
'விசில்' அடித்து
ஆரவாரம் செய்து மகிழ்கிறோம்.

இரத்தம் சிந்தி
உயிர் துறந்து
குடைந்தெடுத்த
தியாகிகளை மறந்து.

ப
ய
ண
ம்

-மு.ப.நுஸ்ஹா ஷிபா,
காத்தான்குடி - 05.

## கல்லறைக்குள்....

கலில் ஜிப்ரானும் சைப்ரஸ் மரங்களும்
நம் உறவுக்குள் உதிர்ந்துபோன
- ஞாபகங்களாய்

என் தலைக்கு மேல் இன்னும் கழுகுகள்
வட்டமிட்டதாகத் தெரியவில்லை.

வரையறுத்த சுவர்களினுள்
வியர்வையை மட்டும் குடித்துக் கொண்டு
- நான்

யாரும் நடக்கும் ஓசை கூட
கேட்கவில்லை எனக்கு
கண்களைத் திறந்து உற்றுப்
பார்க்கிறேன்
வாடிய ரோஜாக்களுடன் நேற்றுப்
பூத்த அந்த ஒற்றை மலரும் - என்
நெற்றிக்கு நேரே.

இன்றும் அவன் வந்திருக்கிறான் -
ஆனால்
என் உறக்கம் கலைந்து விடக்
கூடாதென்று
அவதானமாகத் திரும்பிவிட்டான்
அதனால் தடயங்களில்லை
அந்த ஒற்றை ரோஜாவை தவிர.

ஜாதி என்னும் அரக்கனின்
கோரத் தாண்டவத்தால்
பறிக்கப்பட்டது வெறும்
உயிர்தான்
-உணர்வுகளல்ல!

*—எஸ்.ரேகன், நவாலி.*

## நிவாரணம்

காகங்கள் இப்போது
இறைதேடப் போவதேயில்லை
அதற்கு
கறியும் சோறுமுண்பதற்கே
சரியான மாய்ச்சலாயுள்ளது
புனிதஸ்தலத்திற்குச்
செல்லும் நேரத்திலே
கஞ்சாக் குடிக்கிறது
தேவாமிர்தத்தை
பருக்கி விட்டாலும்
அது குடிக்கும்
நிலையிலில்லை.
என்றாலும்
கோழிகளுக்குப் பல்லுகள்
விழுந்து விட்ட தாகவும்தான்
சுனாமி நஷ்ட ஈட்டில்
பதியப்பட்டுள்ளது.

*—அ.கா.மு.றிஸ்வின், மூதூர் - 01.*

## ஈ-மெயில் இதயம்!

இப்பொழுதெல்லாம்
உன் ஈ-
மெயில்தான்
என் இரவுகளே!

கணினியை
மட்டுமல்ல
கண்ணீரையும்
கற்றுத் தந்தது
நீதான்!

காளையர்களே
கண்டு
சொல்லுங்கள்
இவள்
பிரம்மன் படைப்பா
இல்லை
பில்கேட்ஸ்
படைப்பா!

சொப்ட்வெயர்
பெண்ணே
உன்னை வைத்து
உலக
பணக்காரனாய்
உயர்ந்து
விடலாம்!

கணினியின்
பாரிய
வளர்ச்சியால்
காதல்
அலங்கரிக்கப்பட்டது!

ஈ-மெயிலில்
இதயங்கள்
பரிமாறப்பட்டன!

சொல்லப்படாத
காதலாய்
மௌன மாகவே
இருந்தது
மௌஸ்!

கணினிப்
பெண்ணே,
எப்படி முடிந்தது
ஈ-மெயிலில்
இதயம் பறிக்க!

*—புத்தளம் நஸீம்ரூமி.*

## காதல் அல்ல..!




இனம் புரியாத
இதம் தருகிறது
உனது உறவு
நிச்சயம் இது
காதல் அல்ல.....

உனது
அன்பான பேச்சு
ஆதரவான
தினமுமான
நலவிசாரிப்பு
கனிவான வழிகாட்டல்
எல்லாம் பிடிச்சிருக்கு
நிச்சயம் இது
காதல் அல்ல....

உதவிகள் செய்யக்
காத்திருக்கும்
தாராள குணம்
என் விடயங்களில்
எல்லையுடன்
உரிமையிடும்
உயரிய மனம்
ரொம்பப் பிடிச்சிருக்கு
நிச்சயம் இது
காதல் அல்ல.....

நாள்தோறும்
நான் காணும்
காண்பதற்காகவே
காத்திருக்கும்
ஒரு முகம்
உன் வதனம்
நிச்சயம் இது
காதல் அல்ல....

இடையில் கிடைத்த
இமயமான உன் உறவு
இறுதிவரை மாறாது
மாறவும் கூடாது
நிச்சயம் இது
காதல் அல்ல...



*—நஸீஹா சம்சபாத், ஏத்தாலை.*

## விண்ணப்பம்

கவிதைகள்
அனுப்புகிறேன்
பதிலுக்கு
உன்
புன்னகையாவது
அனுப்பிவை!

*—மல்லிகை வீ.ஸ்ரீதரன், மூதூர்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

*அழகிய சொற்பிரயோகங்களை ஒன்றோடொன்று செருகிக் கொள்வதை கவிதையாகக் கருதிட முடியாது. ஒவ்வொரு சொல்லினுள்ளும் உயிர்ப்பு உணரப்படுதலின் போதே படைப்பு முழுமையடைகிறது. தான் சார்ந்த சமூகத்தின் பதிவுகளைப் பூசிக் கொண்டு வார்த்தைகள் அர்த்தம் தேடுகின்றன. கவிதை என்பதற்காக சொற் தொடர்களை வரவேற்கவும் முடியாது. அதேபோல் மொழிகளின் திரையும் கிழிக்கப்பட்டு விட்டது. வார்த்தைகளில் வழுக்கிற எவரும் அதற்குள் விழுந்து விடவும் முடியாது. புதைக்கப்பட்ட இடத்திலிருந்து அர்த்தங்களை மொழி மீண்டும் தோண்டி எடுக்கிறது எனலாம்.*

*பாதிக்கப்பட்ட இனத்தவன் புழுக்கத்தில் வேக்காட்டில் - நான் குமைக்கின்ற போதெல்லாம் எல்லாவற்றையும் பின்தள்ளிக் கொண்டு ஒரு கேள்வி என்னுள் எழும். "நீதி - நியாயம் உணர்ந்த சிங்களவர்கள் ஏன் உரத்துப் பேசவில்லை? தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்க பெரும்பான்மையானோர் மௌன அங்கீகாரம் தருகிறார்களா?" என்பதே அது. இருந்த கொஞ்ச நம்பிக்கையும் ஆட்டம் கண்டது 1983 ஜூலையில் என்று கூறும் சோ.ப. என்று அழைக்கப்படும் சோ.பத்மநாதனின் 'தென்னிலங்கைக் கவிதை' எனும் மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுப்பிலிருந்து சில கவிதைகள்.*

## அடையாளம்

என்னை உனக்குத் தெரியாது
ஆனாலும் என்மீது முத்திரை குத்தினாய்
உன் முன்னேற்றத்துக்காக
இளமை வனப்போடு
நான் மலர்ந்த போது
நீ சந்தேகப்பட்டாய்
நான் கசப்புணர்வை முண்டி விழுங்கிக்
கொண்டேன்
நான் சுதந்திரத்துக்காக அழுதபோது
நீ என்னை அடித்தாய்
வலியால் நான் அலறியபோது
என் கூக்குரல் லயத்துக்கு நீ
தாளமிட்டாய்.
நான் கெஞ்சினேன்
நீ கேட்கவில்லை
நான் எச்சரித்தேன்
நீ பரிகசித்தாய்
இவ்வாறுதான் வளர்ந்தது - குரோதம்.

நான் வாதிட்டால்
என்னைப் புரட்சிக்காரன் என்கிறாய்
ஆனால் மக்களுக்குப் பொய்யுரைக்கும்
நீ?
தலைவன்!
தூங்கும் மக்களை நான் விழித்தெழச்
செய்தால்
என்னைச் சந்தர்ப்பவாதி என்கிறாய்
நீ மக்களைக் கொல்லும் போது
நீ நீதிமானாகிறாய்
எப்போதும் உன் முன்னேற்றத்துக்காக!
கொள்கைக்காக நான் போராடினால்
வடக்கிலும் தெற்கிலும் இருந்து
கூக்குரலிடுகிறாய்.

நான் தீவிரவாதி என்று!
நீ ஆயுதம் தூக்கினால்
நீ தேசபக்தன்
தற்பாதுகாப்புக்காக நான் ஆயுதம்
தரித்தால்
நான் பயங்கரவாதி
எப்போதும் உன் முன்னேற்றத்துக்காக!
சிறுபான்மையினருக்குக் குரல்
கொடுத்தால்
நான் ஈழவாதி
பிரிவினையை எதிர்த்தால்
நான் இளவாதி
எப்போதும் உன் முன்னேற்றத்துக்காக!
வெறிச்சோடிய தெருமுனையில்
நாய்க்கும் காகத்துக்கும் இரையாக
அரைகுறையாக எரிந்த என் உடல்
ஒரு ரயருள் கிடக்கும் போது
நான் பயங்கரவாதி!

என்னை உனக்குத் தெரியாது
என் அடையாளத்தை
நீ அறிய முயன்றதுமில்லை
ஆயின்
உன் அடையாளம் என்னவோ?

*ஆங்கில மூலம்: நிமல் சோமரத்ன*

## அஞ்சலி

அவளைக் கந்தைகளாற் சுற்றி
ஒரு பெட்டியில்
கிடத்தியிருக்கிறார்கள்
சடங்குகள் தொடர்கின்றன
பொழுதுபடுமுன் அவளை
அடக்கம் செய்து விடுவார்கள்
அமைதியாகப் பார்க்கிறேன்
ஏழைப் பெண்ணே
என்ன நினைத்திருந்தாய்?
உன் களைத்த பகற்
பொழுதுகளிலும்
ஓய்ந்த இரவுப் பொழுதுகளிலும்
உன்னை வாட்டிய
தனிமைத் துயர்களால்
கட்டுண்ணாது
நீ சுமந்து பெற்ற பிள்ளை
வாழ்வானெனக் கனவு கண்டாயா?


எஞ்சிய பாண் துண்டுகளையும்
கந்தைத் துணிகளையும்
பழைய போத்தல்களையும்
பொறுக்கிய வேளைகளில்
உனக்கென்றொரு வீடு
காய்ச்சலால் நடுங்கும்
உடலைச் சாய்க்க ஒரு கட்டில்
என்றெல்லாம் ஆசைப்பட்டதுண்டா?
இன்றைய பொழுது என்பது
உனக்கு விடியப் போவதில்லை
என
நேற்றிரவு
நீ உணர்ந்த போது
ஏழைப் பெண்ணே
வானத்துத் தாரகை வரை போய்
சிறிது காலம்
நீ சிறகிலிட்டுச் சீராட்டிய
பிள்ளையை
காக்கும்படி கடவுளிடம்
வரங்கேட்டாயா?

அந்தச் சிறு பையன் அழவில்லை
அமைதியாகக் காத்திருக்கிறான்
உன் சிரிப்பொலியைக் கேட்பதற்கு
"இதோ வந்துவிட்டேன்,
குழந்தாய்,
சேகரித்த உணவுகளால்
என் கைப்பை கனக்கிறது
வா பாடுவோம்
நாம் உயிர்வாழும்
மகிழ்ச்சியைக் கொண்டாடுவோம்"


தெருக்களை அளந்த தாயே!
நீ எங்கிருந்தாலும்
உன் பிள்ளையை அணுகி
அவன் காதில் ஒரு ரகசியம்
சொல்வாய்
'வாழ்வதற்கு
அவன்
அழுதாக வேண்டும்' என்று.

*ஆங்கில மூலம்: மானெல் அபயரத்ன*


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : த. ரஜிகலா
வயது : 19
முகவரி : நெடுந்தீவு மேற்கு, 1ஆம் வட்டாரம், நெடுந்தீவு.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைத் தொடர்பு.



பெயர் : நூர்தீன் நவ்பீக்
வயது : 19
முகவரி : ரகுமானியா வீதி, கிண்ணியா - 01
பொழுதுபோக்கு : வழமையானவை



பெயர் : எல். அல்ஷம்
வயது : 25
முகவரி : CD வேர்ல்ட், மன்னார் வீதி, மாங்குளம்.
பொழுதுபோக்கு : வானொலி, பத்திரிகை.



பெயர் : எம். நபாஸ்
வயது : 25
முகவரி : O.M. Office, ble - 01, P.O.Box 47, R.A.A. Qatar patroleum, Doha - Qatar.
பொழுதுபோக்கு : கணனியோடு இருப்பது.

# லேடிஸ் ஸ்பெஷல்


## குழந்தைகளை சாப்பிட வைப்பது எப்படி?

**சா**ப்பிடாமல் அடம் பிடிப்பது குழந்தைகளின் சுபாவம். அதை மாற்றமுடியாமல் திண்டாடுவது அம்மாக்களின் சுபாவம் என்றாகிவிட்டது. அடம் பிடிக்கும் குழந்தைகளை ஊட்டச்சத்து மிக்க உணவு வகைகளைச் சாப்பிட வைப்பது சுலபமானதல்ல. மணிக்கணக்கில் நீடிக்கும் சாப்பிடும் நேரங்களைக் குறைக்க வேண்டுமா? இதோ சில யோசனைகள் !

### குழந்தைகள் முடிவெடுக்கட்டும்


எதையாவது சமைத்துவிட்டு "இதைச் சாப்பிடப் போகிறாயா, இல்லையா?" என்று குழந்தைகளை மிரட்டுவதை மறந்துவிடுங்கள். நாளை அல்லது அடுத்த ஒரு வாரம் உங்கள் குழந்தைகள் எதைச் சாப்பிட விரும்புகிறார்கள் என்பதைக் கேட்டுச் சமைத்தால் அவர்கள் வேண்டாம் என்று சொல்ல வாய்ப்பு இருக்காது. அவர்கள் கேட்பதெல்லாம் சமைக்க நேரமில்லை என்றால் அவற்றை விடுமுறை நாட்களில் சமைப்பதாகக் கூறலாம்.

இந்த வம்பே வேண்டாம் என்று நினைப்பவர்கள் 2 அல்லது 3 உணவு வகைகளிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்படி குழந்தைகளிடம் கேட்கலாம். குழந்தைகளிடையே எதைச் சாப்பிட வேண்டும் என்ற சண்டை ஏற்படலாம். அப்படி ஏற்படாமல் இருக்க 'குழந்தைகளிடையே உருவாகும் போட்டியைத் தடுப்பது எப்படி' என்று தெரிந்துகொள்ளுங்கள்.



### சமையலில் குழந்தைகள் உதவட்டும்

நீங்கள் சமைக்கும்போது உங்கள் குழந்தைகளின் உதவியை நாடுங்கள். அவர்கள் வயதிற்கேற்ப, சமையலில் உங்களுக்கு உதவும்படி கேட்டுக் கொள்ளுங்கள். பரிமாறும் போது, குழந்தை உதவியதை மறக்காமல் அனைவரிடமும் சொல்லுங்கள். நீங்களும் மற்ற குடும்பத்தினரும் குழந்தையைப் பாராட்டுங்கள். இப்போது குழந்தை முகம் சுளிக்காமல் சாப்பிடுவதைப் பாருங்கள்!



### வித்தியாசமாக சாப்பிடட்டும்

பெரியோர்கள் சாப்பிடுவதைப் போலவே குழந்தைகள் சாப்பிட வேண்டும் என்று நினைக்காதீர்கள். "சப்பாத்தியுடன் ஜாம் யாராவது சாப்பிடுவாங்களா?" "சீஸ் சாதத்துடன் சாப்பிடக்கூடாது!" இப்படிச் சொல்வதைவிட்டு அவர்கள் விரும்பும் வகையில் உணவைக் கொடுத்தால், குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

### பசிக்கும் போது சாப்பிடட்டும்


நாம் சாப்பிடும் நேரங்களில் குழந்தைகளும் சாப்பிட வேண்டும் என்று நினைப்பதால் தான் நாம் அவர்களை வற்புறுத்துகிறோம். பசித்தால் அதைத் தாங்கிக் கொண்டு எந்தக் குழந்தையும் சாப்பிடாமல் இருக்காது! நம் வற்புறுத்தல் அவர்களுக்கு சாப்பிடும் பழக்கத்தைவிட உணவை வெறுக்கும் பழக்கத்தையே உண்டாக்கும். இதைத் தவிர்க்க, குழந்தைகள் விரும்பிக் கேட்கும்போது உணவு கொடுத்தால் அவர்களுக்கு உணவைக் கண்டால் ஓட வேண்டும் என்ற நினைப்பு மாறிவிடும்.

### ஷ்ஷ்ஷ்!! தெரியாமலே போகட்டும்

பல சமயங்களில் சத்தான உணவு வகைகள் குழந்தைகளுக்குப் பிடிக்காமல் போகலாம். அதற்காக அவற்றை ஒதுக்கிவிட வேண்டாம். மிகச் சிறிய துண்டுகளாக நறுக்கி, துறுவி அல்லது நன்றாக அரைத்து, மசித்து அவர்களுக்குப் பிடித்த உணவுடன் கலந்துவிடலாம். இவற்றைக் குறைவான அளவில் சேர்ப்பது நல்லது. அதிக அளவில் கலந்து ருசி மாறிவிட்டாலும் கவலை வேண்டாம். இருக்கவே இருக்கு தக்காளி சோஸ், சீஸ் போன்றவை! மேலே உள்ள குறிப்புகளை பின்பற்றினால் ஒரே நாளில் அல்லது வாரத்தில் குழந்தைகள் மாறிவிடுவார்கள் என்று எண்ண வேண்டாம். தொடர்ந்து பின்பற்றுங்கள். ஒரு மாதத்தில் நீங்களே மாற்றத்தைப் பார்க்கலாம்.

## வயதைச் சொல்லும் கழுத்து

**ஒரு** பெண்ணின் கழுத்தைப் பார்த்து அவரின் வயதைச் சொல்லிவிடலாம். அதற்குக் காரணம் கழுத்திலே ஏற்படும் சுருக்கங்கள் மற்றும் கோடுகள். வழவழப்பான கழுத்தைப் பெறுவது அரிது. ஆனால் கீழ்வரும் பயிற்சிகளைச் செய்வதன் மூலம் கழுத்தைச் சுருக்கமில்லாமல் நன்றாக வைத்துக்கொள்ள முடியும்.



### தினசரி கழுத்துப் பயிற்சி

தலையைப் பின்புறம் 10 முறையும் முன்புறம் 10 முறையும் சாய்க்கவும்.

தலையை நன்றாகப் பின்நோக்கி வைத்துக்கொண்டு, வாயை நன்றாகத் திறந்து அசைத்து மூடவும்.

தலையை ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்குத் திருப்பவும். பிறகு தலையை வலது தோள்பட்டை வரை கொண்டு சென்று மறுபடி இடது தோள்பட்டைக்குக் கொண்டு செல்லவும். இதுபோல் 10 முதல் 20 தடவை செய்யவும்.

### கழுத்துப் பராமரிப்பு


நடக்கும் போதும், உட்காரும் போதும் தலையை நிமிர்த்தி தோள்பட்டையைப் பின்பக்கம் தள்ளியபடி இருக்கவும்.

உலர்ந்த காற்று மற்றும் வெயில் ஆகியவற்றிலிருந்து உடம்பைப் பாதுகாத்துக் கொள்ளவும். நீச்சல் பயிற்சிக்குப் பின், நல்ல நீரில் குளித்து உப்புத் தண்ணீர் மற்றும் குளோரின் ஆகியவற்றிலிருந்து உடம்பைப் பாதுகாக்கவும்.

கழுத்துப் பகுதியை இறுக்கமாக்கும் கிரீம் உபயோகிக்கலாம். கிரீமை மேல் நோக்கித் தேய்க்க வேண்டும்.

முகத்திற்கு தரும் முக்கியத்துவத்தைக் கழுத்திற்கும் தர வேண்டும்.


கழுத்திற்கு மாஸ்க், மஸாஜ் ஆகியவை மிகவும் முக்கியம்.



## மழைக்கால அழகு



**ம**ழைக் காலத்தில் எங்கு பார்த்தாலும் ஈரத் தன்மை உருவாகிவிடுகிறது. குறிப்பாக பெண்களின் கூந்தல் உலராமலே இருக்கும். கூந்தல் ஈரத் தன்மையுடனேயே இருந்தால், முடியில் ஒருவித நாற்றம் உருவாகிவிடும். மழைக் காலத்தில் கூந்தலில் இவ்வாறு ஏற்படும் பிரச்சினைகளுக்கு வீட்டிலேயே நிவாரணம் தேடிக்கொள்ளலாம். மழைக் காலத்தில் தலைக்குக் குளித்தபின்பு சிறிய வெங்காயம், துளி இரண்டையும் இடித்துச் சாறு எடுத்து கூந்தலில் காய் போல பிடித்திருக்கும் பகுதிகளில் தேய்க்க வேண்டும். இந்தச் சாறை முடியில் மட்டும்தான் தேய்க்கவேண்டும். மண்டையோட்டில் தேய்த்துவிடக் கூடாது.



மழைக் காலத்தில் குளிப்பதற்கு முன்னால் கூந்தலில் ஆவி பிடிக்க வேண்டும். பின்பு ஹெர்பல் ஷாம்பூ அல்லது பயறுத்தூள் பயன்படுத்திக் கூந்தலைக் கழுவ வேண்டும். ஈரம் இல்லாத துண்டால் கூந்தலைத் துடைத்துவிட வேண்டும். அடுத்து மின் விசிறி அருகில் எச்சரிக்கையுடன் கூந்தலை விரித்து உலரவிட வேண்டும்.

இவ்வாறு செய்துவந்தால் மழைக் காலத்தில் கூந்தலில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாமலே பார்த்துக் கொள்ளலாம். கூந்தலில் சிக்குப்பிடித்திருக்கும் போது, 'ஹாட் ஆயில் மஸாஜ்' செய்வது சிறந்தது. ஆலிவ் எண்ணெயை லேசாக சூடாக்கி, தலையில் தேய்த்து சிறிது நேரம் கழித்து கூந்தலைச் சீவவேண்டும். கூந்தலில் ஈரப்பதம் இருக்கும்போது கூந்தலைக் கட்டக் கூடாது. கட்டினால், கூந்தலில் கெட்டிபிடிப்பது மட்டுமின்றி கூந்தலில் இறுதிப் பகுதி உடைந்தும் போய் விடும். அதனால் கூந்தலில் தண்ணீர் படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தலைக்குக் குளித்தால் போதுமானது.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* –ஷோபா–

### வேர்க்கடலை கார பிஸ்கட்

***தேவையான பொருட்கள் :***

| | |
|---|---|
| வேர்க்கடலை | - 1/4 கிலோ |
| கோதுமை மா | - 1/4 கிலோ |
| மிளகு | - 1 கரண்டி |
| உப்பு | - தேவையான அளவு |
| கடலை எண்ணெய் | - 250 கிராம் |
| வெண்ணெய் | - 50 கிராம் |

***செய்முறை :***

வேர்க்கடலையை தனித்தனியே வறுத்து மிக்ஸியில் அரைக்கவும். மிளகைப் பொடி செய்யவும். கோதுமை மாவைச் அரித்து, வெண்ணெய், உப்பு, வேர்க்கடலை மா சேர்த்து, கொஞ்சமாகத் தண்ணீர் தெளித்து கெட்டியாகப் பிசையவும். பெரிய உருண்டைகளாய் 1/4 செ.மீட்டர் கனமான சதுரமாகவோ, வட்டமாகவோ பிஸ்கட் வடிவில் கீறவும். தாச்சியில் கடலை எண்ணெய் காய்ந்ததும் பொரித்து எடுக்கவும். கரகரப்புடன், ருசியாகவும் இருக்கும்.

"சேசே! ஆலிஸன் இப் படிப் படுத்திருக்கும்போது உன்னைத் தனியாய் விட்டு விட்டுப் போவதா வது!" என்று அம்மா பதிலளித்த போது பேஜுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

வீட்டுக்குத் திரும்பிய கொஞ்ச நேரத் துக்கெல்லாம், "எனக்கு வேலை இருக் கிறது" என்று சொல்லி, பிராட் வெளியே புறப்பட்டு விட்டான்.

"ராத்திரி பதினொரு மணிக்கா வேலை?" என்று பேஜ் சொன்னதை அவன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. கிளம்பி விட்டான்.

அடுத்த நாள் காலை ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்ட போது அம்மாவையோ அக்கா வையோ பேஜ் கூப்பிடவில்லை. அன்று விடுமுறையாதலால் ஆண்டி வீட்டில் இருந்தான்.

"அவனைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னதும் அம்மா பதைத்துப் போனாள். "ஐயோ, அவன் பாத்ரூமுக்குப் போக வேண்டும் என்று சொன்னால் என்ன செய்யட்டும்?" என்றாள்.

பார்த்து, இப்படிக் கூட நடந்ததா என்று சிரிப்பாய்!" என்று கூறினான்.

ஆஸ்பத்திரியிலிருந்து அவள் வீடு திரும்பியபோது டெலிபோன் மணி அடித்துக் கொண்டிருந்தது.

எடுத்தாள். கூப்பிட்டது அவளுடைய பழைய சினேகிதியொருத்தி.

ஆலிஸன் எப்படி இருக்கிறாள் என்று விசாரித்தவள், "என்ன ஆயிற்று உனக்கும் உன் கணவனுக்கும்? விவாகரத்து செய்து கொள்ளப் போகிறீர்களா?" என்று கேட்டாள்.

"நீயும் பிராடும் விவாகரத்து செய்துகொள்ளப் போகிறீர்களா என்ன?" என்று அந்தச் சினேகிதி கேட்டதும், பேஜுக்கு உடம்பெங்கும் ரத்தம் உறைந்து சில்லென்று ஆகிவிட்டது.

"இல்லையே...ஏன்..ஏன் அப்படிக் கேட்கிறாய்?" என்று திணறினாள்.

"நான் சொல்வது ஒருவேளை தப்பாயி ருந்தாலும் இருக்கலாம்..."என்று தயக்கத்து டன் பீடிகை போட்டுக் கொண்டு பேசினாள்

**சென்ற வாரம்**

**மறுநாள் காலை ஆஸ்பத்திரிக்கு ஆலிஸனைப் பார்க்கச் சென்றார்கள். ஆலிஸனின் நிலையைக் கண்டதும் அலெக்ஸி பெரிதும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தவளாக பார்க்கிறாள். பின் அங்கிருந்து பேஜின் அக்காவும், அம்மாவும் கடைவீதிக்குச் செல்கிறார்கள். ஆண்டியிடம் பேஜ் மிகவும் அன்பாக கதைத்துக் கொண்டிருக்கிறாள்...**

# ஒரு தாய் மகள்

57

சினேகிதி நம்பமாட்டாள் என்று பேஜுக்குத் தெரியும். விவாகரத்து வரை விஷயம் வந்து விட்டது என்பதைத் தெரிந்து கொண்டுதான் அவள் ஆழம் பார்த்திருக்கிறாள்.

போனை வைத்துவிட்டு, ஆண்டியின் அறைக்குப் போனபோது அவன் ஏதோ



"ஆண்டிக்கு ஏழு வயதாகிறது. பாத்ரூ முக்குப் போக அவனுக்குத் தெரியும். தேவைப்பட்டால் உனக்கு டிபன் கூடப் பண்ணித் தருவான்" என்று முகத்தில் அறைந்தாற் போல் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

ஆஸ்பத்திரியில் அவளைப் பார்த்ததுமே தாரென்ஸனுக்கு அவளுடைய கஷ்டம் புரிந்துவிட்டது.

"ஏன் உன் அம்மா மீதும் அக்கா மீதும் உனக்கு இத்தனை வெறுப்பு?" என்று முன் பொரு முறை கேட்டது போலவே இப்போ தும் கேட்டான்.

"நாற்றமெடுத்த பிறவிகள் அவர்கள். என் அருகில் அவர்கள் நின்றாலே எனக்குக் குமட்டுகிறது. என் குழந்தைகளின் அருகில் அவர்கள் இருந்தால் அதற்கு மேல் குமட்டுகிறது" என்றாள் பேஜ். தொடர்ந்து வெறுப்புடன் சொன்னாள் : "நியூயார்க்கை விட்டு நான் இங்கே வந்ததற்குக் காரணமே அவர்கள்தான். நல்ல வேளையாக நான் அங்கே இருந்தபோது பிராடின் சினேகிதம் கிடைத்தது. கல்யாணம் செய்துகொண்டு இங்கே வந்து விட்டேன்...அங்கே இருந்திருந்தால்...!"

"சொல்லும்போதே பழைய துன்ப நினைவுகளினால் அவள் கண்ணில் நீர் துளித்தது. தாரென்ஸன் அவளை ஆரத்து டன் அணைத்து முத்தமிட்டு, "அடுத்த வருஷம் இதையெல்லாம் நினைத்துப்

அவள். உன் கணவரை அடிக்கடி இந்தப் பகுதியில் ஒரு இளம் பெண்ணுடன் பார்க்கி றேன். முதலில் அவள் உன் பெண் ஆலிஸனின் சினேகிதியாக இருக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் இவளுக்கு வயது இருபது இருபத்தைந்து இருக்கும். இங்கே என் வீட்டுக்குப் பக்கத்தில்தான் அவள் வீடு. உன் கணவர் அவளுடனேயே இருக்கிறார் என்று தோன்றுகிறது. இன்று

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

காலை இரண்டு பேரும் ஜாகிங் போவதைப் பார்த்ததால் உன்னிடம் சொல்கிறேன்..."

பேஜுக்கு மூச்சு அடைத்தது. இத்தனை நாளும் இலைமறை காய்மறையாக இருந்த விஷயம் இப்போது நாலு பேர் கண்ணில் படுகிற அளவுக்குப் பகிரங்கமாகிவிட்டது! ஆலியின் தோழி என்று நினைத்தாளாம். அவ்வளவு இளம் வயதுப் பெண்ணுடன்... எல்லாரும் பார்க்கிற மாதிரி ஜாகிங்... கடவுளே!

"அந்தப் பெண் என் கணவருடன் வேலை பார்க்கிறவள். இரண்டு பேருமாகச் சேர்ந்து ஒரு பிராஜக்ட் செய்கிறார்கள். அவ்வளவுதான்..."என்று சமாளிப்பாகப் பதில் கூறினாள்.

ஆனால் அந்தப் பதிலை அவள்

விளையாடிக் கொண்டிருந்தான். ஆனால் அவன் முகத்தைச் சோகம் கப்பியிருந் ததைக் கண்டு அவள் நெஞ்சம் பிளந்தது. கடந்த மூன்று வாரங்களில் வாழ்க்கை எத்தனை சின்னாபின்னமாகி விட்டது! எல்லா ருமே நடுக் கடலில் மூழ்கிக் கொண்டிருப் பது போல இருக்கிறது!

அவனருகில் அமர்ந்து, "பாட்டி எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டாள்.


"பாட்டி, பெரியம்மா இரண்டு பேருக் குமே ஒன்றும் தெரியவில்லை அம்மா" என்றான் அவன். "நான்தான் டிபன் செய்து கொடுத்தேன். பெரியம்மா நகத்தை யெல்லாம் ரொம்ப நீளமாக வளர்த்திட்டிருக் கிறாள். பாட்டிலைத் திறக்கக் கூட முடியலை. நான்தான் திறந்து கொடுத்தேன். பாட்டிக்குக் கைக் கடியாரத்துக்குச் சாவி கொடுக்கத் தெரியலே. மூக்குக் கண்ணா டியை எங்கே வைச்சோம்னு தெரியலியாம். கண்ணே தெரியலை" என்று சொல்லிக் கொண்டே போன ஆண்டி, "அப்பா எங்கேம்மா?" என்று திடீரெனக் கேட்டான்.

"ஆபஸீலே பிஸியாய் இருக்கிறார்" என்று வழக்கம் போல் பொய் சொன்னாள் பேஜ்.

"இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை அம்மா, இன்னைக்குக் கூடவா ஆபிஸ்?"

(தாய் தொடர்வாள்.....)

# ஒரு கிராமத்துப் பறவையும் சில கடல்களும்



16

இரண்டாம் உலகப்போரில் வல்லரசு களின் கனவுகளில் கூட கலகம் செய்தவர்கள் - கொரியர்களை அறுபது ஆண்டுகள் அடிமைகளாக வைத்திருந்தவர் கள் - மூன்று லட்சம் சீனர்களைக் குத்திக் கொன்றவர்கள் - இன்று மெல்லியவர் களாய் - புத்தர்களில் பிம்பங்களாய் கனிவைக் கண்களிலும் - பணிவை உடம்பிலும் காட்டுகிறார்கள்.

ஒரு பக்கம் கல்வியால் நிகழும் பண்பாட்டுப் புரட்சி - இன்னொரு பக்கம் விஞ்ஞானத்தால் நிகழும் தொழிற்புரட்சி - இந்த இரண்டு புரட்சிகளும் நிகழ்ந்து நிலைபெற வேண்டுமென்றால் போரற்ற - கலவரமற்ற ஒரு சமுதாய அமைதி நிலவ வேண்டுமென்பதை அரை நூற்றாண்டுக்கு முன்பே அறிந்து அமல்படுத்தி விட்டார்கள். அன்று நட்ட அமைதிக்கொடியின் விஞ் ஞானக் கனிகளை இன்று சுவைக்கிறார்கள்.

என் அன்புத் தம்பி டாக்டர் வீ. அருள், ஜப்பான் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர்.

புறாவின் இறகு போல் மெல்லிய மனசுக்காரர்.

விஞ்ஞானியாய் இருந்தாலும் தமிழ்க் கவிதைப் படைப்பாளி; படிப்பாளி.

அவரது 'முதல் பார்வை' என்ற கவிதைத் தொகுப்பை வெளியிடவும் பொங்கல் விழாவில் சிறப்புரையாற்றவும் தான் அவர் என்னை அழைத்திருந்தார்.

டாக்டர் ஜெயவேல், டாக்டர் செங்குட்டுவன், டாக்டர் அண்ணாதுரை, டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் சுந்த ரேசன் உள்ளிட்ட நண்பர்கள் வரவேற்ற அன்பின் கதகதப்பு இதமாக இருந்தது.

அணிவித்த சால்லையை அகற்ற வில்லை நான்; மரியாதை அல்ல; குளிர்.

துடைத்து வைத்த விமானநிலையம்; வெளியே நீண்டு கிடக்கும் கறுப்புக் கம்பளச் சாலைகள்.

கதவுக்குப் பின்னால் எட்டிப் பார்க்கும் பழை தமிழ்பட கதாநாயகியாய் இருட் டுக்குள் நின்று கொண்டு வெளிச்சத்தில் கொஞ்சம் கொஞ்சம் முகம் காட்டும் ஜப்பான்

ஒன்றரை மணி நேரப்பயணம்; சுகுபா அறிவியல் நகரம் அடைந்தோம்.

விரிந்து கிடந்து ஒரு விருந்தினர் அறையில் தங்க வைத்தார்கள் தங்க நண்பர்கள்.

நல்ல அலுப்பெனக்கு; உடம்பும் மூளையும் ஒரு சேரக் களைத்திருந்தன.

சென்னையின் பந்தங்களை அறுத்துக்கொண்டு வெளியேறுவதென்றால் இல்லாத நாட்களுக்கும் சேர்த்து முன கூட்டியே வேலைகளை முடித்துத்தர வேண்டியிருக்கிறது.

கடைசி நான்கு நாட்களில் எட்டுநாள் வேலை செய்த பாரத்தைத் தொப்பென்று இறக்கிப் போட்டேன் ஜப்பான் படுக்கையில்.

அடுத்த சில நிமிடங்களில் எண்ணங் களின் பிடியிலிருந்து நழுவி நழுவி தூக்கத்தின் பாதாளத்தில் சென்று விழுந்தது உடம்பு.

மூளைக்குள் ஓர் அலாரம் இருக்கிறது. இத்தனை மணிக்கு எழும்பு என்றால் எழுப்பும். நாளை அதிகாலைக்கு நான் அடிமையில்லை; என்னை எழுப்பாதே என்றால் அதுவும் உறங்கிவிடும்.

ஒன்பது மணிக்குத்தான் எழுந்தேன்; வெளிச்சத்தில் கண்முன்னே விரிந்தது ஜப்பான்.

உழைப்பின் பூமிக்கு வந்திருக்கிறேன்.

கரிக்குள்ளிருந்து வைரமாய் எழுந்த ஒரு தேசத்திற்கு வந்திருக்கிறேன்.

புன்னகையை தேசிய மொழியாய் உதடுகில் உடுத்திருக்கும் பண்பாட்டு நாட்டுக்கு வந்திருக்கிறேன்.

இங்கிருந்து எந்தச் செல்வத்தை எடுத்துச் செல்வது என்நாட்டுக்கு?

அறிவுச் செல்வம்தான்; உழைப்புச் செல்வம் தான்.

என்னடா வைரமுத்து பேசுகிறாய்? அறியவில்லையா உன் நாட்டில்...? உழைப்பில்லையா உன் நாட்டில்...?

அறிவிருக்கிறது என் நாட்டில். கத்தியைப் போல் கூர்த்த மதி; முற்றுமாய் இன்னுமது முறைப்படுத்தப் படவில்லை. ஆதலால் அந்த மதி, படைப்பதற்கு பதில் பெரும்பாலும் உடைப்பதற்கே பயன்படுத்தப் படுகிறது.

உழைப்பு இருக்கிறது என் நாட்டில். வீரிய விதைகளைப் பாறையில் விதைக்கம் விரிய உழைப்பு; உணவு - தண்ணீர் இரண்டையும் கூட எட்ட முடியாத ஊனஉழைப்பு.

புதிய நூற்றாண்டு எதை நோக்கியது? புத்துலகத்தின் சந்தை யாது? என்பதை அரைநூற்றாண்டுக்கு முன்னே ஆய்ந்து அறிந்து ஒட்டுமொத்த தேசத்தையே அதற்குள் ஆட்படுத்தியிருக்கிறது ஜப்பான்.

இனிவரும் உலகம் கட்டுமான உலகம்; இனி வரும் உலகம் போக்கு வரத்து உலகம்; இனிவரும் உலகம் தொலைதொடர்பு உலகம்.

இதைப் புரிந்துகொண்டு இந்த மூன்றின் மீதும் அறிவு - உழைப்பு - பணம் மூன்றையும் முதலீடு செய்தது ஜப்பான்.

ஒரு மகா ரகசியத்தையும் அறிய முடிந்தது என்னால்.

எந்தத் தொழில்நுட்பமும் அவர்களின் சொந்தத் தொழில்நுட்பம் இல்லை.

*(தொடரும்...)*

*நன்றி :- திருமதி வைரமுத்து*



## தளர்ந்தும் தளராத கொள்கை

**பிரிட்னி ஸ்பெயர்ஸ் புகழ் பெற்ற பொப் பாடகி. பாடல்களைப் போலவே இவர் ஆடைகளைச் சிக்கனமாக அணிவதிலும் பிரபலமானவர்.**

**சீனாவுக்கு ஒரு முறை தனது நிகழ்ச்சிக்காக இவர் செல்ல தயாரான போது, சீன அரசாங்கம் இவருக்கு விடுத்த ஒரு நிபந்தனை 'ஆடைகள் அணிந்து வரவும்' என்பதுதான்!**

**அண்மையில் தான் இவருக்கு ஒரு குழந்தை பிறந்தது.**

**கர்ப்ப காலத்தில் கூட இவர் தனது 'ஆடை கொள்கையை' தளர விடவில்லை என்பதையே இங்குக் காட்டுகின்றார்.**

# சாதனை படைத்த ஒளிபரப்பாளர் ஓபரா வின்ஃப்ரே



**அமெரிக்கத்** தொலைக்காட்சியில் பிரபலமான ஓபரா வின்.ஃ.ப்ரே, இன்று உலகிலேயே அதிகம் சம்பாதிக்கும் பொழுதுபோக்குக் கலைஞர். அம்மணியின் சொத்து மதிப்பு 13 பில்லியன் டொலர்கள். இலங்கை மதிப்பில் 13ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல்!

ஓபராவின் வாழ்க்கை தேவதைகளால் ஆசீர்வதிக்கப்பட்ட கதை அல்ல. சாத்தான்களாலும் சபிக்கப்பட்ட வாழ்க்கை. அவர் கடந்து வந்திருக்கிற சோகங்களைப் பட்டியலிட்டால், மெகா தொடர்கள் தோற்கும். ஆனாலும் ஓபரா ஜெயித்தார்.

"ஓபரா ஷோ"வை, நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள மக்கள் தினந்தோறும் விரும்பிப் பார்க்கிறார்கள். "இன்ன நபருக்கு இப்படி ஒரு பிரச்சினை. உதவ முடியுமா உங்களால்?" என ஓபரா அறிவித்தால், அடுத்த அரை மணி நேரத்தில் சம்பந்தப்பட்டவருக்கு வேண்டிய பண உதவிகள் தேவைக்கும் பல மடங்கு அதிகமாகவே வந்து குவியும். ஓபரா ஒரு புத்தகத்தையோ, சாம்பார் பொடியையே சிபாரிசு செய்தால், கண் சிமிட்டும் நேரத்தில் அத்தனைச் சரக்கும் மொத்தமாக விற்றுத் தீர்ந்து போகும்.

ஓபராவின் இந்த மகா வெற்றிக்கு முக்கிய காரணம் அவரது கேரக்டர்.

ஓபரா பிறந்ததுமே அவரது அப்பாவும், அம்மாவும் பிரிந்துவிட்டார்கள். ஓபராவை வளர்த்தது அவரது ஏழைப் பாட்டி. சிறுமி ஓபராவுக்குப் படிப்பில் அவ்வளவாக ஆர்வம் இல்லை. ஆனால், மூன்று வயதிலிருந்து, உள்ளூர் தேவாலயம் ஒன்றில் பைபிள் வாசகங்களை எல்லோருக்கும் படித்துக் காட்டுவது, பக்திப் பாடல்களைப் பாடுவது என்று தொடங்கிவிட்டார். இதனால், ஓபராவுக்கு மேடைக் கூச்சம் என்பது சிறிதும் இல்லை.

ஓபராவுக்கு ஆறு வயதானபோது, அவருடைய அம்மாவிடம் போய்ச் சேர்ந்தார். ஆனால், அங்கே அவருக்குப் பல வேதனையான அனுபவங்கள். உறவுக்கார இளைஞன் ஒருவன், விவரம் தெரியாத அந்தச் சிறுமியை பாலியல் வன்முறைக்கு ஆளாக்கினான். இந்த அதிர்ச்சியிலிருந்து ஓபரா மீள்வதற்குள், வேறு சில உறவினர்களும் அவரைத் தங்களின் வக்கிரமான ஆசைகளுக்குப் பயன்படுத்தினர். இதனால் மிகுந்த மன அழுத்தத்துக்கு ஆளாகிவிட்டார் ஓபரா. அதிலிருந்து விடுதலை தேடியவர், போதை மருந்துப் பழக்கத்தில் விழுந்தார்.



அதன் பிறகு, அவர் யாரையும் மதிப்பதில்லை; யாருடைய சொல் பேச்சும் கேட்பதில்லை. இஷ்டம்போல் திரிந்த மகளைத் திருத்த முடியாமல் தோற்றுப்போன அம்மா கடைசி முயற்சியாக, ஓபராவின் அப்பா வெர்னானிடம் அவரை அனுப்பினார்.

அப்போது ஓபராவுக்கு வயது 14. இராணுவ வீரரான வெர்னானுக்கு எதிலும் ஓர் ஒழுங்கு, கட்டுப்பாடு தேவை. நீ இந்த வீட்டில் இருக்க வேண்டுமானால், இன்னின்ன விஷயங்களையெல்லாம் ஒழுங்காகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஒரு லிஸ்ட் போட்டு ஓபராவின் கையில் கொடுத்தார்.

ஓபரா ஒழுங்காகப் படிக்க வேண்டும். தினந்தோறும் ஐந்து புது வார்த்தைகளையாவது கற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும், ஒரு புத்தகத்தைப் படித்துவிட்டு, அதைப் பற்றி ஒரு அறிக்கை எழுதி, அப்பா கையில் கொடுத்தாக வேண்டும்.... ஓபராவுக்கு தாங்க முடியாத எரிச்சல். எனினும் வேறு வழியில்லை என்பதால், அரைமனதாக அப்பாவின் கட்டளைகளுக்குப் பணிந்தார்.

ஆனால் ஆச்சரியம்...வெகு விரைவிலேயே ஓபராவுக்கு படிப்பிலும், நல்ல புத்தகங்களைத் தேடி வாசிப்பதிலும் இயல்பான ஆர்வம் வந்தது. மெள்ள மெள்ள அவரது தவறான பழக்கவழக்கங்கள் தேய்ந்து மறைந்தன. தான் செய்யும் பணி எதுவாக இருந்தாலும், அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதில் தொடங்கி, அப்பாவைப் பார்த்துப் பார்த்து, தொலைந்துபோன தன் வாழ்க்கையை மீட்டெடுத்துக் கொண்டார் ஓபரா.

கல்லூரியில் இருந்த போதே, புகழ்பெற்ற வானொலி நிறுவனம் ஒன்றில் சேர்ந்து, 19 வயதிலேயே செய்தி வாசிப்பாளரானார் ஓபரா. கல்லூரிப் படிப்பை முடித்த பிறகு, வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பங்குபெற்றார்.

அவருடைய வாழ்க்கையில் முக்கியமான திருப்புமுனை, 'ஏ.எம்.சிகாகோ' என்ற நிகழ்ச்சி. எங்கள் இலங்கை தொலைக்காட்சிகளின் காலை நிகழ்ச்சிகள் போன்று, சிகாகோ நேயர்களுக்கான காலை நிகழ்ச்சி அது.

போதுமான வரவேற்பு இல்லாமல் தடுமாறிக்கொண்டு இருந்த அந்த நிகழ்ச்சியில் ஏதாவது புதுமை செய்து அதை ஒப்பேற்ற முடியுமா என்று ஓபராவைக் கூப்பிட்டுப் பார்க்கச் சொன்னார்கள். சுவாரசியமான, பரபரப்பான விஷயங்களைத் தேர்ந்தெடுத்து, தொகுத்து வழங்கத் தொடங்கினார் ஓபரா. ஒரே மாதம்தான்....

கடைசி இடத்தில் இருந்த நிகழ்ச்சி, ஒரேயடியாக முதல் இடத்துக்குப் போட்டியிட்டது.

ஓபரா பேசத் தேர்ந்தெடுக்கும் விஷயங்களும், அவரது தைரியமான அணுகுமுறையும், நிகழ்ச்சியை அவர் தொகுத்து வழங்கும் வேகமும் மக்களை ஈர்த்ததில், அவருக்கெனத் தனி இரசிகர் பட்டாளமே உருவானது. இதனால், அடுத்த வருடம் அந்த நிகழ்ச்சியின் பெயரே, "ஓபரா வின்.ஃ.ப்ரே ஷோ" என்று மாற்றப்பட்டது.

இதெல்லாம் நடந்து, 20 வருடங்கள் ஆகிவிட்டன. 'ஓபரா வின்.ஃ.ப்ரே ஷோ', இன்று வரை உலகின் மிகப் பிரபலமான தொலைக்காட்சி நிகழ்ச்சியாக விளங்கி வருகிறது. இந்த நிகழ்ச்சிக்காக, ஓபரா ஏகப்பட்ட விருதுகளை வாங்கிக் குவித்துவிட்டார். 'இனிமேல் எனக்கு விருதுகளே வேண்டாம். எந்த விருதுக்கும் என் பெயரையோ, என் நிகழ்ச்சியையோ பரிசீலிக்காதீர்கள்' என்று அவர் பகிரங்கமாக அறிவிக்கும் அளவு புகழ்.

1986-இல் 'ஹார்ப்போ' என்ற பெயரில் தனது சொந்தத் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கினார் ஓபரா. (Oprah என்பதன் தலைகீழ்!) ஓபரா பங்குபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தும், இப்போது அவருடைய சொந்தத் தயாரிப்பிலேயே வெளிவருகின்றன.

இதேபோல், ஒக்ஸிஜன் என்ற பெயரில் ஓபரா தொடங்கிய தொலைக்காட்சி சானல், 24 மணி நேரமும் பெண்களுக்கு நல்ல விஷயங்களை வழங்குகிறது. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த திறமையான மாணவர்களின் படிப்புச் செலவுக்காக, தனது 'ஓபரா வின்.ஃ.ப்ரே அறக்கட்டளை' மூலம் தாராளமாக உதவி வருகிறார்.

இதையெல்லாம்விட, ஓபரா பெருமையாக நினைக்கும் சாதனை, தன்னைப் போல சிறுவயதில் பாலியல் வன்முறைக்கு ஆளாகும் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக, அமெரிக்க அரசு கடுமையான சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும் என்ற கோரிக்கையுடன் ஒரு இயக்கத்தை முன்னின்று நடத்தி, அவரது கடுமையான முயற்சியின் பலனாக, 1993ஆம் ஆண்டு அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதைத்தான்!

***ஓபராவின் எதிர்காலத் திட்டம்?***

2011-ஆம் ஆண்டு வரை, 'ஓபரா வின்.ஃ.ப்ரே ஷோ' நீடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இப்போதைக்கு ஓபராவின் கவனம் மொத்தமும் அதன் மீதே!

வானொலி, தொலைக்காட்சி, இரண்டுமே இலத்திரனியல் ஊடகங்கள் என்றாலும் தொலைக்காட்சியில் பேட்டியாளரின் அங்க அசைவுகள், ஆளுமைகள் அழுத்தங்கள், திருத்தங்கள் அனைத்தையுமே நேரடியாகக் கண்டு கொள்ள முடியும். மொழி ஆளுமை, விஷய ஞானம், நிலைமைக்கேற்ப விடயங்களை கையாளும் திறன் போன்றவை தொலைக்காட்சியில் பேட்டி காண்பவருக்கு மிக மிக அவசியமானதாகும். அஜித், விஜய், விக்ரம், நமீதா, நயன்தாராவை மட்டும் வைத்துக்கொண்டு கதையளக்கும் எமது சக்திமிக்கவர்கள் எனக" கூறிக்கொள்ளும் ஒளிபரப்பாளர்களுக்கு இவை சமர்ப்பணம்.

*நன்றி :- A.V.*

## ஓபரா..... சில தகவல்கள்!



ஓபராவுக்கு அவருடைய பெற்றோர் வைத்த பெயர். Orpah என்பதுதான். பைபிளில் வரும் ஒரு கதாபாத்திரத்தின் பெயர் அது. ஆனால் அவருடைய உறவினர்களும், மற்றவர்களும் இந்தப் பெயரை அடிக்கடி Oprah என்று தவறாக உச்சரிக்க, கடைசியில் அதுவே அவருடைய பெயராக நிலைத்துவிட்டது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தவிர, "O" என்ற பெயரில், ஒரு பத்திரிகையும் நடத்திவருகிறார் "ஓ"பரா!.

ஓபரா தனது நிகழ்ச்சிகளில் பெண்களுக்கும், கறுப்பினத்தவருக்கும் மட்டுமே அதிக முக்கியத்துவம் தருவதாகவும், மற்றவர்கள் என்ன சாதனை செய்தாலும், அதை அவர் கண்டுகொள்வதில்லை என்றும் ஒரு குற்றச்சாட்டு உண்டு.

## சுனாமியின் சாட்சி

**உலக** ஊடக புகைப்படப் பிடிப்பாளர் அமைப்பு (W.J.P.A.) சுனாமியின் சாட்சியாக இக்குழந்தையின் புகைப்படத்தினையே தெரிவு செய்துள்ளதாம். இதே உ.ஊ.பு.அ. அமெரிக்கா, வியட்னாம் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பின்போது நிர்வாணமாய் ஓடிய சிறுமியை கொண்ட புகைப்படத்தினை வியட்நாம் யுத்த சாட்சி புகைப்படமாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்புகைப்படம் எடுக்கப்பட்ட சம்பவம் கீழே தரப்படுகிறது.

ஆசியாவை கடல் தன் கொடிய அலைக்கரங்களால் தாக்கி நேரத்தில், மக்கள் ஆளுக்கொரு திசையாகச் சிதறினார்கள். அலையோடு அலையாக, மண்ணோடு மண்ணாகப் போனவர்களுக்காக அழக்கூட அவகாசமின்றி, தன்னுயிர் காத்து மீட்பு முகாம்களில் தஞ்சமடைந்தோரில், புகைப்படத்தில் இருக்கும் இந்தக் குட்டிப் பெண்ணும் இருந்தாள்.




அந்த நேரத்தில் அந்தமானைச் சுற்றிப் பார்க்க வந்திருந்த சுற்றுலா பயணி ஒருவர், கண்ணீரும் கதறலுமாக இருந்த அந்தமான் வாசிகளை மீட்பு முகாம்களுக்குப் போய், பல புகைப்படங்களை எடுத்தார். இந்த மொட்டும் அதில் பதிவானது. உலகத்தின் எல்லா சோகங்களையும் உள்வாங்கிக்கொண்ட அந்தக் கண்களும் மிரட்சியைக் காட்டுகிற முகமும் இந்தக் குட்டிப் பெண்ணை உலகின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றன.

இங்கிலாந்தில் முன்னணி நாளிதழான 'டெய்லி எக்ஸ்பிரஸ்'ஸின் முதல் பக்கத்தில், 'சுனாமியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் காப்பாற்ற எங்களுக்கு உதவுங்கள்!' என்ற வாசகத்தோடு இந்தப் புகைப்படம் வெளிவர, உடனடியாக நீண்டன கருணைக் கரங்கள். குவிந்தது உதவித் தொகை. அது மட்டுமல்ல, இந்தக் குழந்தையைப் பற்றியும் எக்கச்சக்க விசாரணைகள். 'நாங்கள் தத்தெடுத்துக் கொள்கிறோம்' என்று பலரும் கேட்கவே ஆசிரியர் குழுவுக்கு ஒரு விஷயம் உறைத்தது. 'இந்தக் குழந்தை யார்? பெற்றோருடன் பத்திரமாக இருக்கிறதா?' என்று கேள்விகள் எழுந்தன. உடனே, குழந்தையையும் அதன் பெற்றோரையும் தேடிக் கண்டுபிடிக்க முடிவு செய்தனர்.

சுனாமிப் பேரழிவை அந்த நாளிதழுக்குச் செய்தியாக்கித் தந்த நிருபர் சிரில் டிக்ஷன், தன் குழுவினரோடு கிளம்பி, அந்தமானில் உள்ள குறிப்பிட்ட அந்த மீட்பு முகாமுக்குப் போய்ப் பார்க்க, அங்கே இந்தக் குழந்தை இல்லை. தீவே அழிந்த நிலையில், பாதிக்கப்பட்டவர்களை கொல்கத்தா, சென்னை முகாம்களுக்கு அனுப்பிவைத்துவிட்டதாகத் தகவல். அதன்பின் பத்திரிகைகளில் விளம்பரங்கள் கொடுத்தும், மீட்பு முகாம்களில் சுற்றி அலைந்தும் கூடக் குழந்தையைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

சில புகைப்படங்கள் மனதை உலுக்கி, அப்படியே ஆழத்தில் தங்கிவிடுகின்றன. காலம்தான் அதை என்றாவது தூசி தட்டி எடுக்கிறது. போரில் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானின் பச்சைக் கண் பெண்ணை, பல ஆண்டுகள் கழித்துத் தேடிக் கண்டுபிடித்துப் படமெடுத்தார்களே, அதேபோல, இந்தக் குட்டிப் பெண்ணையும் என்றாவது ஒருநாள் கண்டுபிடித்துவிட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதுவரை.... எங்கேயிருந்தாலும் நல்லாயிருக்கட்டும் அக்குழந்தை.

*நன்றி :- பி.ஜே.*

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

இரு எழத்தாளர்கள் சேர்ந்து எழதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

## மொழிவாரி மாநிலம் கோரியது தமிழர் கூட்டணி

திம்புப் பேச்சுவார்த்தையின் இரண்டாவது சுற்றும் தோல்வியில் முடிந்ததால் பிரதமர் ராஜிவ் காந்தி சளைத்து விடவில்லை. திம்புவிலிருந்து கொழும்பு திரும்பும் வழியில் புதுடில்லியில் தரித்து நின்ற எச்.டபிள்யூ.ஜெயவர்த்தனா, பிரதமர் ராஜிவ் காந்தியுடனும் இந்திய அதிகாரிகளுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவாக தமிழர் தரப்புகளுக்கு மேலும் சலுகையளிக்கக்கூடிய மற்றொரு செயற்பாட்டு ஆவணம் தயாரிக்கப்பட்டதென்று ஏற்கனவே கூறியிருந்தோம். அந்த ஆவணமும் கூட இழுபறி நிலையை ஏற்படுத்தியது. இந்த ஆவணத்தை இலங்கைப் பாராளுமன்றமும் அமைச்சரவையும் அங்கீகரிக்கத் தவறிவிட்டதென்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் வெளிவிவகார அமைச்சர் ஏ.சீ.எஸ்.ஹமீத்தும் இந்திய உயர்ஸ்தானிகர் தீக்ஷித்துக்கு அறிவித்தனர். அந்தச் செயற்பாட்டு ஆவணத்திலிருக்கக்கூடிய சில அரசியலமைப்பு அம்சங்களும் சட்டரீதியான விடயங்களும் இலங்கையின் ஒற்றையாட்சித் தன்மைக்கு விரோதமானவையென்றும் இலங்கை தெரிவித்தது. இந்த ஆவணம் அங்கீகரிக்கப்பட்டால் அது தமிழீழப் பிரிவினைக்கு முதற்படியாக அமைந்து விடுமென்றும் இந்தியாவுக்குத் தெரிவிக்கப்பட்டது. செப்டெம்பர் மாதம் நான்காம் திகதி இந்த விடயம் இந்தியாவுக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து மேலதிக கலந்துரையாடலுக்காக உயர்ஸ்தானிகர் தீக்ஷித் செப்டம்பர் 7ஆம் திகதி புதுடில்லிக்கு




**தமிழ் மக்கள் தமிழீழ தனி நாடொன்றினை உருவாக்குவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 1977ஆம் ஆண்டு ஆணை வழங்கியிருந்தாலும் அதற்கு மாற்றீடான தீர்வொன்றினை கவனத்திலெடுக்கத் தயாராக விருப்பதாகத் தெரிவித்தது. ஆனால் கவனத்தில் கொள்ளக்கூடிய அர்த்தமுள்ள எந்த யோசனைகளையும் இலங்கை அரசு சமர்ப்பிக்கவில்லையென்று தமிழர் விடுதலைக் கூட்டணி அந்த ஆவணத்தில் குற்றம்சாட்டி யிருந்தது. எனினும் தமிழர் பிரச்சினைக்குத் திருப்திகரமான தீர்வொன்றினைக் காண இந்தியா எடுக்கும் முயற்சிகளுக்கு உதவியாக தமது யோசனைகளைச் சமர்ப்பிப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்திருந்தது. இந்த ஆவணத்தின் முதல் பகுதியில் இலங்கை மாநிலங்களின் யூனியனாக இருக்க வேண்டுமென்றும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களான வடக்கும் கிழக்கும் தமிழ் மொழி மாநிலமாக இருக்க வேண்டுமென்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.**

அழைக்கப்பட்டார். ஒரு வார காலம் புதுடில்லியில் தங்கியிருந்த தீக்ஷித், இலங்கை அரசுக்கும் தமிழர் தரப்புக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளை மீண்டும்

இணைந்து எழுதுவது
த. சபாரத்தினம்
+
அம்பி மகன்

ஆரம்பிக்கும் வழிவகைகள் குறித்து அதிகாரிகளுடன் ஆராய்ந்தார். இலங்கை திரும்பிய தீக்ஷித் தமிழர்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்கக் கூடிய தீர்வு யோசனைகளைத் தயாரிக்கும் முயற்சிகளைத் தொடருமாறு இந்திய அரசாங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்வதாக இலங்கைக்கு அறிவித்தார். பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் சார்க் அமைப்பின் முதலாவது உச்சிமாநாடு ஏற்பாடாகியிருந்தது. அங்கு செல்லும் இலங்கை, இந்தியத் தலைவர்கள் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டிருந்தனர். எனவே அதற்கு முன்பதாக ஆக்கபூர்வமான யோசனைகள் தயாரிக்குமாறு இலங்கை அரசாங்கம் கேட்கப்பட்டிருந்தது.

(அரசியல் தொடர்)

இதற்கிடையில் அக்டோபர் மாதம் பஹாமாஸில் நடைபெற்ற நாட்டுத் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்ளப் புறப்படுவதற்கு முன்னர் 'டைம்ஸ் ஒப் இந்தியா' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், அதிகாரப் பகிர்வு மாகாண சபைகளுக்குள் மட்டுப்படுத்தப் படுமென்று குறிப்பிட்டார். செயற்பாட்டு ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட யோசனைகளை தமிழர் தரப்புகள் ஏற்றுக்கொண்டால் உடனடியாகவே மாகாணசபைத் தேர்தல் நடத்தத்தான் தயாராக இருப்பதாக அறிவித்தார். அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலையடுத்து நிர்வாகத்தை தமிழர்களிடம் கையளிக்கத் தயாராக இருப்பதாகவும் அப் பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். பஹாமாஸில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்த ஜெயவர்த்தனா, தமிழர்களுக்கு மேலதிக சலுகைகளை வழங்கும் வகையில் செயற்பாட்டு ஆவணத்தில் யோசனைகள் முன்வைக்கப்படுமென்று தெரிவித்திருந்தார். ஆனால் நாடு திரும்பிய ஜெயவர்த்தனா தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான பிரசாரங்களைக் கட்டவிழ்த்து விட்டார். தமிழர் விடுதலைக் கூட்டணி, இந்திய அரசின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட செயற்பாடு ஆவணத்தை ஏற்றுக் கொள்ளவில்லையென்பதே ஜெயவர்த்தனாவின் குற்றச்சாட்டாகும்.

1985ஆம் ஆண்டு டிசம்பர் மாத முதல் வாரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி 12 பக்க ஆவணமொன்றினை ரொமேஷ் பண்டாரியிடம் கையளித்தது. இலங்கையி் சமஷ்டி நிர்வ  மொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதே அதில் முக்கிய கோரிக்கையாக அமைந்திருந்தது. தமிழ் மக்கள் தமிழீழ தனி நாடொன்றினை உருவாக்குவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 1977ஆம் ஆண்டு ஆணை வழங்கியிருந்தாலும் அதற்கு மாற்றீடான தீர்வொன்றினை கவனத்திலெடுக்கத் தயாராக விருப்பதாகத் தெரிவித்தது. ஆனால் கவனத்தில் கொள்ளக்கூடிய அர்த்தமுள்ள எந்த யோசனைகளையும் இலங்கை அரசு சமர்ப்பிக்கவில்லையென்று தமிழர் விடுதலைக் கூட்டணி அந்த ஆவணத்தில் குற்றம்சாட்டியிருந்தது. எனினும் தமிழர் பிரச்சினைக்குத் திருப்திகரமான தீர்வொன்றினைக் காண இந்தியா எடுக்கும் முயற்சிகளுக்கு உதவியாக தமது யோசனைகளைச் சமர்ப்பிப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்திருந்தது. இந்த ஆவணத்தின் முதல் பகுதியில் இலங்கை மாநிலங்களின் யூனியனாக இருக்க வேண்டுமென்றும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களான வடக்கும் கிழக்கும் தமிழ் மொழி மாநிலமாக இருக்க வேண்டுமென்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழீழப் போராளிகளின் தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கைக்கு மாற்றீடாக, 'தமிழர் தாயக பிரதேச ஒருமைப்பாடு' என்ற தலைப்பின் கீழ் மாற்று யோசனையொன்றை முன்வைத்திருந்தது. பின்னிணைப்பு - 1 என்ற தலைப்பில் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைகளில் ஐக்கியப்பட்ட வடக்கும் கிழக்கும் என்ற சிபார்சு முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த மாநிலப் பிரதேசம் உருவாக்கப்பட்டதும் அதன் சம்மதமின்றி எதுவும் மாற்றப்படக் கூடாதென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மாநிலத்துக்கு சட்டவாக்க அதிகாரமுடைய பாராளுமன்றம் ஒன்று மாநிலத்துக்கு ஏற்படுத்தப்படவேண்டுமென்றும் அதில் வடக்கு, கிழக்கின் இன விகிதாசாரத்திற்கேற்ப உறுப்பினர்கள் அங்கம் வகிக்க வேண்டுமென்றும் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. முஸ்லிம்களினதும் இந்தியத் தமிழர்களினதும் பிரதிநிதித்துவத்திற்கு வழிவகை செய்யும் முகமாக விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. வடக்கு, கிழக்கு மாநிலம் பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரம் முதலாவது பட்டியலில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எந்தவொரு தேசிய இனத்தையும் பாதிக்கும் விடயங்கள் அந்த இனத்தின் பெரும்பான்மையான அங்கத்தவர்களின் அங்கீகாரத்தோடு நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. இது தமிழ் தீவிரவாத இயக்கங்களால் முன்வைக்கப்பட்டிருந்த மற்றொரு கோரிக்கையாகும். இலங்கையில் வாழும் சகலரும், அதாவது வெளிநாட்டுப் பிரஜைகளைத் தவிர 1984ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி வரை வாழ்ந்த சகலரும் இலங்கைப் பிரஜைகளாக ஏற்கப்பட வேண்டுமென்ற யோசனை அந்த ஆவணத்தின் மூன்றாம் பகுதியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழீழ இயக்கங்களின் கோரிக்கையை திருப்திப்படுத்தும் முகமாகவே இந்த யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. இதேபோன்று தமிழையும் உத்தியோக பூர்வ மொழியாக்கப்பட வேண்டுமென்ற யோசனையும் முன்வைக்கப்பட்டிருந்தது. இதுவும் தமிழ் போராளிகளின் கோரிக்கைகளில் ஒன்றாகும். மாநில அரசாங்கங்களின் அமைப்புகள் அதற்கு வழங்கப்படும் அதிகாரங்கள், மாநிலங்களுக்கும் யூனியன் அரசுக்குமிடையிலுள்ள தொடர்புகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டிருந்தது. திருமலைத் துறைமுகம் பற்றி அந்த ஆவணத்தில் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. செயலாற்று அதிகாரமிக்க ஜனாதிபதிமுறை தொடர்ந்திருக்க வேண்டுமா என்பது பற்றியும் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

(தொடர்ந்து வழியும்....)

# நள்ளிரவு மல்லிகை




வேலைக்காரப் பெண்ணை கொலை செய்து, அவள் பிணத்தை வைத்துக் கொண்டு சத்ரு ஹோமம் நடத்துகிறார்கள். நள்ளிரவில் சந்தன வாசனை வரவே ஸ்ரீகுமாருக்கு உதவ வந்த பெண் ரேணுகா நிலைமையின் தீவிரம் உணர்ந்து என்ன நடக்கிறது என்று பார்க்க செல்கிறாள்...

"யாராவது நெருப்புக் கொளுத்தியிருப்பாங்க. அதில சந்தன துண்டு எதாவது தவறி விழுந்திருக்கலாம்" குமார் பதிலளித்தார்.

"உண்மை அது இல்லை எங்கேயோ ஹோமம் பண்றாங்க!" ரேணுகா தெரிவித்தாள்.

"என்ன ஹோமம்?" பிரபாகரன் விசாரித்தான்.

"நான் போய்ப் பார்த்துட்டு



வர்றேன்." என்றவள் தெரு வாசற்படி கடந்து மறைந்தாள்.

"ச்சே... நாம ஒரு தப்பு செஞ்சுட்டோம். அந்தப் பெண்ணைத் தனியா அனுப்பியிருக்கக் கூடாது. அவளுக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா நாளைக்கு நாமதான் பதில் சொல்ல வேண்டியிருக்கும் வா... கிளம்பலாம்." பேசியவாறே குமார் அங்கிருந்து எழுந்தார்.

இருவரும் அவள் நடந்து போன திசையில் விரைந்தனர், முன்னாலிருக்கும் எதுவுமே தெரியாத கும்மிருட்டில் பகல், வெளிச்சத்தில் நடப்பது போல் அவள் நடந்து கொண்டிருந்தாள். வினாடிக்கு வினாடி அவளது நடையின் வேகம் அதிகரித்தது.

அவளது விரைவுக்கு றவாறு தொடர்ந்து செல்ல

எழுதுவது
சிவன்

குமாரும், பிரபாகரனும் மிகவும் கஷ்டப்பட நேர்ந்தது.

சற்றுத் தொலைவு நடந்தவள் இடது புறமாகச் செல்லும் குறுக்குப் பாதையில் திரும்பினாள். அந்தப்பாதை வயல்வெளியில் போய் முடிவடைந்தது.

வரப்பின் மீதும் தன்னுடைய வேகத்தைக் குறைக்காமல் அவள் விரைந்து நடப்பாதை அவர்கள் கவனித்தனர்.

அந்த சரப்பு முடிவடைந்த இடம் ஒரு தென்னந்தோப்பு, அந்தத் தோப்பின் மையத்திலிருந்து தேங்காய் கோடௌனில் ஹோமம் நடந்து கொண்டிருந்தது.

விரைவாக நடந்தவள் கோடௌனில் பின்புறமிருந்த பலகையின் இடைவெளி வழியாக உட்புறம் பார்த்தாள்.

அதற்குள் அவளைத் தொடர்ந்து வந்த இருவரும் கோடௌனை நெருங்கி விட்டனர்.

அவர்கள் அதற்குள் பார்த்த காட்சி எப்படிப்பட்டவர்களையும் திடுக்கிட வைக்கக் கூடியதாக இருந்தது.

மடியில் பிணத்தை படுக்க வைத்திருந்தார் ஜயந்தன். முன்புறம் ஜுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்த ஹோம குண்டலத்தின் மறுபுறம் நின்றிருந்த இளம் பெண் மீது பூக்களையும் குங்குமத்தையும் வீசி எறிந்து கொண்டிருந்தார். அவர் உதடுகள் விரைவாக அசைந்து மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தன.

ஏறத்தாழ முக்கால் நிர்வாணமாக நின்று கொண்டிருந்த இளம் பெண்ணின் உடல் முழுவதும் கும்குமமும் வியர்வையும் ஒன்று கலந்து பரவி பயமேற்படுத்தக்கூடிய தோற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

ஜயந்தனிடமிருந்து சற்றுத் தள்ளி. சந்து நாயர் தரையில் சப்பணமிட்டு அமரந்திருந்தார். அவரைப் பொறுத்த வரை இது வியப்புக்குரிய ஒரு காட்சியாக இருந்தது.

தனது லட்சிய சித்தி இந்த ஹோமத்தால் நிறைவேறி விடும் என்பதில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

வெளியிலிருந்து வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்த ரேணுகா, உடனே தலையை திருப்பி குமாரின் காதுக்கு மட்டும் கேட்கும்படி சொன்னாள், "நாம உடனடியாக எதையாவது செய்தே தீரவேணடும்.

"என்ன நடக்குதுன்னே எனக்கு ஒண்ணும் புரியலை எல்லாமே ஒரே அதிசயமா இருக்கு!" குமார் மிகவும் தணிந்த குரலில் பேசினார்.

"இவங்க செஞ்சுட்டிருக்கிறதுக்கு பேரு சத்ரு சம்ஹார ஹோமம் அவர்களுடைய எதிராளிகள் யாராக இருந்தாலும் ராசஷ்ஸர்களானாலும், மனிதர்களாக இருந்தாலும் இந்த ஹோமமத்தின் முடிவில் வெந்து சாம்பலாகி விடவேண்டியதுதான்!" அவள் விளக்கினாள்.

"உண்மையாகவா;" பிரபாகரன் மொத்த உடலும் நடுங்கியபடி கேட்டான். அவனது கண்கள் குமாரை வெறித்துப் பார்த்தன.

"உண்மைதான்!" அவள் உறுதியான குரலில் பேசினாள்.

அதுக்கு இப்ப நம்மளால என்ன செய்ய முடியும்?" குமார் கேட்டார்.

"நான் ஒரு வித்தையைச் செஞ்சு பார்க்கிறேன்!" என்றபடி அவள் வலது புறமாகத் திரும்பினாள்.

சற்று நேரத்தில் அவள் கோடௌனுக்குள் நுழைந்ததை அவர்கள் கவனித்தனர். அந்தச் சமயத்தில் அவளைக் கவனித்த குமாரும், பிரபாகரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். காரணம், அப்போது அவளது உடம்பில் உடை ஏதும் இருக்கவில்லை. அது மட்டுமன்றி அவளது உருவமே தெளிவற்றுத்தான் தெரிந்தது.

சந்து நாயரின் முன்பாக அவள் நடந்து சென்ற போதும் அவர் அதை உணர்ந்ததாகத் தெரியவில்லை; அப்படியே அசைவற்று உட்கார்ந்திருந்தார். எனவே சந்துநாயர் அவளைக் கவனிக்கவில்லை என்பது வெளியேயிருந்த இருவருக்கும் விளங்கவே செய்தது.

(வாசனை வீசும்....)


# பணத்தின் அருமை புரிய வையுங்கள்!

குழந்தைகளை வளர்ப்பது என்பது தோட்டவேலை போலத்தான். செடிகளை அன்றாடம் கவனிக்க வேண்டும். தண்ணீர் பாய்ச்ச வேண்டும்; வாடி விடாமல் கவனிக்க வேண்டும். மழைக்காலம் என்றால், தண்ணீர் தேங்கி, செடி அழுகி விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். வறண்ட காலத்தில் தேவையான தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டும். களை எடுக்க வேண்டும். குழந்தைகளும் பேசும் செடிகள்தான்; வீட்டுக்குள் வளரும் செடிகள்தான்.

என்னைச் சந்தித்த ஒரு தம்பதி, தமது குழந்தைக்கு, பணத்தின் அருமையே தெரியவில்லை என்று வருத்தப்பட்டதைப் பற்றிக் குறிப்பிட்டேன் அல்லவா? அதற்கு நான் அளித்த ஆலோசனைப் பற்றி இங்கே கூற விரும்புகிறேன். இரண்டு விதமான பெற்றோர்கள் இருக்கிறார்கள். முதல் வகையினர் வசதியான பெற்றோர்கள். இவர்களுக்குப் பணம் ஒரு பொருட்டே அல்ல. குழந்தைகள் எதைக் கேட்டாலும், அது எவ்வளவு விலை என்றாலும்கூட வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள்.

“இதை எதற்காக வாங்கினீர்கள்?” என்று கேட்டால், அதன் விலையைச் சொல்லி, அவ்வளவு ரூபாய்தானே, போனால் போகிறது என்று ‘வாங்கிக் கொடுத்தேன்’ என்பார்கள்.

இன்னொரு வகையினர், குழந்தை எது கேட்டாலும், வாங்கிக் கொடுப்பார்கள். அதற்கு இவர்கள் கொடுக்கும் விளக்கம் என்னவாக இருக்கும் தெரியுமா? “குழந்தை ஆசைப்பட்டுக் கேட்கிறபோது, வாங்கித் தரமாட்டேன் என்று எப்படிச் சொல்லுவது? ஆகவேதான் விலை அதிகம் என்றாலும்கூட, போனால் போகிறது என்று வாங்கிக் கொடுத்துவிட்டேன்.”




இந்த இரண்டு வகையிலும் சேராத ஒரு பிரிவு பெற்றோர்களும் உண்டு. அவர்கள் வசதிக் குறைவானவர்கள். குழந்தை ஒரு பொருளை வாங்கித் தரும்படி கேட்டால், அது தேவைதானா? அதன் விலை என்ன? என்று பார்த்துவிட்டு, அதன்பின், விலை குறைவு என்றால், அது குழந்தைக்கு அவசியம் என்றால் வாங்கித் தருவார்கள்.

பெற்றோர்கள் இப்படி என்றால், குழந்தையின் பழக்கம் எப்படி? எதைப் பார்த்தாலும் உடனே அதை வாங்கி, விளையாடிப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம். அதனால், அவசியம், விலை எதைப்பற்றியும் எண்ணாமல், உடனே வாங்கிக் கொடுக்கும்படி பெற்றோர்களைக் கேட்கும். வாங்கித் தராவிட்டாலோ, அடம் பிடிக்கும். அழுது ஆர்ப்பாட்டம் செய்யும். இது குழந்தைகளின் அணுகுமுறை. பெற்றோர்களைப் பொறுத்தவரை குழந்தைத்தனமான, மெச்சூரிடி இல்லாத அணுகுமுறை. ஆனால், ஒன்று மட்டும் நான் சொல்லுவேன். குழந்தைகள் எப்படி இருக்கும்? குழந்தைத் தனமாகத்தானே? பெரியவர்களைப் போல அவர்கள் மெச்சூர்டாக நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது என்ன நியாயம்?

ஆனாலும், அந்தத் தம்பதி குறிப்பிட்ட பிரச்சினை, இன்றைய காலக் கட்டத்தில் அலட்சியப்படுத்தி விடக்கூடிய ஒன்றல்ல! சரி, இதை எப்படிக் கையாளுவது?

குழந்தைகளுக்குப் பணத்தின் அருமையைப் புரியவைக்க வேண்டிய கடமை தமக்கு இருப்பதாகப் பெற்றோர்கள் உணர வேண்டும். பல பெற்றோர்களுக்கே பணத்தின் அருமை புரியாத போது, இவர்களால் தங்கள் குழந்தைகளுக்கு எப்படி பணத்தின் அருமையைப் புரிய வைக்க முடியும் என்பதுகூட அர்த்தமுள்ள கேள்விதான்! பணம் வருகிறது என்பது மட்டுமே குழந்தைக்குத் தெரிந்தால் போதாது. அது எப்படி, எங்கேயிருந்து வருகிறது



என்பதையும் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். காரணம், பணம் நம் வீட்டுத் தோட்டத்தில் காய்ப்பது இல்லை; உழைப்பின் மூலம் பணம் சம்பாதிக்கப்படுகிறது என்பதை அவர்கள் உணரச்செய்ய வேண்டும்.

அதை எப்படிச் செய்வது?

நான், என் நிகழ்ச்சிகளில் இந்த முறையை உரையாடல் டெக்னிக் என்று குறிப்பிடுவேன். கணவனும், மனைவியும் தங்கள் குழந்தையை உட்கார வைத்துக்கொண்டு, அவர்களுடன் பணம் பற்றிப் பேச வேண்டும். குழந்தைகளுக்குப் பணம் பற்றி என்ன தெரியும்? அவர்களிடம் பணத்தைப் பற்றிப் பேசுவதற்கு என்ன இருக்கிறது என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம்.

பணத்தைப் பற்றி குழந்தைகளுக்கு ஒன்றும் தெரியாது என்கிற போது, அவர்கள் பணத்தின் அருமையைப் புரிந்துகொண்டு நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது எப்படிச் சரியாகும்? அப்படித் தெரியாத விஷயத்தை, புரிகிறாற்போல எடுத்துச்செல்ல வேண்டியது உங்களுடைய கடமை இல்லையா?

பொதுவாகவே, பல பெற்றோர்கள், தங்கள் உத்தியோகம், அதில் உள்ள கஷ்டங்கள் பற்றி குழந்தைகளிடம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சொல்லத்தான் செய்கிறார்கள். “அப்பா ஆபீஸில் பிசி! அப்பா ஆபீஸ் வேலையாக வெளியூருக்கு டூர் போக வேண்டியிருக்கிறது. திரும்பி வருவதற்கு ஒரு வாரம் ஆகும். அம்மா, காலையில் ஐந்து மணிக்கு எழுந்திருந்தால்தான், சமையலை முடித்து, உங்களைப் பள்ளிக்கூடத்துக்குத் தயார் பண்ணி அனுப்பிவிட்டு, சாப்பிட்டுவிட்டு ஆபீஸுக்குப் போக முடியும்; ஐந்து மணி வரை ஆபீஸில் வேலை பார்த்துவிட்டு, வீட்டுக்கு வந்தால் ரெஸ்ட் எடுக்க வழி உண்டா? குழந்தைகளுடைய ஹோம் வோர்க், மறுபடி சமையல், வீட்டு வேலை...இரவு தூங்கப்போக மணி பத்துக்கு மேல் ஆகிவிடுகிறது. அம்மா, அப்பா இரண்டு பேரும் இவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தால்தான், சம்பளம் வரும்” என்று குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லலாம்.

மனைவி வேலைக்குப் போகாத குடும்பம் என்றால், “பல குடும்பங்களிலும், அப்பா, அம்மா இரண்டு பேரும் வேலைக்குப் போய் சம்பாதிக்கிறார்கள். நம் வீட்டில் அப்பா மட்டும்தானே வேலைக்குப் போகிறார். எனவே, அவர் சம்பாதித்துக் கொண்டு வருகிற பணத்தில்தான் நாம் நம்முடைய சாப்பாட்டுச் செலவு, வீட்டுச் செலவு, ஸ்கூல் பீஸ், துணிமணி என்று பலவிதமான செலவுகளையும் செய்ய வேண்டும். எனவே, நம் இஷ்டப்படியெல்லாம் பணத்தைச் செலவுசெய்யக் கூடாது” என்று எடுத்துச் சொல்லி விளக்க வேண்டும்.

மிகவும் வசதியான குடும்பங்களில் பணத்துக்குத் தட்டுப்பாடு இல்லை என்கிற சூழ்நிலை நிலவலாம். ஆனால், குழந்தைகளுக்கு, பணம் ஒரு பொருட்டல்ல என்கிற எண்ணத்தை சிறு வயதில் மனதிலே விதைத்துவிடுவது, வாழ்க்கையில் வேண்டாத விபரீதங்கள் நிகழ அடித்தளமாக அமைந்து விடக் கூடும். பிசினஸ் என்றாலும் கூட கடுமையான போட்டி நிலவும் யதார்த்தம், அதில் நிலைத்து நிற்க புத்திசாலித்தனமாகவும் கடுமையாகவும் உழைக்க வேண்டியதன் அவசியம், இவைகளை எளிமையாக, அவர்களுக்குப் புரியும் படியாய் விளக்கிச் சொல்ல வேண்டிய கடமை பெரியவர்களுக்கு உண்டு.

பணம் என்பது ஒருவரிடம் அபரிமிதமாக இருக்கலாம் அளவோடும் இருக்கலாம் அல்லது பணத்தட்டுப்பாடான சூழ்நிலையும் அவருக்கு ஏற்படலாம். எப்படியிருந்தாலும், எவராக இருந்தாலும், பணத்தை மதிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அதற்குரிய மரியாதை கொடுத்தால் தான், அதுவும் நம்மை மதித்து நம்மிடம் தங்கும். அதை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் உதாசீனப்படுத்தினால் அதுவும் நம்மை அலட்சியப்படுத்தித் தள்ளி விட்டுப் போய்விடும்.

முதலில் பெரியவர்கள் பணத்தின் அருமையைப் புரிந்து கொள்ள வேண்டும். அதைத் தம் குழந்தைகளுக்கும் புரியும்படி எடுத்துச் சொல்ல வேண்டும்.

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள்
சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள்
அடங்கிய இப் போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு
பரிசுகளையும், பாராட்டுக்களையும்
பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 145க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

சுஹாசினி, லோவர் வீதி, பதுளை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. எஸ்.மாதவி, பிரதான வீதி, தெல்லிப்பளை.
2. ஜே.துஷிந்திரா, நுவரெலிய வீதி, புஸ்ஸலாவ.
3. வீ.மயூரன், 50, அல்விஸ்பிளேஸ், கொட்டாஞ்சேனை.
4. வி.சுசிலா, அம்மன் கோவிலடி, ஊரெழு கிழக்கு, ஊரெழு.
5. எம்.எல்.மொஹமட், தபால் அலுவலகம், கிண்ணியா.
6. எச்.டபிள்யூ. சித்திக், அன்னமலை நாவிதன் வெளி த.க.
7. எம். விஜயபாலன், பராக்கிரம வீதி, கிராண்ட்பாஸ்.
8. சீ. நிஷா, வோல்ஸ் லேன், கொழும்பு - 15.
9. ஜே.திவ்யா, உப்புக்குளம், மன்னார்.
10. என்.ராமசாமி, கோட்டே வீதி, பொரளை.

### குறுக்கெழுத்துப் போட்டி 147

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | | 10 | 11 | |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | 20 | 21 | | | 24 |
| 25 | | 27 | 28 | | 30 |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1. உலகப்பொதுமறை எனப்படும் நூல்.
7. உயிரினத்தின் ஆரம்ப நிலை (திரும்பியுள்ளது).
10. குற்றம் அல்லது நிந்தனை எனப்பொருள்படும். (திரும்பியுள்ளது).
13. நறுமணம் எனலாம். (குழம்பியுள்ளது).
17. ஊழியம் என்றும் கூறலாம் (திரும்பியுள்ளது).
19. பெருங்காற்றை இப்படியும் கூறுவர். (குழம்பியுள்ளது).
27. முன்னணிக் கவிஞர்களில் ஒருவர்.
31. நடிகர் ஜீவா நடித்த வெற்றிப்படமொன்று. (திரும்பியுள்ளது).
34. வேட்டையாடுபவன்

### மேலிருந்து கீழ்

1. மாணிக்கவாசகர் அருளிய நூல்.
2. சீனியின் மூலப்பொருள். (குழம்பியுள்ளது).
4. பள்ளம் என்றும் கூறலாம்.
5. இறகுகளைக் கொண்ட உயிரினத்தின் பொதுப்பெயர் (குழம்பியுள்ளது).
15. வீட்டுக்கு வீடு இது காணப்படும். (குழம்பியுள்ளது).
18. சேவை செய்பவன்.
28. காவல் என்றும் பொருள்படும். (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 145 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஜ | 2 ஞா | 3 தி | 4 ப | 5 தி | |
| 7 ஞ | 8 வி | 9 ய | 10 ம் | | 12 ரு |
| 13 க | | 15 அ | 16 ற | 17 வ | 18 ம் |
| 19 ன் | 20 ஆ | 21 ம் | 22 ப | | 24 பி |
| | 26 பா | 27 ச | 28 ம் | | 30 க் |
| 31 தி | 32 கை | | | 35 கு | 36 கை |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 22.11.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-146
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# நீ தானா அந்தக் குயில்

"வணக்கம்....ஹலோ.....யார் பேசுறீங்க?"

"நான் இளங்கோ பேசுறேன்."

"இளங்கோ... நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீங்க?"

"நான் படித்து விட்டு வேலை தேடிக்கொண்டிருக்கிறேன்."

"இந்த நிகழ்ச்சியிலை இளங்கோ நீங்கள் என்ன பாடலைக் கேட்க விரும்புகிறீங்க?"

இப்படித்தான் வானொலிச் சேவையின் உதவியுடன் ஆரம்பித்தது சாந்தியுடனான அந்த உறவு. அந்த தனியார் வானொலிச் சேவையில் சாந்தியின் இனிமையான குரலுக்காகவே பலர் நிகழ்ச்சிகளைக் கேட்பார்கள். அந்தத் தொலைபேசியூடாகப் பாடல் கேட்கும் நிகழ்ச்சிக்கு ஏகப்பட்ட வரவேற்பு. அவளோடு ஒரு தடவையாவது பேசிவிட வேண்டும் என்று தொலைபேசியைச் சுழற்றி ஏமாந்தவர்கள் பலர். ஆனால் இளங்கோவிற்கு ஒவ்வொரு முறையும் அதிஷ்டக் காற்று வீசியபடிதான் உள்ளது. தொலைபேசியை எடுத்து நம்பரைச் சுழற்றிய சற்று நேரத்திற்கெல்லாம் தொடர்பு கிடைத்து விடும். பல தடவைகள் இளங்கோ தனது வருங்கால மனைவியும், முகம் காணாத இளந் தேவதையுமாகிய சாந்தியுடன் உரையாடுவான். அத்தோடு தனிப்பட்ட ரீதியிலும் தொலைபேசிமூலம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வான். அதுவே நல்லதொரு காதலாகவும், நட்பாகவும் மலர்ந்தது. காலம் நகர்ந்தது.

அவன் கொஞ்சம் கொஞ்சமாக அவள் வசமானான். அந்த மூன்றெழுத்து வைரஸ்ும் அவனை மெல்ல மெல்ல ஆக்கிரமித்துக் கொண்டது. இளங்கோ தான் எப்படி இருக்க வேண்டும் என்ற நிலையை மறந்து கனவுலகில் சஞ்சரித்தான். அவன் இதுவரையில் சாந்தியை நேரிலோ, புகைப்படத்திலோ பார்த்ததேயில்லை. அவள் எப்படி இருப்பாள்?

கறுப்பா....?

குண்டா...?

குட்டையா...? இருப்பாளா? இல்லை....

சிவப்பு நிறமா..?

ஒல்லியா...?

அழகா?

"எனக்கு ஏற்றாற் போல்.....இருப்பாளா?"

அவன் தன் சுயநினைவை இழந்தான். பசி, தூக்கம் மறந்தான். கற்பனையில் அவளுக்கொரு உருவத்தைக் கொடுத்தான். அவளோடு உலகம் பூராவும் உல்லாசமாக உலா வந்தான். எப்பொழுதுமே எதிர்பார்ப்பு என்பது எமது எண்ணங்களை சிகரத்தை நோக்கித்தான் நகர்த்தும்.

அந்தத் தேவதையைச் சந்திக்கும் நாளும் வந்தது. அன்று மாலை நான்கு மணிக்கு அந்த வானொலி நிலையத்தில் இருவரும் சந்திப்பதாக முடிவு செய்தார்கள். அவனுக்கோ தலைகால் புரியாத சந்தோஷம். மூன்றாவது தடவையாக சேட்டை மாற்றிக் கொண்டான். நான்காவது தடவையாகக் கண்ணாடியைப் பார்த்தான். மீசையைக் கீழ் நோக்கி வாரிவிட்டான். அவனுக்கு அழகையும் கம்பீரத்தையும் கொடுப்பதே அந்த அழகான மீசைதான் என்று யாரோ கூறிய ஞாபகம். புறப்பட்டான். பஸ் ஊர்ந்து செல்வதைப் போல இருந்தது.

அந்த வானொலி நிலையத்தை அடைந்தபோது மணி நான்கு. அங்கே வரவேற்பறையில் இருந்த பெண்ணிடம் விசாரித்தான்.

"மிஸ் சாந்தியைச் சந்திக்க முடியுமா?"

"ஓ...நீங்கள் தான் மிஸ்டர் இளங்கோவா?"

"ஆமாம் நான்தான்"

"ஓ...கே...வாங்க"

அந்த வரவேற்பாளரின் பின்னாலே போனான்.

"அதோ பாருங்கள்... ஒலிப்பதிவு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாங்களே அவங்க தான் மிஸ் சாந்தி. இப்போ வந்திடுவாங்கள்!"



-சி.கிட்டினன் மேனகா, கொடிகாமம்.

அந்தக் கண்ணாடிக் கூட்டிற்குள் ஒலி வாங்கிக்கு முன்னால் நிற்கும் அந்த உருவத்தைக் கண்டவுடன் அவனுக்கு யாரோ ஓங்கி சம்மட்டியால் தலையில் அடித்தது போல் உணர்ந்தான். கற்பனைக் கோட்டைகள் சரிந்து விழுந்தன. புயல் அடித்தது. தலைசுற்றியது.

"இ....இ...இ...இவ..இவங்கதான் மிஸ் சாந்தியா?" மீண்டும் ஒரு தடவை வரவேற்பாளரிடம் கேட்டான்.

"ஆமாம். இவங்கதான் சாந்தி."

அந்தக் கறுத்த நிறமும் கட்டை உருவமும் கொண்ட பெண்ணைக் கண்டவுடன் அவனுக்குப் பொறி கலங்கியது. உடனேயே அந்த இடத்திலேயே உயிர் துறக்க வேண்டும் போல் அவனுக்கு இருந்தது.

குரலுக்கும் அழகிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. குயிலுக்குக் கூட குரல் இனிமையாகத்தானே இருக்கிறது. ஆனால், குயில் அழகாகவா உள்ளது?

"தலை தப்பியது தம்பிரான் செயல்" என்று மனதினுள் நினைத்தபடி மெல்ல மெல்ல அடியெடுத்து அந்த இடத்தை விட்டு நழுவினான். கூட்டத்தைக் கடந்து வாசலுக்கு வந்தவனை ஒரு இனிய குரல் இவன் பெயரைக் கூவி அழைத்தது.

"மிஸ்டர் இளங்கோ"

"அதே குரல்... ஆமாம்... அதே... அதே குரல்தான். எங்கோ கேட்ட குரல். பழகிய குரல். இவள் யார்..., இவள்...இவள் யாராக இருக்கும்?" அவனுக்குப் பொறி தட்டியது. கதி கலங்கியபடி திரும்பினான். அங்கே ஒரு அழகிய பெண் ஓவியம் நின்று கொண்டிருந்தது. ஐஸ்வர்யா ராய்க்கு தங்கை மாதிரி இருக்கும் அவள் யார் என அவன் எண்ணும் போதே, அவளது குரல் அவனை திசைதிருப்ப வைத்தது.

"நீ....நீ...நீங்கள்...யார்?"

"என்னமிஸ்டர் இளங்கோ.... உங்கள் அபிமானத்திற்குரிய சாந்தியைச் சந்திக்காமலே புறப்பட்டு விட்டீங்கள்" என்றாள் சாந்தி சிரித்தபடி.

"நீ...நீங்கள்."

"ஆமாம், நான் தான் நீங்கள் காணவந்திருக்கும் சாந்தி. உங்களோடை உள்ளத்தில் இருக்கும் உணர்வை அறியவே நான் போட்ட நாடகம் இது. அவ்வளவு தான்."

"மிஸ்டர் இளங்கோ...நீங்கள் காதலிக்கிறது என்னுடைய மனதையல்ல; என்னுடைய குரலையல்ல; அழகு.... அழகு... அந்த அழகை மட்டும் தான் நீங்கள் காதலிக்கிறீங்கள். உங்களுக்குத் தேவை அழகுதான். உங்களுக்காக ஒரு அழகி எங்கோ ஒருமூலையில் காத்திருப்பாள் போய் தேடுங்கள்... போங்கள்... என்முன்னால் நிக்காதீங்கள். நீங்களெல்லாம் ஒரு ஆம்பிளைங்களா?" சாந்தி தன் இஷ்டப்படி பொரிந்து தள்ளினாள்.

"அது....அது...வந்து...சாந்தி!"

"சீ...என் பெயரைச் சொல்லிக் கூப்பிட உங்களுக்கு வெட்கமா இல்லை? நீங்களெல்லாம் காணுகின்ற பெண்களையெல்லாம் அதுவும் குறிப்பாக அழகான பெண்களைக் காதலிக்கலாம் அழகு குறைந்தவுடன், நீ...அழகில்லாதவள் உன்னை எனக்குத் தேவையில்லை என்று விட்டு விடுவீர்கள் அப்படித்தானே? நீ அழகாய் இருக்கிறாயா? அல்லது அழகில்லாதவளாய் இருக்கிறாயா? என்று கேட்டா என்னை ரெலிபோனில் காதலித்தீர்கள்? படித்தவன், படிக்காதவன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன், ஜாதி, மதம், அழகு, அசிங்கம் இந்த அந்தஸ்தெல்லாம் காதலுக்குக் கிடைக்காது. காதலுக்குக் கண்ணில்லை என்பார்கள். இப்படி அந்தஸ்து பார்ப்பவர்கள் கோழைகள், முட்டாள்கள். காதலிக்கிறவளை கடைசிவரை கண்கலங்காமல் பாத்துக் கொள்கிறவன் தான் ஆண்மகன். "நீ என்னை சந்தித்த முதல் நாளே கண்ணீரில் கரைய வைத்து விட்டாயே. நீயெல்லாம் உருப்படுவியா" சலித்துக் கொண்டு கண்ணீர் விட்டாள் சாந்தி.

அவன் குனிந்தபடி நின்றான். அவள் தொடர்ந்தாள்.

"இந்த அழகு எல்லாம் வாழ்க்கை பூராவும் நிலைக்கும் என்று நினைக்கிறீங்களா? சிலவேளை திருமணத்திற்குப் பிறகு என்னுடைய அழகு உருக்குலைந்து போனால், நீங்கள் வேற பெண்ணைத் தேடிப் போய்விடுவீங்க. அப்படித்தானே?"

"காதலிக்கிறதிற்கு நெஞ்சிலை தூய்மை வேண்டும். அழுக்கு இருக்கக் கூடாது. இதெல்லாம் காதலில்லை."

"இளங்கோ...சாதாரணமாகச் சொன்னால் புரிஞ்சு கொள்ளமாட்டீங்கள். இப்ப கொஞ்சம் பிரட்டிக்கலா சொல்லியிருக்கிறன். புரிஞ்சு கொள்ளுங்கள்."

மழை ஓய்ந்தது போன்று இருந்தது. அவன் இப்படியெல்லாம் நடக்கும் என்று கனவில் கூட நினைக்கவில்லை.

"சாந்...சாந்தி..... சாந்தி இங்கை நில்லு நான் சொல்வதைக் கொஞ்சம் கேளு."

"நீங்கள்...எதுவுமே எனக்குச் சொல்ல வேண்டாம்." கூறியபடியே அவள் அந்த இடத்தைவிட்டு அகன்றாள்.

அவன் நிலை குலைந்து கையிற்கு எட்டியது வாயிற்கு எட்டலையே என்று நினைவற்று நின்றான்.

"இனி என்ன சொன்னாலும் சாந்தி ஏற்கப் போவதில்லை." அவன் மனதிற்குள் நினைத்தபடி, குனிந்த தலை நிமிராமல் அமைதியாக சோகத்துடன் வெளியேறினான். அந்த வானொலிக் குயில் கூவுவதற்குத் தயாராக ஒலிவாங்கியை நோக்கிப் புறப்பட்டது.

*(யாவும் கற்பனை)*

# திருமணம் .com

கனகாம்பரி அம்மா தேநீர் கோப்பையுடன் சமையல் கட்டிலிருந்து வெளிப்பட்டாள். வேலையிலிருந்துத் திரும்பிய களைப்பில் மனோகரன் கண்மூடி கையைத் தலைக்கு முட்டாக வைத்து சோபாவில் சாய்ந்திருந்தான்.

"தம்பி மனோ" கனகாம்பரியின் குரல் வெளிப்பட்டது. மெதுவாகக் கண்ணைத் திறந்து தாயை நோக்கினான் மனோகரன்.

"ம்" என அசைந்தான் மனோகரன்.

"களைப்பல்லோ டீயைக் குடியப்பா" எனக் கோப்பையை டீபாய் மீது வைத்தாள்.

"தம்பி மனோ, இன்றைக்கு பொன்னரசு மாமா வந்தார்."

"யார் அம்மா எனக்கு ஞாபகமில்லையே!" என மனோகரன் கேள்வியாய் தாயை நோக்க,

"என்ன தம்பி இது. ஊரில பக்கத்துப் படலை. அதுதான் நீ விளையாடுவாயே அந்த மைதிலிப் பெட்டை, அவையள்தான்."

சட்டென்று அவனுக்கு ஞாபகம் வந்தது.

"தம்பி உன்னட்ட ஒரு விஷயம் சொல்லணும். பொன்னரசு மாமா மைதிலிக்கு மாப்பிள்ள பார்க்கிறாராம். மைதிலியின்ட போட்டோ கூடப் பார்த்தன். அவ்வளவு அழகு. எனக்கு பிடிச்சுப் போட்டுது. போட்டோ பாரு" என்று அவனிடம் ஒரு படத்தை நீட்டினாள் கனகாம்பரி. படத்தை வாங்கிப் பார்த்தான். மைதிலி அழகாகவே இருந்தாள். ஆனாலும் மனோகரன் அதனை இரசிக்கவில்லை.

"அம்மா ஏனம்மா இப்ப இதை எனக்குக் காட்டிறீங்கள்?" என சற்று எரிச்சலோடு கேட்டான்.

"மனோ மைதிலிய உனக்கு முடிக்கலாமெண்டுதான். உனக்கும் வயசாகுதெல்லே" என கனகாம்பரி சற்று அழுத்தியே கூறினாள்.

"அம்மா இப்ப ஏனம்மா கல்யாணம் கத்தரிக்காய். விடுங்கோம்மா. உங்களுக்கு எந்தப் பெட்டயக் கண்டாலும் இதுதான். ப்ளீஸ் இனி நான் சொல்லாம இதையெல்லாம் பாக்காதீங்கோ" என எரிச்சலுடன் எழுந்தான்.

"ஓமடா கலியாண வயசில ஒரு மகன். பக்கத்து வீட்டால எல்லோரும் கேட்கிறாங்க. கனகமக்கா உங்கட மகனின்ர கலியாணம் எப்பயெண்டு. உனக்கொரு கலியாணம் முடிஞ்சால் நான் நிம்மதியா கண்ண மூடுவன் சாமி" என விம்மினாள்.

"அம்மா...." எனத் தொடங்கியவன் மேலே எதுவும் சொல்லாமல் வெளியேறினான். அம்மாவின் விம்மல் நிற்கவில்லையென்று தெரிந்தும் வீதியில் இறங்கி நடந்தான்.

ஆனாலும் அவனுக்கும் மனதுள் ஒரு நெருடல். கனகாம்பரிக்கு மனோகரன் ஒரே மகன். சிறுவயதிலேயே அவன் தந்தையை இழந்த போதிலும் அவனை ஒரு குறையுமின்றி வளர்த்து இன்று ஒரு பிரபல நிறுவனத்தில் "அஸிஸ்டண்ட் மனேஜராக" ஆக்கியவள் அவள் தானே. ஆனால் அம்மா ஆசைப்படி திருமணம் நடந்தால் அவன் ஆசை நிறைவேறாதே.

ஆம், அவன் ஒரு முகம் தெரியாத பெண்ணைக் காதலிக்கிறான்.

மனோகரனுக்கு கல்லூரிப் பருவம் முதல் 'நெட் சாட்டிங்' பழக்கம் இருந்தது. கடந்த ஆறு மாதமாக அவனுக்கு ஒரு பெண்ணுடன் தொடர்பு கிடைத்தது. தன் பெயர் 'ஸ்வீட்டி' என்றும் அவள் பெயர் தந்தாள். ஆனால் அது அவளது நிஜப் பெயர் இல்லையென்று அவனுக்குத் தெரியும். அவனும் தன் பெயரை கரன் என்று கொடுத்திருந்தான்.



-ரேகா, கொழும்பு.

ஸ்வீட்டி அருமையான பெண் மட்டுமல்ல, புத்திசாலியும் கூட என அவன் சாட்டிங்கிலேயே அறிந்துகொண்டான். அதுமட்டுமல்ல, அவள் ஒரு தமிழ் பெண் என்றும் அவளும் கொழும்பில் வசிப்பவளென்றும் அறிந்துகொண்டான். இவ்வாறு தொடர்ந்த சாட்டிங்கில் மனோகரன் ஸ்வீட்டியை காதலிக்கத் தொடங்கவும், அவளும் இதைப்பற்றித் தெரிவிக்கவும், இருவரும் முகம் பாராமலேயே காதலித்தனர்.

'இன்றைக்கு எப்படியும் ஒரு முடிவு எடுக்க வேண்டும்' என மனதுள் கூறிக்கொண்டே 'நெட் கபே'யை நோக்கி நடந்தான்.

அன்று வாரநாள். ஸ்வீட்டி அவனைச் சந்திப்பதாக வரச்சொன்ன அந்தப் பூங்காவில் கூட்டமும் அவ்வளவாக இல்லை. ஸ்வீட்டி, தான் பச்சையும் நீலமும் கலந்த சுரிதார் அணிந்து வருவதாக அறிவித்திருந்தாள். மனோகரனும் தான் டெனிம் ஜீன்ஸும் மஞ்சள் நிற ரீ சேர்ட்டும் அணிந்து வருவதாகக் கூறியிருந்தான். மனோகரன் மகிழ்ச்சி தாங்காமல் தவித்தான்.

"கரன்" பின்னாலிருந்து ஒரு மென்மையான குரல். திடுக்கிட்டுத் திரும்பிய போது பச்சையும் நீலமும் கலந்த சுரிதாரில் அவனது ஸ்வீட்டி. ஆனால் எங்கோ பார்த்த முகம் சட்டென்று நினைவு வரவில்லை.

"ஸ்வீட்டி" என அவன், அவளை நோக்க, அவள் முகத்தில் அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சி.

"ஸ்வீட்டி, நான் மனோகரன்" எனத் தன்னை அறிமுகப்படுத்தினான்.

"கரன் நான் ஸ்வீட்டி இல்லை. என்ர உண்மையான" பெயர் மைதிலி என அவள் பூவாய் புன்னகைக்க, மனோகரனுக்கு சட்டென்று ஞாபகம் வந்தது.

"மைதிலி, நீங்கள் பொன்னரசு மாமாவின்ர மகள் தானே" எனக் கேட்கவும், அவள் விழி மலர அவனை நோக்கினாள். வெகு நேரம் மனோகரனும் மைதிலியும் எல்லா விடயங்களையும் பற்றிப் பரிமாறிக் கொண்டனர். மைதிலியிடமிருந்து விடைபெறும் போது மனோகரனின் உள்ளம் நிறைந்திருந்தது.

"அப்பாடி அம்மாவுக்கு பிடிச்ச மருமகளும் கிடைத்தாயிற்று. எனக்குப் பிடிச்ச காதலியும் கிடைத்தாயிற்று" என தனக்குள்ளே கூறிக்கொண்டு தாயைத் தேடி ஓடினான் மனோகரன்.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## சில பொன்மொழிகள்

துரயங்களில் அமிழ்ந்து கிடக்கும் ஆணின் மனம் ஒரு பெண்ணைக்கண்டதும் சூரியனைக் கண்ட பனி போல விலகி விடுகின்றது!

-கேப்

ஒரு மனைவியினுடைய அன்பான பார்வையிலே பசுமையான தோட்டங்களைப் பார்க்கலாம். அவளுடைய தூய்மையான உள்ளத்திலே ஞான நூல்களைக் காணலாம்.

ஓ, பெண்ணே! நீ காதலிக்கப்படுகிறாய். ஆனால் கல்யாணம் செய்து கொள்ளப் படுவதில்லை. -ராபர்ட் ப்ரௌனிங்.

மணப்பொருத்தம் இல்லாத கணவனும் மனைவியும் ஒரு வீட்டில் இருந்து நாள் தோறும் போராடுவதை விட தனித்தனியே இருந்து உரிமையோடு நாளைக் கழிக்கலாம்.

எந்தப் பெண்ணைப் பற்றி அவதூறு சொல்வதைப் பார்க்கிலும் ஓர் ஆலயத்தை எரிப்பது குறைந்த பாவம்.

-செர்பியா.

பெண்ணுக்கு மௌனத்தைப் போன்ற ஆபரணம் வேறில்லை. ஆனால், அவள் அதை அணிவதுதான் அபூர்வம்.

-டென்மார்க்

துறவிகள் மெலிந்தால் அழகு. நான்கு கால் விலங்குகள் கொழுத்தால் அழகு, மனிதர்கள் படித்தால் அழகு. பெண்கள் மணந்தால் அழகு.

-பர்மா

ஒரு பெண்ணின் திருமணக் காலத்தில், அப்பெண்ணின் தந்தையார் மணமகன் சிறந்த கல்விமானாக இருக்க வேண்டும் என்று விரும்புவார். தாயார் மாப்பிள்ளை பெரும் பணக்காரனாக இருக்க வேண்டும் என்று விரும்புவாள். சுற்றத்தினர், நற்குடிப் பிறந்தவனாக இருக்க வேண்டும் என்று எண்ணுவார்கள், அப்பெண்ணோ மிகுந்த அழகுடையவனாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுவார்கள்.

-நீதி வெண்பா.

## பிரிவுக்கு நன்றி

அலைகள் மீது புரண்டுவந்த ஈரத்தென்றல் கூந் தலை கோதிவிட்டுச் சென்றது.

அவள் அருகே இருந்தவனுக்கோ அந்த தென்றல் மீது கோபம் வந்தது. வாய்விட்டுச் சொன்னான்.

"தென்றலும் வில்லன்தான்."

கூந்தலை தன் பட்டுவிரல்களால் தொட்டுச் சரிப்படுத்திக்கொண்டு, சற்றே முகம் திருப்பி, மொழி உதிரம் இதழ் திறந்து,

"யாரை வில்லன் என்கிறீர்கள்?"

"தென்றலை!"

"தவறு!"

"என்ன தவறு?"

"சேவகனைப் போய் வில்லன் என்று சொல்வது தவறுதானே!"

பொறாமையாகப் பார்த்தான். எச்சரிக்கும் மீசைக்குக் கீழே இருந்த தடித்த உதடுகளில் புன்னகைக்குப் பதிலாக புகைச்சலான வார்த்தைகள் உற்பத்தியாகின.



"எந்தனுக்கு சொந்தமான உன்னை தீண்டுவதற்கு தென்றலுக்கு உரிமை யார் கொடுத்தார்?"

சினக்கவைத்து இரசிக்க நினைத்தாள். எனவே சொன்னாள் :

"யாரும் கொடுக்கவில்லை. நான் தான் கொடுத்தேன் அந்த உரிமையை!"

### தந்தது ரசிகன்

பதில் கேட்டதும் சில நொடிகள் உதடு துடிக்க, விழிகள் உருட்டி முறைத்தான். அதன் பின்னர் சொன்னான் :

"தவறு என்மேல் தானடி!"

"அது என்ன தவறாம்?"

"சென்ற இடத்திலே தேவ மங்கையர். நான் மட்டும் நினைத்திருந்தால் அந்த சுந்தரிகள் என்னை தூக்கியே சென்றிருப்பர் சொர்க்க லோகத்திற்கு!"

அவள் இதழ்களால் கேலிக் குறி காட்டினாள்.

"இவர் ஒரு மன்மதன். இவர் பின்னால் பித்தாகி அலைவார்களாக்கும் பெண்கள்.

அதிலென்ன சந்தேகம்? விழியசைத்தால் போதும், பருவ எழில் அசைத்து என் பின்னால் வர காத்திருந்தனர் கட்டழகிகள் பலர். நெய் உள்ள பாத்திரத்தைச் சுற்றிவரும் எறும்புகள் போல என்னையே சுற்றிச் சுற்றி வந்தனர். இதழ்களில் அரும்பும் புன்னகையோடு பூந்தளிர் மேனியர் பலர்!"

"கைக்கெட்டியபோதும் வேண்டாம் என்று தட்டிவிட்டு ஓடி வந்துவிட்டீர்களாக்கும்."

"உண்மை!"

"போனால் போகட்டும் என்று காதலித்து தொலைத்தேன் நான் என்றால், அவர்களுக்குமா கண்கள் இல்லாமல் உங்கள் பின்னால் வரப் போகிறார்கள்?"

கேலி செய்து குலுங்கச் சிரித்தாள். தென்றல் வீசியதில் மேலாடை சற்று விலகிவிட, அங்கே அவன் விழிபட்டு சிந்தையிலே மோகத் தீ விழித்தது.

அவன் விழிகள் தடுமாறும் நிலை கண்டு மேலாடையைச் சரிசெய்து கொண்டாள். அவனுக்கோ ஏமாற்றம்.

"பசியிருந்த கண்களுக்குத் திரை போட்டுத் தடை எதற்கு?"

"சென்ற இடத்திலெல்லாம் பசியாறும் கண்களுக்கு இனி என்ன வேலை இங்கு?"

"கையிலே உண்டு வெண்ணெய் என்று நெய் தேடி அலையாமல் நீண்டநாள் விரதமிருந்து, அழகு ரதம் காண ஓடி வந்த எனக்கெதற்குத் தண்டிப்பு?"

"நம்ப மாட டேன்!"

"நான் தாங்க மாட் டேன்!"

"மினுக்கி வந்த தளுக்குக் காரிகளை விழி திறந்து ரசிப் பதிலேதான் திரும் பிவர ஆனதுவோ நீண்டநாட்கள்?"

நகர்ந்து சற்றுத் தள்ளி அமர்ந்தாள். அவன் தானும் நகர்ந்து அவளை நெருங்கி அமர்ந் தான். அவள் கோபம் போல மேலும் தள்ளி விலகி அமர்ந்தாள்.

அவள் கரம் பிடித்து தடுத்தபடி அவன் நெருங்கி அமர்ந்தான். அவள் விரல்களைத் தன் விரல்களால் நீவியும் விட்டான்.

அவள் கேட்டாள்.

"இப்படித்தான் அந்த மாயவிழிக்காரிகளின் விரல்களுக்கும் வித்தை காட்டினீர்களாக்கும்."

"அய்யய்யோ இல்லை இல்லை."

"அப்படியானால் அங்கு வேறு வித்தையாக்கும்."

"சத்தியமாய் நான் சொன்னதெல்லாம் பொய்!"

"எப்படியாம் நம்புவது?"

"காய்ந்த மாடு போல நான் வந்து விழும் இந்த நிலையே போதுமன்றோ நீ நம்புவதற்கு!"

அவள் முறைத்தாள்.

"காய்ந்த மாடு எங்கு விழும்?"

கம்பிலே விழும்!

"அப்படியானால் நான் என்ன கம்போ? கண்டவள் அழகையெல்லாம் கண்ணாரப் பருகிவிட்டு என்னை கம்பன்றோ கருதிட்டீர்?"

உதவியாய் அமையும் என்று சொன்ன உதாரணம் உபத்திரவமாய் போய்விட்டதை அறிந்து அவன் கலக்கமுற்றான்.

"கனிமரத்தை கம்பென்று சொல்ல மனம் வருமோ? கண்டு உண்டு. களிக்கின்ற மனம் உண்டு. பழிக்கின்ற மொழி வருமோ என் உதட்டில்?"

தோளில் தொட்டான். தொட்ட கரம் சற்று இறங்கியது தவழ்ந்து.

கரத்தை தடுக்கவில்லை அவள்! அவன் கருத்தை மட்டும் மறுத்துரைத்தாள்.

"காரியம் ஆவதற்கு ஆரியகூத்து ஆடுவீர்கள். உதடெல்லாம் பொய்!"

"நான் சொன்னால் நம்பமாட்டாய். நீயே கேட்டுப்பார் உன் இதழால்"

அவன் சொன்னதின் பொருளை அவள் உணர முன்னரே, அவளின் முகம் திருப்பி இதழ்களைத் தன் உதட்டால் எடுத்துக் கொண்டான்.

மறுப்பில்லை.

அவன் பின்தலை யில் தன் இரு கரங்களால் அழுத்திக்கொண்டாள். மேல் இதழ் பிரித்து அவன் உதட்டை விசாரித்தான்.

வரவேற்பு உண்டு என்று இதழ் ஏற்பு சாட்சி சொல்ல, அவன் கரம் எழுந்து மேலாடை திரை விலக்கியது.

அவள் இதழ்சிவப்பு அவன் உதட்டில் இடம்மாறியதோ என்று நினைக்கும் விதமாக அமுதுண்டு முடித்துவிட்டு,

சங்கு கழுத்தில் இறங்கிய உதடுகள் மெல்லத் தவழ்ந்து இரு மலைகளது இடையினிலே இறங்கி விஷமம் செய்ய,

நெருமூச்சு அவள் விட்டு, அவன் முதுகின் மத்தியிலே தன் இருகரமும் கோர்த்து இறுகணைத்தாள். இதழ் துடிக்க முகம் உயர்த்தி வான் பார்த்தாள்.

அங்கு நிலவிருந்தது. அவர்கள் நிலை இரசித்துக்கொண்டிருந்தது.

"சீ....போ......"

என்றாள் வெட்கத்தில் தனை மறந்து நிலவைப் பார்த்து.

பின் முகம் கவிழ்ந்து அவன் கழுத்தில் இதழ் பதித்தாள். மறு நொடியே அவன் விஷமம் தாங்காது கூச்சத்தால் உடல் நெளிந்து அவன் காதுமடல் பிடித்துத் திருகினாள்.

அவன் நிமிர்ந்து,

"என்ன?"

என்றான் கிறக்கத்தில் செருகிய விழிகளுடன்!

"காய்ந்த மாடு உதாரணம் சரிதான்" என்றாள் மோக நெருப்பை வளர்த்து விடும் வண்ணமாக குறும்புப் புன்னகையோடு.

"பிடிக்கவில்லையா?" என்றான்.

பதில் பேசாமல் இருந்தாள்.

"அப்படியானால் சரிதான்."

அவன் விலகுவது போல் நடித்தான்.

அவள் கரம்நீட்டி அவனை தன்னை நோக்கி இழுத்து

"கோபமா?" என்று கேட்டாள்.

"எனக்கு மட்டும்தான் தாகமா?" என்று அவன் கேட்டான்.

"இதற்குப் பதில் தேவையா?"

அவள் வினா தொடுத்தாள்.

"ஆம்!"

"சொல்லமாட்டேன்!"

"ஏன்?"

"பதில் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை!"

"வேறெப்படித் தெரியுமாம்?"

"பரிமாறும் விதத்தில் தெரியும்!"

"தெரியவில்லையே!"

"இப்போது தெரியும்!"

வண்டை மூடியது மலர். திண்டாடிப் போனது வண்டு.

பிரிவின் இடைவெளிதான் மலரின் நாணத்திரை விலக காரணம்.

பிரிந்திருந்த இத்தனை நாட்களும் தனித்திருந்த உடல் மாறியது நிறம். தவித்திருந்த மனம் தாகம் தீர தாவிக் கொண்ட இந்தப் பொழுதுதான் உள்ள சுகத்தை விட, இடையிலே பிரிந்திருந்து தவிப்பில் விழுந்திருந்து மீண்டும் சேரும் சுகம் கோடி பெறும்.

ஆலமரம், வளர்வதுபோல காதலின்பம் வளர்வதற்கு பிரிவொன்றே சிறந்த வழி.

மலரின் சிறைக்குள் மாட்டிக் கொண்ட வண்டின் மனம் தனக்குள்ளே மகிழ்ந்து நினைத்தது.

இதனைத்தான் 'நாலடியார்' என்னும் கடைச்சங்க காலத்து தமிழ் நூலில் ஒரு பாடல் விளக்கி நிற்கிறது. அந்தப் பாடல் இதுதான் :

*முயங்காக்கால் பாயும் பசலைமற்று ஊடி*
*உயங்காக்கால் உப்பின்றாம் காமம் - வயங்கு ஓதம்*
*நில்லாத் திரையலைக்கும் நீள்கழித் தன்சேர்ப்ப*
*புல்லாப் புலப்பதோர் ஆறு.*

-அதிகாரம் - 40, பாடல் 391.

-சுதாகர், ஹட்டன்.

✍ தன் இனத்தையே காட்டிக் கொடுப்பவனை என்னவென்று அழைப்பது?

-எம்.ஏ.எம்.இன்சாப், கல்முனை.

ஏகப்பிரதிநிதிகள் என்று கூறுபவர்களின் பார்வையில் ஜனநாயகம் பேசுபவர்கள், அதேபோல ஜனநாயகம் பேசுபவர்களின் பார்வையில் ஏகப்பிரதிநிதிகள் என்று அழைக்கிறார்கள். நீங்கள் எப்படி அழைக்கப் போகிறீர்கள்.

✍ சிந்தியா சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் ஜோக்ஸ் ஒன்று ப்ளீஸ்?

-ஆர்.வாகன், வவுனியா.

போனால் போகுதெண்டு ஒன்று சொல்கிறேன். தந்தையின் நரை முடியைப் பார்த்து மகன் கேட்டான்.

***மகன் :-*** ஏன் உங்களுக்கு முடி நரைக்கிறது.

***தந்தை :-*** உனது ஒவ்வொரு குழப்படிக்கு ஒவ்வொரு முடி எனக்கு நரைக்கும்.

***மகன் :-*** அப்படியா இப்போது புரிகிறது தாத்தாவுக்கு ஏன் இவ்வளவு நரை முடியென்று.



✍ எதிர்வரும் பதினேழாம் திகதி முதல் வேலையாக என்ன செய்வீர்?

-கு.இராகுலன், தெல்லிப்பளை.

"X" அதனை "✓"யான தாக்கிக் கொள்வதுதான்.

✍ ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் பாராளுமன்றத் தேர்தல் நடக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறதா?

-து.தில்லை நாதன், நெல்லையடி.

என்ன அவசரம். மூன்று மாதத்திற்கு இந்த வீணான கவலை உங்களுக்கு வேண்டாமே....

✍ இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் அமுலுக்கு வருமா அல்லது புதிய வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுமா?

-மு.பரஞ்சோதி, தென்னகும்பர.

பரஞ்சோதி அவர்களே, உங்கள் கேள்விக்கான விடை வாக்காளப் பெருமக்களின் தீர்ப்பில் இருக்கிறது.

✍ புலிகளின் வரி அறவீட்டை எதற்கு ஒப்பிடுவீர்?

-வே.தேவராசா, வவுனியா.

அது அலை....சில நேரத்தில் சுனாமி.

✍ தேர்தலுக்குப் பொருத்தமாக நான்கு வரியில் குட்டிக்கதை ப்ளீஸ்?

-ச.றஞ்சன், பம்பலப்பிட்டி.

அருவறுப்பான புன்னகை
இத்துப்போன வாக்குறுதி
வெறுத்துப் போச்சு நமக்கென்று
அழுத்திப் போடு புள்ளடி.

✍ ரணில் - மஹிந்த தேர்தலில் போட்டியிடுவது சரி. ஏனைய 11 பேரின் நோக்கம் என்ன?

-ஏ.எல்.எம். சமீன், மூதூர்.

தோல்வியைப் பணங் கொடுத்து வாங்குவதுதான்.

✍ ரைட் சகோதரர்கள் விமானத்தைக் கண்டு பிடித்திராவிட்டால் உலகின் கதி என்னவாகி இருக்கும்?

ப்ரியா, நாரஹேன்பிட்டி.

உங்களுக்கு ஒன்று தெரியுமா? ரைட் சகோதரர்கள் கண்டு பிடிப்பதற்கு 3 வருடங்களுக்கு முன் கோல்ற்மாட்டர் எனும் ஜேர்மனியர் விமானத்தை உருவாக்கியிருந்தார். மனிதன் பறக்கக் கூடாது, கடவுளின் சாபம் எனக் கூறி அப்போதைய மதகுருமார் அதனை எரித்துவிட்டனர். ஒருவேளை இது. நடக்காமல் இருந்திருந்தால் உலகம் தூரமாகியிருக்கும்.

✍ சிந்தியா கடல் கடந்து பயணம் செய்ததுண்டா?

-வாசுகி, பட்டிருப்பு.

### சிந்தியா பதில்கள்


இந்த வருடம் ஜுன் மாதம் நைனாதீவுக்குப் போய் வந்ததற்குப் பிறகு இன்னும் போகவில்லை.

✍ சச்சின் தொடர்ந்து சாதிப்பாரா?

-ஏ.எம்.சபீன், பேருவளை.

தன்னை விட உயரமாக இருந்தபோதே கிரிக்கெட் மட்டையை அடிக்க முற்பட்டதுதான் சச்சினின் பிஞ்சுக் கைகள். நமக்கெல்லாம் கிரிக்கெட் விளையாட்டு. சச்சினிக்கு அதுதான் சுவாசம்.

✍ குஷ்பு சுதாகரித்து பழைய நிலைக்கு வந்துவிட்டாரா?



பலாப்பழம் களவெடுத்தவன் சுள்ளி பொறுக்கினவனைக் கள்ளன் எண்டு பிடிச்சானாம். பாவம் குஷ்பு.

## உரிமை மடல்......
### 9ஆம் பக்கத் தொடர்ச்சி.....

அந்தத் தீர்வுத் திட்டம் பாராளுமன்ற விவாதத்திற்குக் கொண்டுவரப்பட்ட போது பிரதான எதிர்க்கட்சியோடு சேர்ந்து சுய லாப அரசியல் நடத்தி வந்த தமிழ் தலைமைகளும், புலிகளும் எதிர்த்திருந்தன.

இனப் பிரச்சினை தீர்விற்கான ஒரு ஆரம்பப் படியாக அன்று அதை அனைத்து தமிழர் தரப்பும் ஏற்றிருந்தால், இன்று எமது மக்களாகிய நீங்கள் அமைதியான ஒரு சூழலில் சுதந்திரப் பிரஜைகளாக இந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்!

**அன்பான எம் மக்களே!**

இதில் சாதித்தவர்கள் யார்?....

சாதிக்க எழுந்து நின்ற சக்திகளைத் தடுத்தவர்கள் யார்?.....

சாதிக்க எழுந்த எங்களது கரங்களை ஆதிக்கக் கரங்கள் அறுத்துப்போட நினைத்தன!

ஆனாலும் எமது மக்களின் துயரங்களுக்கு முடிவுரை எழுத எழுந்து நின்ற நாம், சாதிக்க எண்ணிய விடயங்களிலிருந்து இதுவரை பின்வாங்கி நின்றதில்லை!

விழ விழ எழுந்து, குருதி துடைத்து, இறுதிவரை எம் பயணத்தை உறுதியுடன் நடத்தி வருகின்றோம்! ஈபிடிபி. எதைச் சாதித்தது என்று எம்மைப் பார்த்துக் கேள்வி எழுப்பும் அவர்களிடம், சாதிக்க எழுந்த எங்களது முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு நின்றவர்கள் யார் என்று நான் கேட்கின்றேன்!

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை உடைத்துச் சிதைத்து....

அதன்பின் ஜனாதிபதி பிரேமதாசாவுடனான பேச்சுவார்த்தையை அவரைக் கொன்றொழித்ததன் மூலம் சிதறடித்து....

ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் தீர்வு யோசனையைப் புறம் தள்ளி..... தமிழ் பேசும் மக்களின் அமைதிக்கும், நிம்மதியான வாழ்வுக்கும், சுதந்திரமான இருப்புக்கும் புலிகள் தடையாக இருந்த காலம் இன்று மலையேறி வருகின்றது!

சர்வதேச சமூகம் மிக உன்னிப்பாக எமது தேசத்தின் நிகழ்வுகளைக் கவனித்து வருகின்ற சூழலில்.....

மக்களாகிய நீங்கள் விழிப்புற்று அரசியல் தீர்வு நோக்கிய பாதையை விருப்பமுடன் பின்பற்றி வருகின்ற சூழலில்....

புலிகளினதும் அவர்களது பங்காளிகளினதும் அரசியல் தீர்விற்கு எதிரான குழிபறிப்புகள் இனி சாத்தியமாகாது!

சர்வதேச சமூகத்தினதும் மக்களாகிய உங்களதும் ஆதரவோடு நாம் இனி வரும் காலங்களில் எமது தாயக தேசத்திற்கான சமாதான முன்னெடுப்பை நகர்த்தியே தீருவோம்!

ஆயுதங்கள் மீது மோகம் கொண்டு சமாதான முயற்சிகளுக்குத் தடையாக இருக்கும் புலிகளும் எமது சமாதான முன்னெடுப்பை ஏற்றுக்கொண்டு மக்கள் எவ்வழியோ தாமும் அவ்வழி என்று வரவேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் ஏற்பட்டே தீரும் என்பதில் மாற்றம் இல்லை!

அந்த நிர்ப்பந்தத்தைக் கொடுப்பதற்கு மக்களாகிய நீங்கள் தர்மத்தின் பக்கம்....

நியாயத்தின் பக்கம்....

அணிதிரண்டு அர்த்தமுள்ள ஒரு அரசியல் தீர்வை நோக்கி.....

எமது தாயக தேசத்தின் சுயாட்சி அதிகாரத்தை நோக்கி அணிதிரள வேண்டும் என ஈபிடிபி. யின் சார்பில் நான் அறைகூவல் விடுக்கின்றேன்!

அதற்காக ஈபிடிபி. யின் வழியை நீங்கள் பின்பற்றவேண்டும்! நாங்கள் அழிவை நோக்கி உங்களை அழைத்துச் செல்பவர்கள் அல்ல! எங்களது பயணத்தின் முடிவில் ஒரு சமாதான தேசம் உங்களுக்காகக் காத்திருக்கும்!

எமது பயணத்தின் பாதையில் இரு பக்கங்களிலும் பரவிக்கிடப்பவைகள் முட் புதர்களல்ல! அழகிய பூச்செடிகள்தான் எங்கள் பாதைகள் தோறும் வளர்ந்து நிற்கின்றன!

நாங்கள் சாதிப்போம் என்று கூறி, தங்களது பாதையில் உங்களை அழைத்துச் சென்றவர்கள் முடிவற்ற பயணத்தின் பாதைகளில் ரணங்களையும் பிணங்களையும் சந்திக்கும் அழிவுகளைத்தான் உங்களுக்குப் பரிசாகத் தந்தார்கள்! அவர்களது பயணத்தின் முடிவில் உங்களுக்காகக் காத்திருக்கப்போவது சமாதான தேசமல்ல! சாம்பல் மேடுதான் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்!

சாதிக்க எண்ணி உங்களை நாங்கள் அழைத்துச் செல்லும் பாதையில் நீங்கள் அழிவுகளைக் கண்டிருக்கின்றீர்களா?...

ரணங்களை சந்தித்திருக்கிறீர்களா?....

பிணங்களைக் கடந்திருக்கிறீர்களா?....

ஈபிடிபி. யின் பாதையில் இந்த அழிவுகள் இல்லை என்பதுதான் உண்மை!....

ஆகவேதான் நாங்கள் கூறும் பாதையில் நீங்கள் அச்சமின்றி நடக்கலாம் என்று நான் கூற விரும்புகிறேன்!

நிரந்தரத் தீர்வு நோக்கிய எமது பயணத்தில் நாங்கள் அழைத்துச் செல்லும் உங்களுக்கான பாதையில், உங்களது நாளாந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் நீங்கள் அறுவடை செய்ய முடியும்!

கடந்த காலங்களிலும் சரி, சமகாலத்திலும் சரி, நாம் உங்களது நாளாந்தப் பிரச்சினைகள் குறித்து சாதித்தவைகள் என்னவென்று மக்களாகிய உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்!

எங்களுடைய பணிமனைகளை நோக்கியும் நீங்கள் வந்திருக்கின்றீர்கள்! என்ன சாதித்தீர்கள் என ஈபிடிபி. யை பார்த்துக் கேட்கின்ற அவர்களது பணிமனைகளை நோக்கியும் நீங்கள் சென்றிருக்கின்றீர்கள்!

கப்பம் கட்ட மறுத்தவர்களும்...

வரி செலுத்த மறுத்தவர்களும்.....

பிள்ளைகளைப் போர்ப் பயிற்சிக்குக் காவு கொடுத்தவர்களும்....

உதடு திறந்து உண்மையைப் பேசியதால் 'காணாமல் போனவனின்' மனைவியும்தான் அவர்களைத் தேடிச் செல்கின்றார்கள்!

ஆனால் எங்களைத் தேடி மக்கள் ஏன் வருகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும்!

நிர்க்கதியான மக்கள் நிவாரணங்களுக்காகவும்...

வேலையற்றவர்கள் வேலை பெறுவதற்காகவும்....

இடிந்து போன கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்களை கட்டியெழுப்புவதற்காகவும்....

பாடசாலைகளை புனர்நிர்மாணம் செய்வதற்காகவும் தான் எங்களைத் தேடி மக்கள் வருகிறார்கள்!

கடந்த காலங்களிலும் வந்து நின்று வீரம் காட்டி விட்டு மக்களை கைவிட்டு ஓடிப்போனவர்கள்....

தங்களது பணிமனைகளை சித்திரவதைக் கூடங்களாகவே வைத்திருந்திருந்தார்கள்!

ஆனால் நாங்கள் எங்களது பணிமனைகளை மக்கள் குறை தீர்க்கும் சேவைக் கூடங்களாகவே வைத்திருக்கின்றோம்!

உயர் பாதுகாப்பு வலையத்தினுள் இருக்கும் மக்களின் காணிகளைச் சுவீகரிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்த போது அதைத் தடுத்து நிறுத்தி எமது தேசத்தின் - மக்களின் நிலங்களைக் காத்தவர்கள் நாங்கள்!

திருமலை மண் திட்டமிட்ட குடியேற்றங்களால் பறிபோய் காண்டிருந்த போது, தமிழ் பேசும் மக்களின் சனத்தொகை விகிதாசாரத்தைப் [illegible]காப்பதற்காக அங்கு இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கான தமிழ் குடியேற்றங்களை நிறுவியதன் மூலம் எமது மக்களின் தாயக நிலத்தைக் காத்தவர்கள் நாங்கள்!

இடம்பெயர்ந்த மக்களை எம்மால் முடிந்தளவு சாத்தியமான இடங்களில் மீள் குடியேற்றம் செய்தவர்கள் நாங்கள்!

யுத்தத்தினால் எமது மக்கள் சிதறுண்டு, எமது தாயக மண்ணை விட்டு புலம்பெயர்ந்து போயிருக்கும் நிலையில், குடிசன மதிப்பீடு நடத்துவதற்கு அரசாங்கம் முயன்றபோது அதைத் தடுத்து நிறுத்தியதன் மூலம் வடக்கு கிழக்கின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் விகிதாசார எண்ணிக்கையை பாதுகாத்தவர்கள் நாங்கள்!

அதன் மூலம் பிரதேச அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்படுவதை தடுத்தவர்கள் நாங்கள்!

குடிசன மதிப்பீட்டைத் தடுத்து அதை இடைநிறுத்தியதன் மூலம் பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்ட இன ரீதியான விகிதாசார எண்ணிக்கையைப் பாதுகாத்தவர்கள் நாங்கள்!

யாழ். மண்ணில் 'சூரியக்கதிர்' படை நகர்வை அடுத்துக் காணாமற்போன எமது உறவுகளுக்காக காணாமற் போனோர் பெற்றோர் பாதுகாப்புச் சங்கம் அமைத்து அதை சர்வதேச உலகுக்கு அம்பலப்படுத்தியதன் மூலம் எமது மக்கள் தொடர்ந்தும் காணமற்போவதைத் தடுத்து நிறுத்தியவர்கள் நாங்கள்!

பாராளுமன்றத்திற்கு ஊடாகவும் காணாமற்போனவர்கள் விடயத்தை அம்பலப்படுத்தியவர்கள் நாங்கள்!

வடக்கின் சாரதாம்பாள், கிருசாந்தி தொடக்கம் கிழக்கின் கோணேஸ்வரி வரைக்கும் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட கோர நிகழ்வுகளை அம்பலப்படுத்தியவர்கள் நாங்கள்!

எரித்துச் சாம்பலாக்கப்பட்ட தெற்காசியாவின் சிறந்த நூலகம் எனக் கருதப்படும் யாழ். நூலகத்தை மீளக்கட்டியமைப்பதற்கு பெரும் பங்காற்றியவர்கள் நாங்கள்!

புலிகளின் பேராசிரியர் கணேசலிங்கத்தினால் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்ட 13 வயது சிறுமி மீதான வக்கிரச் செயலை அம்பலப்படுத்தியவர்கள் நாங்கள்!...

யாழ். மிருசுவில் படுகொலை தொடக்கம் கிழக்கின் முஸ்லிம், சிங்கள கிராமங்கள் மீதான புலிகளின் படுகொலை வரைக்கும் எதிர்த்துக் குரல் கொடுத்தவர்கள் நாங்கள்!

1990ஆம் ஆண்டு புலிகளால் துரத்தியடிக்கப்பட்டு சொந்த நிலம் இழந்து வந்த வடக்கு முஸ்லிம்களில் ஒரு பகுதியினரை புத்தளத்தில் குடியேற்றம் அமைத்து பாதுகாத்தவர்கள் நாங்கள்!

கல்விக்கூடங்களை நிறுவியவர்கள் நாங்கள்!....

கணனிப்பூங்காவை அறிமுகப்படுத்தியவர்கள் நாங்கள்!....

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் என்ற வகையில் அவைகளை பின்தங்கிய பிரதேசங்கள் என பாகுபாடின்றி பிரகடனம் செய்ய வைத்ததன் மூலம் பல்கலைக்கழகத்திற்கான வெட்டுப்புள்ளியை குறைத்தவர்கள் நாங்கள்!....

பாடசாலைகளை அபிவிருத்தி செய்தவர்கள் நாங்கள்!....

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர நியமனமாக்கியவர்கள் நாங்கள்! ஆசிரியர் பற்றாக்குறையைக் கணிசமான அளவில் நிவர்த்தி செய்தவர்கள் நாங்கள்!

உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தலை நடத்த வைத்ததன் மூலம் உள்ளூர் சிவில் நிர்வாக அமைப்புகளை சரிவர இயங்கவைத்து மக்களின் குறைகளைத் தீர்த்தவர்கள் நாங்கள்!

இலங்கைப் பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் இதுவரை ஒரு வெள்ளிக்காசுகூட நன்கொடையாகப் பெற்றிருக்க முடியாத கிராமங்களின் வளர்ச்சிக்கு அள்ளிக்கொடுத்தவர்கள் நாங்கள்!

நகரங்களிலிருந்து கிராமங்களை நோக்கி எமது தேசத்தின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்போடு உழைத்தவர்கள் நாங்கள்!

அனைத்திற்கும் மேலாக மக்களை நட்டாற்றில் கைவிட்டு ஓடுவதும்..... தேர்தல் காலங்களில் மட்டும் திரும்பி வந்து பெட்டிக்கடை போடுவதும்.... அறிக்கை விட்டு காலம் தள்ளுவதும் என்றில்லாமல்.....

மக்களைக் கைவிட்டு ஓடாமல் நிரந்தரமாகவே மக்கள் மத்தியில் என்றும் இருப்பவர்கள் நாங்கள்!

இஸ்ரவேல் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து பாலஸ்தீன மக்களுக்காகப் போராடிய சையத் என்ற கவிஞன் எழுதியது போல்

**நாங்கள் இருப்போம்!**
**எங்கள் நிலமெல்லாம்**
**எங்கள் மரமெல்லாம்**
**நாங்கள் இருப்போம்!**
**புளிக்க வைக்கும் நொதியம் போல**
**எமது குறிக்கோள் கனியும் வரைக்கும்**
**நாங்கள் இருப்போம்!**
**விறைத்த நரம்புடன்**
**இதயத்திலும் நரம்புகளிலும்**
**தாகம் தணிக்க நாம் மலைகளைப் பிழிவோம்**
**எங்கள் புழுதியைக் குடித்து பசியினைத் தணிப்போம்!**

**நாங்கள் நகரவே மாட்டோம்!**

ஆம்! இனியும் தொடரும்!.....சாதிக்க எழுந்து நிற்கும் ஈபிடிபி. யினராகிய எங்களது மக்கள் பணியின் மகத்தான சேவைகள்!

**நேசத்திற்குரிய எம் தேசத்து மக்களே!**

இவைகள்தான் எமது தாயக தேசத்தின் நிரந்தரத் தீர்வு நோக்கிய எங்களது பயணத்தின் பாதையில் மக்களாகிய நீங்கள் பெற்ற அறுவடைகள்!

நாம் முன்னெடுத்துச் செல்லும் மூன்று கட்டத் திட்டத்தின் முடிவில் எமது மக்களுக்கான நிரந்தரத் தீர்வு நிச்சயம் கிடைக்கும்! எமது மக்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கான எமது தாயக தேசத்திற்கான சுயாட்சி அதிகாரம் நிச்சயம் கிடைக்கும்!

நிரந்தரத் தீர்வை அடையும் எமது நேர்த்தியான.... நடைமுறைச் சாத்தியமான பாதையில் மக்களாகிய உங்களது நாளாந்த குறைகள் தீர்க்கப்படும்!

உங்களது உடனடிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்!

கால்களை இழந்து பயணத்தைத் தொடர முடியாது!

அதே போல் நாளாந்தப் பிரச்சினைகளால் நலிந்துபோயிருக்கும் எமது தேசம் இறுதித் தீர்வு நோக்கி உறுதியுடன் நடக்க முடியாது!

எமது தாயக தேசத்தின் இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்பியபடி ஒரு நிரந்தரத் தீர்வு நோக்கி நகர்வதற்கு அணி திரண்டு வருமாறு ஈபிடிபி உங்களை அறைகூவி அழைக்கின்றது!

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களை அழைத்துக்கொண்டு நான் யாழ். மண்ணுக்கு வந்தபோது, நீங்கள் அளித்திருந்த வரவேற்புக் குறித்து நான் மனம் மகிழ்கின்றேன்!

அணிதிரண்டு வந்து உங்களது உணர்வுகளை வெளிப்படுத்தியமைக்கு எனது பாராட்டுக்கள்!

**என் தாயக தேசமெங்கும் மக்களாகிய உங்களைத் தேடிவந்து உங்களோடு கைகுலுக்கவே நான் பெரிதும் விரும்புகிறேன்! ஆனாலும் சூழ்நிலை என்னைத் தடுக்கின்றது! காலம் கனியும்!**

**அப்போது உங்களைத் தேடி நேரில் வருவேன்!**

வெல்வது நிச்சயம் எனத் தீர்மானிக்கப்பட்டுவிட்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களின் வெற்றிலைச் சின்னத்திற்கு நீங்கள் வாக்களித்து எமது மூன்று கட்டத் திட்டத்தை நடைமுறைப்படுத்த மக்களாகிய நீங்கள் துணிச்சலோடு முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்!

**சாதிக்க எழுந்து நிற்கும் எங்களது நம்பிக்கையின் கால்களை**
**ஆதிக்கக் கரங்களால் அறுத்துவிட முடியாது!**
**எம் இனிய மக்களே!**

ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுக்கு இருக்கக்கூடிய ஜனநாயக உரிமைகளில் வாக்களிக்கும் சுதந்திரம் என்பதும் பிரதானமான ஒன்றாகும்!

இதன் ஊடாகவே உங்களுக்கு விருப்பமானவர்களை உங்கள் பிரதி நிதிகளாகவும் நாட்டின் அதிகாரமிக்க தலைவர்களாகவும் தெரிவு செய்யும் உரிமையை மக்களாகிய நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள்!

இந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்களாகிய நீங்கள் என்ன செய்யவேண்டும் என மக்களுக்கு வழி காட்ட வேண்டியது பொறுப்புள்ள மக்கள் தலைமையின் மகத்தான கடமை!

ஆகவேதான் மூன்று கட்டத் திட்டத்தை எமது கோரிக்கையாக வைத்து மகிந்த ராஜபக்ஷ அவர்களை ஈபிடிபி. ஆதரித்து நிற்கின்றது.

புலிகளும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிப்பதில்லையென இன்று அறிவித்துள்ளார்கள்!

அவர்களுடைய வழிமுறை இதுதான்! ஏனென்றால் அவர்களுக்கு சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்த தெரியாது!

ஆனால் மக்களாகிய நீங்கள் தேர்தலில் வாக்களிப்பதா? இல்லையா? என்பது உங்களது சுய விருப்பமாகவும் சொந்தத் தீர்மானமாகவும் இருக்க வேண்டும்!

ஒரு புறத்தில் மக்கள் தங்களது முடிவுகளை தாங்களே எடுக்கட்டும் என்று கூறிக்[illegible]ாண்டு, மறு புறத்தில் அனாமதேயப் படைகளின் பெயரால் அச்சுறுத்தல், து[illegible]ரசுரங்கள் விடுத்துக்கொண்டிருக்கும் செயலானது புலிகள் அறிவித்துள்ள முடிவு கு[illegible] சந்தேகங்களையே ஏற்படுத்தியுள்ளன.

இது குறித்து அடுத்த உரிமை மடலில் மக்களாகிய உங்களோடு நான் மனந்திறந்து பேச எண்ணியுள்ளேன்!

மறுபடியும் உரிமை மடலில் சந்திப்போம்!

*மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!*
*சொல்வதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்!*
*உறவுக்குக் கைகொடுப்போம்! உரிமைக்குக் குரல் கொடுப்போம்!*
*திட்டங்கள் எங்களது!..... தீர்மானம் உங்களது!.....*
*தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!...*
*என்றும் நாம் மக்களுக்காக!.....*

*பிரியமுடன்*
*செயலாளர் நாயகம்*

**தோழர் டக்ளஸ் தேவானந்தா...**

நன்றி :- இதயவீணை

# வீர மரியாதை

அன்னையின் மடியில் — 09 10 — 1970



மக்கள் மனதில் — 13 11 — 2005

## தோழர் இராசநாயகம்

### வெள்ளைப்போடியன் இராசநாயகம்

(ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர், வெகுஜன தொடர்பு அதிகாரி)

13.11.2005 அன்று பாசிசப் புலிகளால் கோழைத்தனமாகப் படுகொலை செய்யப்பட்ட எமது அன்புத் தோழன் இராசநாயகத்திற்கு எம் வீர மரியாதைகள்

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 2, கூட்டெண் - 8

2,11, 20, 29 போன்ற திகதிகளில் பிறந்து, இவர்களது திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டெண் 8 வருமேயானால் சந்திரன், சனி போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். சந்திரன் அடிக்கடி இடம் மாறிச் செயல்படுவர். ஆனால் சனியோ நீண்ட நாட்கள் இருந்து நல்லதையும் கெட்டதையும் செய்பவர்.

இந்த எண்களில் பிறப்பவர்களில் சிலர் உயரமாகவும் சிலர் குள்ளமாகவும் இருப்பர். இளமையிலேயே இவர்கள் காதல் வயப்பட்டு விடுவதால் வேதனைக்குள்ளாகின்றனர். மிகுந்த வசீகரமான தோற்றமும், உடல் வலிமையும் கொண்ட இவர்கள், திடீரென்று மன பீதியால் தன்னம்பிக்கையிழந்து உளறுவர். கனவு வருவதால், பில்லி, சூனியம் போன்றவற்றால் இருக்குமோ என்று மனம் கலங்குவர். ஆனால் பெயர் நன்கு அமைந்துவிட்டால் மேற்குறிப்பிட்ட கெட்ட பலன்கள் இல்லாது மென்மேலும் முன்னேறுவர்.

பொதுவாக இவர்கள் எல்லோரிடமும் அன்பாகப் பழகுவர். ஆனால் பிடிவாத குணம் காணப்படும். கையில் காசு உள்ளபோது தாராளமாகச் செலவு செய்வர். ஆனால் பணம் இல்லாதபோது, பைத்தியம் பிடித்தவர்போல் காணப்படுவர். இவர்கள் மற்றவர்களை மகிழ்விக்கும் கலையில் ஈடுபட்டு அதில் பெரும் புகழைப் பெறுவர். அதோடு இரும்பு சம்பந்தமான தொழில், மெக்கானிசம், காண்ட்ராக்ட் மூலமும் பெரும் செல்வம் சேர்ப்பர். இவர்களுக்கு வாகன யோகம் உண்டு. சிலர் கடல் கடந்த பயணங்கள் மூலம் லாபம் பெறுவர்.

இவர்களது மனம் கடல் அலைபோன்று காணப்படும். எதிலும் சந்தேகம் ஏற்படுவது மட்டுமல்லாது தான் செய்த காரியங்களையே சரியில்லை என்று நினைத்துக் குழம்புவர். பிறரைச் சிறிதும் நம்பாதவர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்தவர்கள் எப்பொழுதும் வெற்றி வீரராகக் காட்சியளிப்பர். கல்வியில் ஆர்வம் கொண்ட இவர்கள் தனது நினைவாற்றல் குறைவின் காரணமாக முக்கியமான கட்டங்களில் தோல்வியுறுவர்.

ஆனால் தொழில்நுட்பக் கல்வியில் சிறந்து விளங்குவர். இவர்கள் மனதிற்குப் பிடித்துவிட்டால் கெட்டதையும் நல்லதாக வாதாடுவர். கேள்வி கேட்பதில் வல்லவர். எதையும் உடனே ஒத்துக் கொள்ளமாட்டார். கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள் கோவிலில் போய் வணங்குவதை விட தன் மனதால் எங்கும் கடவுளைத் தியானிக்கலாம் என்ற கொள்கை கொண்டவர்கள். ஆனால் பெரியோர்களின் வேண்டுதலுக்கு இணங்க சிறிது மனம் மாறி, கோவிலுக்குச் செல்வர்.

இவர்களுடைய வேலையைத் தீவிரமாகச் செய்து கொண்டிருப்பர். அப்படிச் செய்து கொண்டிருக்கும் நேரத்தில் ஒரு சிறு தவறு ஏற்பட்டால் போதும். உடனே ஒரே குழப்பமாகிவிடும். இவர்கள் எவ்வளவு திடமாகச் செயல்பட்டார்களோ, அவ்வளவுக்கும் திடசித்தம் குறைந்து விரக்தியடைவர். ஆனால் பெயர் நன்கு அமைந்துவிட்டால் இந்தக் குழப்பம் மாறி வெற்றி வீரராகக் காட்சியளிப்பர். தனியாகச் செல்கின்ற போது, கற்பனை செய்து கொண்டும் எதிர்காலத் திட்டத்தை வகுத்துக் கொண்டும் செல்வர். சில நேரங்களில் நண்பர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது கேட்டுக் கொண்டேயிருப்பர். ஆனால் இவர்களது மனம் எங்கோ போய்க்கொண்டே இருக்கும். இதனால் நண்பர்கள் இவர்களுக்கு, "ஆப்சண்டு மைன்டு மேன்" என்று பெயர் சூட்டி விடுவர். இதனால் இதைப் போக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

பெரியோர்களை மதித்து, மரியாதையும் கொண்டு பழகும் இவர்கள் சில நேரங்களில் முன் கோபத்தால் அத்துமீறி நடந்துவிடுவர். ஆனால் நடந்தபின் வருந்துவர். நன்கு பெயரை அமைத்துக் கொண்டால் வாழ்க்கை சீரும் சிறப்புமாக அமையும்.

**தொழில் :**

இவர்களுக்குப் பகட்டு சம்பந்தமான தொழில் அனைத்தும் சிறந்தவையே. வாகனம், மெட்டல், மெக்கானிசம், காண்ட்ராக்ட், கமிசன், எதையும் இயக்குதல் போன்ற தொழிலாலும் கலை சம்பந்தமான தொழிலாலும் பணம் ஈட்டுவர்.

**நோய்**

இவர்களுக்கு முதுகுவலி, இடுப்பு வலி, தலை வலி, மனக் குழப்பம், வயிற்றுக்கோளாறு, உடலுறவு சம்பந்தமான வியாதிகள் வர வாய்ப்பிருப்பதால் கீழே குறிப்பிட்ட பொருத்தமான எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளவும்.

**பெயர் அமைக்கும் முறை**

சந்திரனும், சனியும் ஆதிக்கம் கொண்ட இவர்களுக்குச் சுக்கிரனாகிய 6, 24, 33, 42, 51, 69 போன்ற எண்களிலும், புதனாகிய 14, 23, 32, 41, 50, 59 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளுவது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண் - 7,5,6.
யோகமான திகதிகள் - 7, 6, 25, 5, 14, 23; 6, 15, 24.
யோகமான மோதிரக்கல் - வைடூரியம், முத்து, சந்திரகாந்தக் கல்.
யோகமான நிறம் - பச்சை, கருநீலம், மஞ்சள்.
ஆகாத நிறம் - கறுப்பு, சிவப்பு.
ஆகாத திகதிகள் - 9, 18, 27.

*அடுத்த வாரம் பிறப்பெண் 2, கூட்டெண் 9 பற்றிப் பார்ப்போம்*

# மோசஸ் (கி.மு. 13ஆம் நூற்றாண்டு)

## உலகை வியக்க வைத்தவர்கள்

**தலை**சிறந்த ஹீப்ரு அருட்போதகர் மோசஸைப் போல் வரலாற்றில் வேறெந்த மனிதரும் உலகளாவிய போற்றுதலைப் பெற்றதில்லை எனில் அது மிகையன்று. மேலும் அவருடைய புகழும், அவரை மதித்துப் போற்றும் மக்களின் எண்ணிக்கையும் காலந்தோறும் படிப்படியாகப் பெருகி வந்திருக்கின்றன. எகிப்திலிருந்து யூதர்கள் பெருமளவில் வெளியேறிச் செல்வதற்குக் காரணமாக இருந்ததாகக் கருதப்படும் எகிப்திய பாரோ அரசன் இரண்டாம் ராம்சே கி.மு. 1237இல் இறந்ததாக பொதுவாகக்



கருதப்படுகிறது. எனவே, மோசஸ் 13ஆம் நூற்றாண்டில் உயிர் வாழ்ந்திருக்கலாம். பழைய ஏற்பாட்டில் எகிப்திலிருந்து யூதர் வெளியேற்றம் பற்றிக் கூறும் பகுதியில் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதைப் போன்று, மொசஸின் வாழ்நாளிலேயே அவருடைய கொள்கைகளைக் கணிசமான எண்ணிக்கையிலான ஹீப்ருக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், ஐந்து நூற்றாண்டுகளுக்குள்ளதாகவே யூத மக்கள் அனைவரும் மோசஸைப் பூசிக்கலாயினர். கி.பி. 500வாக்கில் அவருடைய புகழும், மதிப்பும் கிறிஸ்தவ சமயத்தோடு சேர்ந்து, ஐரோப்பா முழுவதும் பரவின. இதற்கு ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, நபிகள் நாயகம், மோசசை உண்மையான தீர்க்கதரிசி என்று ஏற்றுக் கொண்டார். இஸ்லாம் பரவியதும், எகிப்து உள்ளடங்கலாக முஸ்லிம் உலகம் முழுவதிலும் மோசஸ் போற்றுதற்குரியவரானார். மோசஸ் வாழ்ந்த 32 நூற்றாண்டுகளுக்குப் பிறகு இன்று யூதர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய அனைவரும் மோசஸைப் போற்றுகிறார்கள். உலோகாயதவாதிகள் கூட அவரை மதிக்கிறார்கள். நவீன செய்தித் தொடர்புச் சாதனங்களின் துணையினால், கடந்த காலத்தைவிட இன்று மோசஸ் அதிகமான எண்ணிக்கையினரால் போற்றப்படுகின்றார்.

மோசஸ் இத்தனை பெரும்புகழ் வாய்ந்தவராக இருந்தும் அவருடைய வாழ்க்கை பற்றிய உண்மைத் தகவல்கள் மிக அரிதாகக் கிடைக்கின்றன. மோசஸ் ஓர் எகிப்தியர் என்றுகூடச் சிலர் ஊகித்தனர். இதற்கு அவருடைய பெயர் ஹீப்ரு மரபில் இல்லாமல் எகிப்திய மரபில் இருப்பதை அவர்கள் ஆதாரமாகக் கூறினர். (மோசஸ் என்றால் 'குழந்தை' அல்லது 'மகன்' என்று பொருள். எகிப்திய பாரோக்கள் பலருடைய பெயர்களில் இந்தச் சொல் இணைந்திருக்கின்றது.) ஆனால், இந்த ஊகங்கள் அனைத்தையும் பெரும்பாலான அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மோசஸைப் பற்றி பழைய ஏற்பாட்டில் உள்ள கதைகள், முக நிலையில் ஏற்றுக் கொள்ளத்தக்கவை இல்லை. ஏனெனில் அவற்றில் பெரும்பாலானவை இயல்பு கடந்த அற்புதங்களாக அமைந்துள்ளன. மோசஸ் காட்டை எரித்தழித்தல், தன் கைத்தடியைப் பாம்பாக மாற்றுதல் போன்ற நிகழ்ச்சிகள் நம்ப முடியாத தெய்வீகச் செயல்களாக உள்ளன. யூதர்கள் எகிப்திலிருந்து வெளியேறிய நிகழ்ச்சி நடந்தபோது மோசஸ் ஏறத்தாழ எண்பது வயதானவராக இருந்தார். எனவே அந்த முதிய வயதில் அந்த 40 ஆண்டு காலப் பயணத்தில் யூதர்களை மோசஸ் நடத்திச் சென்றார் எனக் கூறுவது நம்பத்தக்கதாக இல்லை. இது போன்ற புராணக்க தைக் குவியல்களுக்குள் மோசஸின் வரலாறு புதைந்து போவதற்கு முன்னர் அவரைப் பற்றிய உண்மை வரலாற்றை அறிந்து கொள்ளவே நாம் விரும்புகிறோம்.

பத்து கற்பாளங்கள், செங்கடலைத் தாண்டுதல் போன்ற விவிலியக் கதைகளுக்கு நம்பகமான விளக்கங்களை அளிப்பதற்குப் பலர் முயன்றுள்ளனர். மோசஸைப் பற்றி பழைய ஏற்பாட்டில் காணப்படும் கதைகள் புராணக் கதைகளாகும். இவை வேறு புராணங்களில் காணப்படும் கதைகளுடன் ஒத்திருக்கின்றன. உதாரணமாக, மோசஸ் நாணற் செடிகளைப் பற்றிய கதையானது, கி.மு. 2360 முதல் கி.மு. 2305வரை ஆட்சி புரிந்த அக்காட் சார்கோன் என்ற அரசன் பற்றிய பாபிலோனியக் கதையைப் பெரிதும் ஒத்திருக்கின்றது.

மோசஸ் முக்கியமாக மூன்று பெருஞ் சாதனைகளைப் புரிந்ததாகக் கூறுவர்.

வியப்புக்கள் தொடரும்....

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

*வணக்கமுங்கோ!*

**நீ**ங்கள் என்னதான் என்மேல கண்டனத்தை டசின் கணக்கிலக் கொட்டினாலும் அம்புகளை என்னை நோக்கி வீசினாலும் கண்ணுக்கு முன்னாலை நடக்கிற அல்லது நடக்கப்போகிற நம்பிக்கை துரோகத்தைப் பற்றி நான் கண்டு கொள்ளாமல் கண்ணையும் காதையும் மூடிக்கொண்டு இருக்கப் போறதில்லையுங்கோ.

அப்புடி என்ன நம்பிக்கைத் துரோகம், யாருக்கு நடக்கப்போகுதெண்டு நீங்கள் கேக்கிறது எனக்குக் கேக்குதுங்கோ. நான் என்ன ஊர் உலகத்திலை நடக்காததையோ சொல்லப்போறன். நடக்கிறதத் தானே சொல்லுவன். அப்புடிப்போல இப்ப நான் சொல்லப்போறதும் கதையில்லையுங்கோ நிஜம்.

"அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்" எண்டுவினம். அது பிரேமச்சந்திரனின்ர விசயத்தில பலிச்சிடும் போலத் தானுங்கோ இருக்கு. உந்த எம்.பி.ப் பதவிக்காக அதுதானுங்கோ, அஞ்சே வருஷத்தாலே டாட்டா காட்டிப் போட்டு அடுத்தவரை நாடிப் போகிற எம்.பி.ப் பதவியில ஒருக்காத்தன்னும் சுய முயற்சியில இருந்து போட வேணுமெண்டு தவமிருக்குமாப்போல தன்னந் தனியா இருந்தாருங்கோ. ம்.....ஹூம்...அவர் நினைச்சது கடைசி வரையும் நடக்காமல் போகவும், எங்கட முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்தன சொன்னது போல பேயோடையும் கூட்டுச்சேரத் தயாராகி, எம்.பி.ப்பதவிக்காக கூட்டமைப்போடை கூட்டுச்சேர்ந்தாருங்கோ. பிறகு "நக்குண்டார் நாவிழந்தார்" எண்டு சொல்லுமாப் போலை எம்.பி.ப்பதவி தந்திச்சினம் எண்டதுக்காக அவையின்ர வாசிப்புக் கெல்லாம் வளைஞ்சு நெளிஞ்சு வண்டியையும் வச்சுக்கொண்டு ஆடினாருங்கோ.

நான் அப்பவே நினைச்சனான். இவர் என்னதான் கூத்துக் காட்டினாலும் உவர் முன்னம் ஈ.பி.ஆர்.எல்.எப்.பில பொறுப்பில இருக்கேக்க புலிப் பொடியளைக் கண்டால் கண்டம் துண்டமா வெட்டித் தலையைத் துண்டாடிப்போடுவார். அதாலையே இவரின்ர அந்த நாளைய நண்பர்கள் இப்பவும் இவரை மண்டையன் குழுவின்ர த்லைவர் எண்டு செல்லமா சொல்லிக் கொண்டி ருக்கினம். அதுமட்டுமில்லாம புலிகளுக்கு எதிரா இவர் நடத்தின நெருப்பு தினம் இருக்கெல்லோ, அதுதான் உவருக்கு உந்த போராட்ட வரலாற்றிலேயே பேர் வாங்கிக் கொடுத்தது. உவரின்ர, உந்த மாதிரி உஷார் மடத்தனமான செயற்பாடுகளின்ர விளைவு தானுங்கோ பின்னாளில ஈ.பி.ஆர்.எல்.எப்.பையே புலிகள் பேன்ட் பண்ணவும் பிரதான காரணமாக இருந்துச்சுது எண்டு சொல்லுவினம். உப்பிடியெல்லாம் புலிகளின் வயித்தில புளியைக் கரைச்சுக் கொண்டு திரிஞ்ச மனிசன், இண்டைக்கு அவைதான் தமிழ் மக்களின்ர ஏகப்பிரதிநிதிகள் எண்டு சொல்லிக் கொண்டு, பழைய நண்பர்களை ஏதோ பயங்கரவாதிகளைப் பார்க்குமாப் போல பார்த்துக்கொண்டு திரியுறாருங்கோ. உண்மையிலேயே உவரின்ர பின்னணியை அவை மறந்திட்டினமோ எண்டு நானும் குழம்பிப்போனது என்னவோ உண்மைதானுங்கோ. நான் நினைச்சது சரிதானுங்கோ. உவர் உள்ளுக்குள்ளால அரசியல் பண்ணி, யானை வந்தால் புலியை விட்டுப் போட்டு தாவிப் போயிடலாமெண்டு இவர் போட்ட தப்புக் கணக்கு பிழைச்சுப் போட்டுதுங்கோ. ஆள் வசமா அகப்பட்டுப் போட்டார். இப்ப என்ன தெரியுமோ, புலிகள் தங்கட இணையத்தளத்திலேயே போட்டிட்டினம். இவர் டபுள் கேம் காட்டிறார் எண்டும், இவருக்கு வெகு விரைவில எமகண்டம் இருக்கெண்டும் தெரிவிச்சுப்போட்டினம். அதுமட்டுமில்லாம, ஒரு கிரனைட்டையும் அடிச்சு வோர்னிங் குடுத்திருக்கினம். தலைவரைக் கொன்றவங்களையே பின்னால் தலைவர்களாகக் கொண்டாடினது, முன்னாள் தலைமைக்குச் செய்த துரோகந்தானே யெண்டு இப்ப தலையில அடிச்சுக் கொண்டு திரியிறாராம். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" எண்டு வினம். அதேபோல உவர் முன்னாளில பலபேரிண்ட தலைகளை உருட்டினதின்ர விளைவு இப்ப இவரின்ர தலை உருளப் பாக்குதுங்கோ. அடிபட்ட பாம்பு சும்மா விடுமோ? இவர் எங்க தப்பி ஓடிடுவாரோ எண்டு சந்தேகப்பட்டு ஒரு எம்.பிப் பதவியைத் தூக்கிப் போட்டு தங்கட கண்காணிப்பிலேயே வச்சுக்கொண்டிச் சினம். அவையின்ர நெளிவு சுளிவுகளைப் புரிஞ்சு கொள்ளாமல் இவர் போய் எம்.பிப் பதவியைக் கவ்விக் கொண்டு நிண்டார். இப்ப நிண்டு முழிக்கிறார். என்னதான் இருந்தாலும் கடைசி நேரத்தில அண்டை நாட்டுக்குப் போயிட்டால் அவை பார்த்துக் கொள்ளுவினம் எண்டு தான் கொஞ்சம் ஆறுதலா இருக்க ட்ரை பண்ணுறாராம். எனக்கென்ன கவலை தெரியுமோ, உந்த இக்கட்டான நேரத்தில ஒரு ஐடியாவைத் தன்னும் ஆளுக்கு என்னால கொடுக்க முடியாம இருக்கெண்டது தான். ஐ ஏம் வெறி சொரிங்கோ.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(17.11.2005 தொடங்கி 23.11.2005 வரை)


## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

விருச்சிகம் - சூரியன், புதன். தனு - வெள்ளி. மீனம் - இராகு. மேடம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி- கேது. துலாம் - வியாழன்.
சந்திரன் இடபம், மிதுனம், கர்க்கடகம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.




**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும், பண வரவு, தூர இடப் பயணம், அந்நியர் சகவாசம், உறவினர் உதவி, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகளால் நன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.



**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் பயம், வீண் மனஸ்தாபம், கடன் பயம், மனக்குறை நீங்கும், குடும்பக் கஷ்டம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், புதிய கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.




**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் மகிழ்ச்சி, பணக் கஷ்டம், வெளியார் தொல்லை, உறவினர் உதவி, குடும்பப் பொறுப்பு, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.



**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் சிக்கல், பல்சாரார் பகை, கடின உழைப்பு, பணத் தடை, உறவினர் தொல்லை, மனப் பயம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.




**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.) தொழில் அலைச்சல், கடன் பயம், வீண்குறை கேட்டல், வெளியார் தொல்லை, உறவினர் உதவி, குடும்பப் பாரம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.




**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் மேன்மை, பலவிதப் பேறு, பண வரவு, அன்னியர் சகவாசம், மனக்குறை நீங்கும், குடும்பப் பயம், உறவினர் உதவி, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.




**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் கஷ்டம், மன அமைதி குன்றும், பெரியோர் சகாயம், உயர்ந்த நட்பு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.




**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.) தொழில் அலைச்சல், பணக் கஷ்டம், மனக் கவலை, குடும்பப் பொறுப்பு, செலவு மிகுதி, உறவினர் உதவி, உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் பயம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.




**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், பண வரவு, உயர்ந்த நட்பு, குடும்ப மகிழ்ச்சி, தூர இடப் பயணம், உத்தியோக மேன்மை, வெளியிடப் பயணம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.



**மகரம் :** (உத்தராடத்துப் முன் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் பயம், கடின உழைப்பு, வெளியிட வாசம், மனக் கலக்கம், பணச் செலவு, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.



**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை, பலவிதப் பேறு, கடன் தொல்லை நீங்கும், குடும்பப் பொறுப்பு, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.



**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் நன்மை, கடின உழைப்பு, பண விரயம், வெளியார் உதவி, பெரியோர் சகாயம், குடும்ப நன்மை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்

மாலை 6.30 தொடக்கம் இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

கிழக்கு மாகாணம் 107.9, 104.6

வட மாகாணம் 92.2

கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு

இதய வீணை

த.பெ. இல - 1665

கொழும்பு.

தொலை பேசி :- 0773114208

Web - www. tirradio.com

E-Mail : idayaveenai@hotmail.com

info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும் இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது ஐரோப்பிய நாடுகளில் வாழும் எமது தாயக உறவுகளுக்காக செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

Satellite : HotBird - 6

Location : 13° East

Frequency : 10971MHz

Polarity : Horizontal

Symbol rate : 27.500 Msb

FEC : 3/4

Transponder : 133


## அதிக செலவில்...



திரைப்படங்களில் அதிக செலவு செய்வது ஹாலிவுட்டில் வேதோ சர்க்கரை சாப்பிடுவது போன்றது. அந்த வகையில் இங்குள்ள கார்டூன் உருவம் ரோட் ரன்னர் என்று அனைத்து மக்களாலும் செல்லமாக அழைக்கப்படும் கேலி கார்டூன் உருவமாகும். இது உலக சாதனைக்குரிய உருவம் ஏனெனில் இதற்கு அசைவுகளை வழங்க 118080 உருவ அசைவுகளை (ஷெட்ஸ்) வழங்கிருக்கிறார்கள். வழமையில் கார்டூன்களுக்கு 500 - 1000 ஷெட்ஸ்களையே வழங்குவார்கள். இதையெல்லாம் முறியடித்துள்ள இந்த உருவம் உலக சாதனைக்குரியது தானே.

## இணையத்தளம்



இணையத்தளத்தை இன்று பலர் பல விதத் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொண்டு இருக்கும் போது இணையத்தை யார் கூடுதலாகப் பயன்படுத்துகிறார்கள் என்று கூடப் போட்டிகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் இணையத்தளத்தை அதிகமாகப் பார்க்கும் பார்வையாளர்கள் இங்கிலாந்தில் தான் இருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள். செக்கனுக்கு 550GB வேகத்தில் இயங்கும் சேர்வர்கள் இங்கு பயன்படுத்தப்படுகிறதாம்.

## டெஸ்ட் சாதனை



டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் தமது திறமைகளை கிரிக்கெட் வீரர்கள் வெளிக்காட்டத் தவறுவதில்லை. அந்த வகையில் இங்குள்ள வரை அனைத்து கிரிகெட் ரசிகர் களுக்கும் தெரிந்திருக்கும். இவர் மேற்கிந்திய தீவுகள் அணியைச் சேர்ந்த பிரைன் லாரா இவர் இப்போது டெஸ்ட் போட்டிகளில் மட்டும் தான் விளையோடுவேன் என்று முடிவெடுத்துள்ளார். இவர் 2004ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் 4 சிக்ஸர் மற்றும் 43 பௌண்டரிகள் அடங்கலாக 375 ஓட்டங்களைப் பெற்றுக் கொண் டார். இவரின் டெஸ்ட் சாதனை இன்னும் முறியடிக்கப்பட வில்லை. என்பதும் குறிப்பிடத் தக்கது.

## ஆயுதக் கடத்தல்

ஈராக்கை அமெரிக்கப் படைகள் ஆக்கிரமித்து சதாம் ஹுசைனை கைது செய்து விட்டாலும் அமெரிக்கப் படைகள் இன்னும் சதாம் ஹு சைனின் படையினரால் பல இடையூறுகளை எதிர்நோக்கி வருவது தெரிந்ததே! அந்த வகையில் அமெரிக்கா இராணுவத்தினரை அச்சுறுத்தி வந்த ஈராக்கின் பாலுஜா நகரத்தில் ஆயுதங்களைக் கடத்திச் சென்ற நபரை அமெரிக்க இராணுவத்தினர் கைது செய்து கொண்டு செல்லும் காட்சியே இது.






## அதிக வாக்கு



## மீண்டும் வீரப்பன்

இன்னுமொரு வீரப்பன் என்று தலைப்பை பார்த்து திகைத்து விட்டீர்களா? உண்மைதான். உண்மையில் இவன் ஒரு கொள்ளை கூட்டத்தின் தலைவன். வடநாட்டு வீரப்பன் என்று இந்திய மக்களால் அழைக்கப்படும் இவன் சாம்பல் பள்ளத்தாக்கில் இடம் பெறும் கொலை, கொள்ளை மற்றும் கற்பழிப்புகளுக்கு பொறுப்பாளியாக இருந்து வந்துள்ளான். இவனைப் பிடிப்பதற்கு பொலிசார் தனி படை அமைத்து தேடுதல் வேட்டை நடத்திவந்தபோதும் இவன் பிடிபடவேயில்லை. வீரப்பனை சுட்டுக் கொன்ற வேகத்துடன் களமிறங்கிய விசேட அதிரடிப் படையினர் இவனையும் கடந்த 10.10.2005 அன்று சுட்டுக் கொன்றனர். இதனால் பொலிசாரின் 30 ஆண்டு காலமான தேடுதல் வேட்டை முடிவுக்கு வந்தது. கொள்ளை, கொலை செய்பவர்களின் கடைசி நிலைமை இதுதானுங்கோ....

## 2 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

வல்வெட்டித்துறை, சமரபாகு அன்னை இல்லத்தைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்து சூரிச்சை வசிப்பிடமாகவும் கொண்ட வரதராஜன் - அஜந்தா தம்பதியரின் செல்வப் புதல்வன் வனோஜ் தனது இரண்டாவது பிறந்த நாளை 20.11.2005 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா - அம்மா, அப்பப்பா - அப்பம்மா, அம்மப்பா - அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், அன்ரிமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார், பாட்டிமார், பாட்டன்மார் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல அம்பாள் அருளால் பல செல்வங்களும் பெற்று சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.



**வ. வனோஜ்**

**2005.11.20**

தகவல் :- இளங்கோ, 'அன்னை இல்லம்', சமரபாகு வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.